# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2051 ஆடி / ஜூலை 2020 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


## தேசத்தின் குரல்

**சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு2020-**

## சூழ்ந்து வரும் சூழற்கேடு !

## காக்குமா இந்தியக் கவசம் ?




வறுமை ஒழிய வேண்டும் ,வளம் கொழிக்க வேண்டும் . வேலைவாய்ப்புகள் உருவாக வேண்டும் ,மென்மேலும் பெருக வேண்டும் என்றால் விரைவாகத் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் .தொழிலுக்குரிய மூலப்பொருட்களைச் சுரங்கம்

## உள்ளே...


1. தேசத்தின் குரல் -1
2. **இடஒதுக்கீடு வழக்கில் நல்ல தீர்ப்பு–11**
3. **எங்கே அந்தப் பசுந்துளிர்கள்?-17**
4. **கடிவாளம்- ஆவணப்படம்–23**
5. இலங்கை நாடாளுமன்றத் தேர்தல்: **ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு வேண்டுகோள்-24**
6. "சண்டையிடுவதை நிறுத்துங்கள், வாக்கெடுப்பைத் தொடங்குங்கள்" சர்வதேசப் பிரச்சார இயக்கம்-29
7. கியூபாவின் புரட்சிப் பெண்கள்(5)-35
8. நக்வெய்ன் மார்க்சியப் **பள்ளியில் (9)-45**
9. டாலருக்கு வந்த வாழ்வு (4)-54
10. அது வேறு மழைக்காலம்-64



**பதிவு எண்** :R.Dis. No. 1964/2014

தோண்டுதல் போன்ற வழிகளில் இயற்கையிலிருந்து பிரித்தெடுத்துப் பதனிட வேண்டும் .அல்லது பணப்பயிர் செய்வது போன்ற வழிகளில் நிலத்திலிருந்து விளைவிக்க வேண்டும் .பொருளாக்க ஆற்றல்களுள் தலைமையாற்றலாகிய உழைப்பாளர்களின் தேவைகளை நிறைவு செய்யவும் இந்தப் பொருளாக்கப் பெருக்கம்தான் வழி' .உற்பத்திப் பெருக்கம் 'என்ற பெயரிலான பொருளாக்கப் பெருக்கம் மற்றும் சேவைப் பெருக்கம் !வளர்ச்சி என்பது பற்றிய மாந்தர்களின் புரிதல் இப்படித்தான் இருந்தது .இப்போதும் பெருமளவுக்கு இப்படித்தான் உள்ளது .ஈட்டத்தில்) ஈட்டம் = இலாபம் (நாட்டம் கொண்ட முதலிய அமைப்பில் மட்டுமல்ல .மக்கள் நலன் பேணும் குமுகிய அமைப்பிலும் கூட வரம்பற்ற பொருளாக்கப் பெருக்கம்தான் வளர்ச்சிக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டது .

## பொருளாக்கப் பெருக்கத்தின் தீத்தாக்கம்

கட்டற்ற பொருளாக்கப் பெருக்கம் இயற்கையில் ஏற்படுத்தக் கூடிய தீத்தாக்கம் பற்றிய பரவலான கவலையே ஒப்பளவில் அண்மைக் காலத்தியதுதான் .சுரங்கம் தோண்டுவதற்காக மலைகளை வெட்டிப் பிளப்பது ,வேதித் தொழில்கள் வெளியிடும் கழிவுகளாலும் வாயுக்களாலும் நிலத்தையும் சுற்றுச் சூழலையும் மாசுபடுத்துவது ,வேளாண் விளைச்சலை விரைவுபடுத்துவதற்காக நிலத்தின் உயிர்ச் சத்தைக் கொள்ளையிடுவது ,மாந்தத் தேவைகளுக்காக ஏரிகளைத் தூர்ப்பது ,ஆறுகளில் நஞ்சோடச் செய்வது ,கடல்களில் மாசு கலப்பது ,காற்றையும் மூச்சிரைக்கச் செய்வது ,புலனாகாத கதிரியக்கக் குப்பைகள் கொட்டுவது …இவ்வாறெல்லாம் இயற்கையைச் சிதைப்பது மாந்த நலனின் பெயராலேயே மாந்தர் வாழும் சுற்றுச் சூழலைப் பாழாக்குவதாகும் .நாட்டில் வளர்ச்சி வேண்டும் என்பதற்காக இயற்கைச் சூழலைக் கெடுப்பது வீட்டில் வெளிச்சம் வேண்டும் என்பதற்காகக் கூரைக்குத் தீவைப்பது போன்றதாகும் .

நீங்கள் வாழ்வது குடிசையிலானாலும் மாளிகையிலானாலும் அந்தக் குடிசைக்கும் மாளிகைக்கும் அடிமனையாக இருப்பது எது ?இயற்கைதானே ?நீர் ,நிலம் ,காற்று இல்லாத உலகில் நீங்கள் வீடுகட்டி வாழ முடியாதல்லவா ?இந்த எளிய ஏரணம் நம் மூளையில் உறைப்பதற்கு இவ்வளவு காலமாயிற்றா ?என்று வியப்பாய் உள்ளது.

## தொழில் வளர்ச்சியின் முன்கதைச் சுருக்கம்

தமிழகம் உட்பட இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு நாடுகளும் பிரித்தானியப் பேரரசின்) மற்றும் பிற ஐரோப்பியப் பேரரசுகளின் (காலனியாதிக்கத்திற்கு உட்படுமுன் அல்லது இந்தியா என்ற அரசுக் கட்டமைப்பாக ஒன்றிணைக்கப்படுமுன் நேர்நிறையான பொருளில் ஓரளவு

தொழில் வளர்ச்சி அடைந்திருந்தன .வேளாண்மை உள்ளிட்ட இந்தத் தொழில் வளர்ச்சி பெருமளவுக்கு இயற்கையோடு இயைந்த ஒன்றாக இருந்தது .சுற்றுச்சூழலுக்கு அதனால் பெருங்கேடு ஏதும் விளைந்ததாகத் தெரியவில்லை .இருப்பினும் அக்காலத்திய உலகப் பொருளியலில் ஒன்றுபட்ட இந்தியாவின் பங்கு 23 விழுக்காடாக இருந்தது .பிரிட்டன் வெளியேறிய காலத்தில் இது வெறும் 4 - 3 விழுக்காடாகச் சரிந்து விட்டது .பிரிட்டனின் தொழிற்புரட்சித் தேவைகளுக்காக இந்தியாவின் தொழில் வளர்ச்சி அந்த அளவுக்குக் கெடுக்கப்பட்டிருந்தது .அயல் பேரரசின் பொருளியல் ,அரசியல் தேவைகளுக்காக ஏற்பட்ட தொழில் வளர்ச்சியும் அந்த வளர்ச்சியின் நிழலில் துளிர்த்த சுதேசத் தொழில்களும் நாட்டின் சுற்றுச் சூழலுக்குப் பெருங்கேடு செய்யுமளவுக்குச் சென்றிடவில்லை .ஆனால் சர்வோதயம் உள்ளிட்ட காந்தியப் பசுமை இயக்கத்தில் சூழலியல் கவலைகள் மறைந்திருந்தன.

பிரிட்டனிடமிருந்து1947 இல் இந்தியா விடுமை பெற்ற பின் விரைவான தொழில் வளர்ச்சிக்கென ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன .நிலக்கரி ,எண்ணை ,மாழை) உலோகம் ( உள்ளிட்ட அடிப்படைத் தொழில்களுக்கு சோவியத்து உள்ளிட்ட அயல் அரசுகளின் உதவி பெறப்பட்டது .ஆயுதம் செய்யவும் நல்ல காகிதம் செய்யவும் ,இரும்பைக் காய்ச்சி உருக்கவும் இயந்திரங்கள் வகுக்கவும் ...பற்பல தொழில்கள் எழுந்தன .இந்தியப் பொருளியலின் ஓங்குயர் கொடுமுடிகள் பற்றிப் பேசினார் பண்டித நேரு .எரிபொருள் தேவைகளுக்காக அணுவிசை ஆக்க முயற்சிகளும் தொடங்கப்பெற்றன .தொழில் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க வேளாண் துறையில் பொல்லாத பசுமைப் புரட்சியும் பூத்தது .இந்த வளர்ச்சியெல்லாம் சுற்றுச் சூழலில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு போதிய அளவுக்கு வளரவில்லை.

## அரசமைப்புச் சட்டமும் சூழலியலும்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மூன்றாம் பகுதியான அடிப்படை உரிமைகளில் ஒன்றாகச் சூழலியல் உரிமை இடம்பெற வில்லை .உயிர்வாழும் உரிமைக்கும் ஆள்வகைத் தன்னுரிமைக்கும் )வாழ்வுரிமைக்கு (உறுதியளிக்கும்21 ஆம் உறுப்பில் சூழல் காப்புரிமையும் அடங்குவதாக விரித்து விளக்கம் தர மட்டுமே வாய்ப்பிருந்தது .நான்காம் பகுதியான அரசுக் கொள்கையின் திசைநெறிக் கொள்கைகளிலும் கூட முதலில் சுற்றுச் சூழல் பற்றிய குறிப்பே இல்லை .இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மூல வரைவில் சூழலியல் சார்ந்த உரிமையோ நலனோ எதுவும் குறிக்கப்பட்டதாகத் தெரியவில்லை .முதன் முதலில் நெருக்கடிநிலைக் காலத்திய42 ஆம் திருத்தத்தில்தான் சூழலியல் தொடர்பான உறுப்பு48 A சேர்க்கப்பட்டது .நான்காம் பகுதியில் அரசுக் கொள்கையின் திசைநெறிக்

கொள்கைகளில் ஒன்றாக" சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் ,நாட்டின் காடுகளையும் கானுயிரையும் காக்கவும் அரசு பாடுபடும் "என்று சேர்த்துக் கொள்ளப்பட்டது .இதே 42ஆம் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் ஊடாகப் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட' IV-A. அடிப்படைக் கடமைகள் 'என்ற பகுதியில்" காடுகள் ,ஏரிகள் ,ஆறுகள் ,கானுயிர் உள்ளிட்ட இயற்கைச் சூழலைக் காப்பதும் மேம்படுத்துவதும் ,உயிர்வாழ்வனவற்றிடம் கருணை கொள்வதும் "இந்தியக் குடிமக்களுக்குரிய கடமைகளாக விதிக்கப்பட்டன) உறுப்பு51 A).

ஆனால் முதலியத்தின் ஈட்ட வெறியும் சுற்றுச் சூழல் பற்றிய விழிப்பின்மையும் சேர்ந்து இந்தியாவில் பல வகையிலும் இயற்கையைச் சிதைக்கும் அறிகுறிகள் அப்போதே வெளிப்பட்டன .இந்த அழிவுப் போக்குக்கு எதிரான குரல்கள் ஒலித்தன என்றாலும் வலுப்பெறாதிருந்தன .உலகு தழுவிய அளவில் இடம்பெற்ற இரு போக்குகள் :ஒன்று ,விரைவான தொழில்துறைப் பெருக்கத்தினால் காற்றுவெளியில் பசுங்குடில் வாயுக்களின் உமிழ்வு பெருகியதும் ,மற்றொன்று இதற்கு எதிராகப் பசுமை இயக்கங்களின் வளர்ச்சியும் ஆகிய இவ்விரு போக்குகளும் இந்தத் துணைக்கண்டத்திலும் ஓரளவு எதிரடித்தன .புவி வெப்பமாதல் ,காலநிலை மாற்றம் பற்றிய எச்சரிக்கையும் வந்து சேர்ந்தது .

## போபால் படுகொலை

இந்தப் பகைப்புலத்தில்தான் 1984 திசம்பர் 3-2 இரவில் மத்தியப் பிரதேசம் போபாலில் அந்தக் கொடிய துயரம் நிகழ்ந்தது .அது விபத்தென்றது அதிகாரம் .இல்லை .படுகொலை என்றது சூழலியலின் சீற்றக் குரல் .பன்னாட்டுப் பெருங்குழுமத்தின் ஈட்ட நோக்கு இழைத்த படுகொலை!

யூனியன் கார்பைடு தொழிலகத்திலிருந்து மெதில் ஐசோ சயனைடு என்ற நச்சு வாயு வெளியேறியதால் பல்லாயிரம் உயிர்கள் மடிந்தன .இலட்சக்கணக்கானோர் மீளா நோயுற்றனர்.

## சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம்

இவ்வளவு பெரிய துயரத்தின் எதிரொலியாகத் துணைக்கண்டமெங்கும் பரவிய விழிப்புதான்1986 ஆம் ஆண்டு சுற்றுச் சூழல்) பாதுகாப்பு (சட்டம் பிறக்க முதன்மைக் காரணமாயிற்று .இதுதான் இந்தியாவில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான முதல் சட்டம் – முன்பே கானுயிர் பாதுகாப்புச் சட்டம் ,(1972) நீர்நிலைச் சட்டம் ,(1974) காற்று மாசுத் தடுப்புச் சட்டம் (1981) ஆகியவை இருப்பினும்1986 ஆம் ஆண்டுச் சட்டம்தான் முழுமையான சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டமாக அமைந்தது .இது ஓட்டைகள் மலிந்த சட்டமாக இருப்பினும் முழுமையான

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தேவைப்படுவதன் முதல் குமுக அறிந்தேற்பாக அமைந்தது .இது தவிர 2002ஆம் ஆண்டு இயற்றப்பட்ட உயிரியல் பன்மையச் சட்டமும் உள்ளது .இந்திய அரசில் சுற்றுச்சூழல் ,வனங்கள் ,காலநிலை மாறுதல் துறை என்ற ஓர் அமைச்சகமே உள்ளது . சுற்றுச்சூழல் சட்ட நெறிகள் செயலாவதற்கான பொறுப்பு நடுவண் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துக்குள்ளது .சுற்றுச்சூழல் தகவல் மையம் என்ற அமைப்பும் இயங்கி வருகிறது .

## சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு

தனியாட்களோ குழுமங்களோ எந்த ஒரு தொழில் தொடங்குவதாக இருந்தாலும் அதனால் சுற்றுச்சூழலுக்கும் மாந்தர்களுக்கும் ஏற்படக் கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டியே மதிப்பாய்வு செய்வது ,அதனடிப்படையில் மட்டுமே தொழில் தொடங்குவதை ஏற்பது அல்லது மறுப்பதற்கான வழிமுறைக்குத்தான் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு என்று பெயர்.

1986ஆம் ஆண்டு செயலுக்கு வந்த சுற்றுச்சூழல்) பாதுகாப்பு (சட்டத்தின் அடிப்படையில் 1994 சனவரி27 ஆம் நாள் வெளியிடப்பட்ட குறிப்பாணையின்படி ,சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு அறிவிக்கை சட்டப்படிக் கட்டாயமாக்கப்பட்டது. அடுத்து2006 ஆம் ஆண்டு இதில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. 2006ஆம் ஆண்டு அறிவிக்கையில் மேலும் சில திருத்தங்கள் செய்து 2020 மார்ச் 23ஆம் நாள் நடுவணரசு ஒரு வரைவு அறிவிக்கையை அணியமாக்கி ஏப்ரல் 1 ஆம் நாள் அரசிதழில் வெளியிட்டது.

## புதிய வரைவு அறிவிக்கை

முதலில் இந்தப் புதிய வரைவு அறிவிக்கை கொரோனா முடக்கக் காலத்தில் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் இணையதளத்தில் மட்டும் வெளியிடப்பட்டு 2020 ,மே12 க்குள் மக்கள் கருத்துக் கூறுமாறு கேட்கப்பட்டது. தொலைக்காட்சிகளிலோ ஏடுகளிலோ இதுகுறித்துச் செய்திகளோ விவாதங்களோ இடம் பெறவில்லை .கொரோனா நெருக்கடியாலும் முழுமுடக்கத்தாலும் வாதாடவோ போராடவோ முடியாத சூழலைப் பயன்படுத்தி மோதி ஆட்சி சுற்றுச்சூழலுக்கு எதிரான தன் வஞ்சக நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சியே இது .

அறுபது நாட்களுக்குள் மக்களும் மாநில அரசுகளும் கருத்துத் தெரிவிக்கலாம் என்று நடுவணரசின் சுற்றுச் சூழல் அமைச்சகம் கூறியது. கொரோனா பெருந்தொற்றைப் பயன்படுத்தி அவசர அவசரமாக மோதி அரசு சட்டத் திருத்தம் செய்ய முயல்வதாக சூழலியலர் குற்றஞ்சாட்டிய பின்னர் ஜூன் 30 வரை கால நீட்டிப்பு தரப்பட்டது. உச்ச நீதிமன்றம் தலையிட்டு கால அவகாசத்தை ஆகஸ்டு 13 வரை நீட்டியுள்ளனர். ஏன் இத்துணை அவசரம் என்ற

வினாவையும் உச்ச நீதிமன்ற நீதியர் கேட்டுள்ளனர். மேலும் கால நீட்டிப்பு பெறும் முயற்சியில் சூழலியலரும் அதைத் தடுக்கும் முயற்சியில் இந்திய அரசும் ஈடுபட்டுள்ளன.

**எதிர்ப்பியக்கம்**

சூழலியல் இயக்கங்களும் இடது கட்சிகளும் குடியாட்சிய அமைப்புகளும் பிற மக்களியக்கங்களும் விழிப்போடிருந்து சுற்றுச்சூழல் மதிப்பாய்வு-2020 வரைவை எதிர்த்து ஓங்கிக் குரல் கொடுத்து வருகின்றன. குமுக ஊடகங்களில் முனைப்பான பரப்புரை இயக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது .கையொப்ப இயக்கங்கள் ,இணையவழிப் போராட்டங்கள் ,மின்னஞ்சல் விண்ணப்பங்கள் என்று பல வகையிலும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு) 2020-EIA 2020) வரைவுக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது .இந்திய அரசின் எதிர்வினை என்ன தெரியுமா ?இந்த வரைவுக்கு எதிராகப் பேசியும் எழுதியும் வந்த வலைத்தளங்களைத் தடை செய்ததுதான் ! கருத்துக் கேட்பார்களாம் !கருத்துச் சொன்னால் தடுப்பார்களாம் !

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு என்ற வழிமுறை1960 களிலேயே மேலைநாடுகளுக்கு வந்து விட்டது .சற்றொப்ப இருபதாண்டு கழித்தே இந்தியாவில் இது செயலுக்கு வரலாயிற்று . பொதுவாகச் சொன்னால் ,சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு என்பதைப் பெருங்குழுமங்கள் ஒரு தொல்லையாகவும் இடையூறாகவுமே பார்க்கின்றன .இது அவர்களுக்குத் தேவையற்ற தலையிடிதான் !வரி ஏய்ப்பு போல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நெறிகள் ஏய்ப்பு என்பதே வாடிக்கையாக உள்ளது .அரசும் அதிகாரிகளும் பெரும்பாலும் பெருங்குழுமங்களின் கைக்கருவிகளாகவே செயல்படுவதும் இந்திய ஒட்டுறவு முதலியத்தில்) crony capitalism) எதிர்பார்க்கக் கூடிய ஒன்றுதான் .மோதியையும் அம்பானியையும் பிரிக்கும் அளவுக்கு சூழலியல் வலிமை கொண்டதா என்ன?

**என்ன பயன்?**

அப்படியானால் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்ட நெறிகளால் என்ன பயன் ?சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வால் என்ன பயன் ?இவை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான போராட்டத்தில் மக்கள் கையில் அற வலிமை கொண்ட கோட்பாட்டுக் கருவிகளாகப் பயன்படுகின்றன .இயற்கை சிதைக்கப்படுவதை எதிர்த்துப் போராட மக்களுக்கு விழிப்பூட்டும் சூழலியல் ஆர்வலர்கள் இந்தச் சட்டநெறிகளை ,குறிப்பாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு வழிமுறையைச் சிறப்பாகக் கைக்கொண்டு வருவதற்கு பசுமைத் தீர்ப்பாயங்களிலும் நீதிமன்றங்களிலும் நடந்து வரும் வழக்குகளே சான்று .தமிழ்நாடு இதற்குச் சரியான முற்காட்டாக அமைந்துள்ளது .

தமிழ்நாட்டு மக்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான போராட்டத்தில் உயிரீகம் செய்து பெற்ற ஒரு வெற்றி ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டதாகும். கூடங்குளம் அணுவுலைக்கு எதிரான நீண்ட போராட்டம் அதன் நேரடி நோக்கத்தில் வெற்றி பெறாத போதும் இந்தியாவெங்கும் விரைந்து ஏராளமான அணுவுலைகள் அமைக்கும் அரசுத் திட்டத்துக்கு வேகத்தடையாக அமைந்தது. போடிமெட்டில் நியூட்ரினோ, சேலம் எட்டுவழிச்சாலை போன்ற திட்டங்களையும் அனைத்து வகையிலும் வலிமை பொருந்திய அரசுகளால் சட்டுபுட்டென்று நிறைவேற்ற முடியவில்லை. இந்தப் போராட்டங்களில் மக்கள் பங்கேற்புக்குத் துணையாக சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டநெறிகளும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வும் அவற்றின் அடிப்படையிலான நீதிமன்ற வழக்குகளும் உதவின. இவ்வகையில் பூவுலகின் நண்பர்கள், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ ஆகியோரின் பங்களிப்பை அறிந்தேற்றுப் போற்ற வேண்டும்.

தமிழகத்தை வஞ்சிக்க முல்லைப்பெரியாற்றின் குறுக்கே புதிய அணை கட்டும் கேரளத்தின் முயற்சிக்கும், தமிழகத்தின் காவிரியுரிமையை மேலும் பறிக்கும் வகையில் மேக்க தாட்டுவில் புதிய அணைகட்டும் கர்நாடகத்தின் முயற்சிக்கும் அவ்வப்போது தடைபோடுவதிலும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு வழிமுறை நமக்கு உதவியுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்ட நெறிகளை மேலும் கடுமையாக்க வேண்டும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வை மக்கள் நலனும் இயற்கை நலனும் கருதி மேலும் செம்மை செய்ய வேண்டும் என்று சூழலியல் அமைப்புகள் கோரிவந்த நிலையில் இந்திய அரசின் சிந்தனையும் செயலும் நேரெதிர்த் திசையில் சென்றன.

### பச்சை வேட்டை

1990களில் தொடங்கிய புதுத் தாராளிய முதலியத்தின் கட்டற்ற சுரண்டல் வேட்டைதான் 2004இல் மன்மோகன் சிங் ஆட்சியில் தண்டகாரண்யப் பழங்குடிகள் மீதான பச்சை வேட்டைக்கு வழிகோலிற்று. இது பழங்குடி மக்கள் மீதும் இயற்கையன்னை மீதும் நடத்தப்பட்ட மூர்க்கத்தனமான கொடுவேட்டை. தங்கள் உயிரையும் வனத்தையும் இயற்கைச் சூழலையும் பாதுகாத்துக் கொள்வதற்கான அம்மக்களின் வீரப் போராட்டம் இன்றளவும் தொடர்கிறது.

இத்துணைக் காலமும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டமும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வும் சற்றே இடையூறாக இருப்பதை ஆளும் வகுப்பும் அதன் அரசும் வெறுத்தன.

இந்த விளையாட்டின் விதிகளைத் திருத்தி அவற்றை ஒன்றுமில்லாமலாக்க ஒரு வாய்ப்புக்காகக் காத்திருந்தன. அப்படியொரு வாய்ப்பாக நரேந்திர மோதி அரசுக்கு கொரோனா பெருந்தொற்று அமைந்து விட்டது.

## பாசிசத்தின் வசந்த காலம்

பாசிசத்துக்கு வசந்த காலமாக வாய்த்த கொரோனாவைப் பயன்படுத்தி தொழிலாளர் நலச் சட்டங்கள் திருத்தப்படுவது போல் சூழல்நலச் சட்டங்களும் திருத்தப்படுகின்றன என்பதை எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.

கேட்டிலும் ஒரு நன்மை என்பது போல் உலக அரங்கில் கொரோனாவின் சூழலியல் தாக்கம் பற்றிப் பேசப்பட்டு வந்தது .கரியமில வாயு உள்ளிட்ட பசுங்குடில் வாயுக்களின் உமிழ்வு குறைந்து காற்று மாசு குறைந்து விட்டது ,நீலவானத்தில் வானூர்திகளுக்கு மாறாகப் பறவைகள் சிறகடிக்கின்றன ,தொலைவிலிருந்து இமயமலையைப் பார்க்க முடிகிறது .புவி வெப்பமாதலைக் கட்டுப்படுத்தி உலகம் அழியாமல் காத்து விடலாம் என்ற நம்பிக்கை பிறக்கிறது என்றெல்லாம் சூழலியலர் மகிழ்ந்தனர் .அப்போதும் ஓரச்சம் இருந்தது ,கொரோனா போன பின் முடக்கம் நீங்கிப் பொருளியல் வாழ்வு திறக்கப்படும் போது ,இழப்பைச் சரிக்கட்டி ஈட்டம் பார்க்கும் வெறியுடன் ஆலைச் சக்கரங்களும் ஊர்திச் சக்கரங்களும் சுழலும் போது சூழல் நலன் வன்மத்துடன் பலியிடப்படும் என்பதே அவ்வச்சம்.

ஆனால் இந்திய வலதுசாரிகள் அது வரை காத்திருக்க அணியமாய் இல்லை .அவர்கள் வேட்டையைத் தொடங்கி விட்டார்கள் .இந்திய அரசு வெளியிட்டுள்ள” சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு அறிவிக்கை நெறிகள் “2020 ,என்ற புதிய வரைவின் பொருள் இதுவே .

இப்போதுள்ள2006 ஆம் ஆண்டு அறிவிக்கையில் சில பிற்போக்கான திருத்தங்களையும் , புதிய நெறிகளையும் சேர்த்து இந்தப் புதிய அறிவிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது .புதிய அறிவிக்கை செயலுக்கு வருமானால் ,சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு அறிக்கை கொடுக்காமலும் , மக்கள் கருத்துக் கேட்காமலும் புதிய திட்டங்கள் செயல்படலாம் .இதே வழியில் பழைய திட்டங்களை விரிவாக்கவும் செய்யலாம் .இரண்டாவதாக 70 ,மீட்டர் வரையிலும் சாலையை அகலப்படுத்தும் விரிவாக்கத் திட்டங்கள் ,நீராதாரக் கட்டமைப்புகள் போன்ற 14 வகைத் திட்டங்களுக்கு இனி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு அறிக்கை முன்வைக்கவோ ,சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் முன்னிசைவு பெறவோ தேவை இல்லை .நாட்டுப் பாதுகாப்புக்கு இன்றியமையாதவை ,தேசிய முகன்மை வாய்ந்தவை என்று இந்திய அரசு அறிவிக்கும் எந்தக் கட்டமைப்புக்கும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு அறிக்கை வைக்கத் தேவை இல்லை .

சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் முன் அனுமதிக்காகக் காத்திருக்கவும் தேவை இல்லை. அவற்றில் மக்கள் கருத்துக் கேட்பும் நடக்காது.

மேலும் ,சிறப்புப் பொருளியல் மண்டலங்கள் ,ஏற்றுமதி மண்டலங்கள் ,தோல் தொழில் மண்டலங்கள் ,கடலோரத் தொழில் மண்டலங்கள் ஆகியவற்றில் புதிய கட்டுமானங்களுக்கோ , பழைய கட்டுமானங்களின் விரிவாக்கத்திற்கோ சுற்றுச்சூழல் அனுமதி தேவையில்லையாம் !ஒரு வினவற்குழு அமைக்கப்பட்டு ,அது கேட்டால் மட்டும் கருத்துக் கூறலாமாம் !மக்களோ சூழலியலரோ தாமாகக் கருத்துக் கூற உரிமை இருக்காது,

இந்தப் புதிய அறிவிக்கையைப் பயன்படுத்தி சேலம்-சென்னை எட்டுவழிச்சாலை , முல்லைப் பெரியாற்றில் புதிய அணை ,மேகேதாட்டுவில் காவிரியின் குறுக்கே புதிய அணை , போடிமெட்டில் நியூட்ரினோ ,கடலோரமெங்கும் அனல்மின் நிலையங்கள் ,சாகர் மாலா , பாதுகாப்புத் தளவாடத் தொழில் வலையம் ,காவிரித் தீரத்தில் மீத்தேன் ,கடலூரில் வேதித் தொழிற்பூங்கா போன்ற பல திட்டங்களைத் தங்குதடையின்றி நிறைவேற்றிக் கொள்ள இயலும் . இது தமிழர் நலனுக்குக் கேடு என்பதற்கு விளக்கம் தேவை இல்லை .

### மேற்குத் தொடர்ச்சி மலைக்கு ஆபத்து

ஆனால் இதையும் தாண்டி இந்தியத் துணைக்கண்டமெங்கும் பல பேரழிவுத் திட்டங்களுக்கு வழிதிறப்பதாக இஃதமையும் .தென்னிந்தியாவின் அமேசான் என்று சூழலியலர் போற்றிடும் மேற்குத் தொடர்ச்சி மலை ஏற்கெனவே பல்வேறு ஆபத்துகளாலும் சூழப்பட்டுள்ளது. கொரோனா கிருமிகள் நுரையீரலை அழிப்பது போல் இந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு-2020 வரைவு சட்டமானால் மேற்குத் தொடர்ச்சிமலையை அரித்தெடுத்து விடும். பிரேசிலின் அதிபர் பொல்சனாரோ அமேசான் திருடன் என்று அழைக்கப்படுவது போல் நரேந்திர மோதி மேற்குத் தொடர்ச்சி மலைக் கள்வனாக அறியப்படுவார்.

சூழற்கேடுகள் யாவும் தனித்து ஒரே ஒரு தேசத்துக்கோ ஒரே ஒரு நாட்டுக்கோ மட்டுமின்றி புவிக் கோளத்துக்கே ,மாந்தக் குலத்திற்கே அழிவுண்டாக்கக் கூடியவை .ஆனால் இந்த அழிவைத் தடுக்க ஒவ்வொரு தேசத்தும் இறைமை தேவை .இயற்கை மீதும் சுற்றுச்சூழல் மீதும் இறைமை தேவை .இயற்கையைப் பன்னாட்டுப் பெருங்குழுமங்கள் சூறையாடுவதைத் தடுக்கச் சட்டமியற்றும் இறைமை தேவை .

இயற்கைக்கும் குமுகத்துக்கும் பகையான ஆற்றல்கள் -- சுற்றுச்சூழல் மீது தாக்குதல் தொடுக்கும் அதே ஆற்றல்கள் – தொழிலாளர் உரிமைகள் மீது தாக்குதல் தொடுக்கும் அதே ஆற்றல்கள் – மாநில உரிமைகள் என்று மங்கல வழக்கில் சொல்லப்படும் தேசிய இன

உரிமைகள் மீதும் தாக்குதல் தொடுக்கின்றன என்பது தற்செயலன்று .


இந்திய இறைமை தமிழகம் காக்குமா?

இப்போது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு 2020-வரைவுக்கு எதிர்ப்புக் காட்டுவதில் தமிழ்த்தேசம் முன்னுக்கு நிற்கிறது .ஆனால் இந்திய அரசு இந்த எதிர்ப்புக்கு மதிப்பளித்துத் தன் திட்டத்தைக் கைவிடும் என்று நம்புவதற்கு நாம் ஏமாளிகள் அல்ல .அப்படியானால் இதற்கு என்னதான் தீர்வு ?

நம் உரிமைகளுக்கும் உயிருக்கும் கண்ணிய வாழ்வுக்கும் ,அனைத்துக்கும் அடிப்படையான இயற்கைக்கும் உற்ற காப்பை உறுதி செய்ய முடியாத இந்திய இறைமைக்கு இன்னும் எவ்வளவு காலம் அடங்கிக் கிடக்கப் போகின்றோம்?

---

# செவ்வணக்கம்!



# மார்க்சிய மாத்தழிழறிஞர் தோழர். ஞானி!

தியாகு

**இடஒதுக்கீடு வழக்கில் நல்ல தீர்ப்பு:**

# வெற்றியைக் கொண்டாடுவோம்!

# விழிப்பின்மைக்காக வருந்துவோம்!

பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு இடஒதுக்கீடு என்பது தொடர்பான வினாக்கள் அண்மையில் மருத்துவக் கல்வி தொடர்பில் மீண்டும் ஓங்கி ஒலித்தன .இச்சிக்கல் தொடர்பாக அரசமைப்புச் சட்டம் தொடங்கி அரசாணைகள் வரை பல சட்டதிட்டங்கள் இருந்து வருகின்றன . அதே போல் உச்ச நீதிமன்றமும் உயர் நீதிமன்றங்களும் வழங்கிய பல தீர்ப்புகளும் உள்ளன . இந்தத் தீர்ப்புகளில் கடைசியாக வந்திருப்பது சென்னை உயர்நீதிமன்றம் மருத்துவக் கல்வி இடஒதுக்கீடு தொடர்பாகக் கடந்த ஜூலை27 ஆம் நாள் வழங்கியுள்ள தீர்ப்பு .இந்தத் தீர்ப்பை முழுமையாக விளங்கிக் கொள்ளவே கூட முழுமையான சமூக-வரலாற்று-சட்ட-அரசியல் பின்னணியையும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இருப்பினும் இப்போதைக்கு இந்தத் தீர்ப்பின் உள்ளடக்கம் என்ற அளவில் நம் பார்வையை .மட்டுப்படுத்திக் கொள்வோம் .

## பிற்படுத்தப்பட்டோர் யார்?

இட ஒதுக்கீடு நோக்கில் சமூக வகுப்புகள் பொதுவாக மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன (1 :தாழ்த்தப்பட்ட வகுப்புகள் (2 ,பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் (3 ,ஏனைய வகுப்புகள்) இவற்றையே முன்னேறிய வகுப்புகள் என்றும் சொல்வதுண்டு.(

சமூக வழியிலும் கல்வி வழியிலும் பிற்பட்ட வகுப்புகள் என்று அரசமைப்புச் சட்டம் சொல்வது முதல் இரு பிரிவினரையும் சேர்த்துக் குறிக்கும் .எனவேதான் இரண்டாம் பிரிவினருக்கு ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்புகள்) OBC = ஏ.பி.வ (.என்ற பெயர் வந்தது .பட்டியல் வகுப்புகள் அல்லது அட்டவணை வகுப்புகள் எனப்படும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளில் அட்டவணைச் சாதிகள்) SC அ.சா ,(.அட்டவணைப் பழங்குடிகள்) ST = அ.ப (.என்ற இரு பிரிவினர் உள்ளனர் .

## தமிழகத்திலும் இந்தியாவிலும் இடஒதுக்கீடு

தமிழகத்தைப் பொறுத்த வரை அட்டவணைச் சாதிகள் / அட்டவணைப் பழங்குடிகளுக்குக் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டுள்ளது .அதே போல் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கும் இட ஒதுக்கீடு உள்ளது .பிற்படுத்தப்பட்ட வகுப்புகளில் மிகவும்

பிற்படுத்தப்பட்ட வகுப்புகள்) MBC = மி.பி.வ (.என்று தனியாக ஒரு வகைப்பாடு உள்ளது .

இந்திய அரசைப் பொறுத்த வரை அ.சா/.அ.ப .(SC/ST) பிரிவினருக்கு மட்டும் தொடக்கத்திலிருந்தே இடஒதுக்கீடு செயல்படுகிறது .ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு) ஏ.பி.வ (.இடஒதுக்கீடு வழங்க முதன்முதலாக மண்டல் குழு பரிந்துரைகளே வழிசெய்தன . மண்டல் குழு அறிக்கை1980 ஆம் ஆண்டு கடைசி நாளில் இந்திய அரசிடம் வழங்கப்பட்ட போதிலும் பத்தாண்டுக் காலம் பரணில் உறங்கியது1990 .ஆம் ஆண்டு ஆகஸ்டு13 ஆம் நாள் தலைமையமைச்சர் விசுவநாத் பிரதாப் சிங் அதற்கு உயிரூட்டினார் .காங்கிரஸ் ,பாசக இரு கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி இதைச் செய்தார் .பார்ப்பன மற்றும்' மேல்சாதி 'மாணவர்கள் இதைக் கடுமையாக எதிர்த்தனர் .எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் விபி சிங் ஒரு வகையில் பின்வாங்கினார் ,உயர் கல்வி நிறுவனங்களில் ஏ.பி.வ .பிரிவினர்க்கு இடஒதுக்கீடு வழங்குவதில்லை என்று ஏற்றுக் கொண்டார் .

2006 வரைக்கும் கூட இதே நிலைதான் நீடித்தது 2006 .சனவரி20 ஆம் நாள் அரசமைப்புச் சட்டத்தில்93 ஆம் திருத்தம் செய்யப்பட்டு உறுப்பு (5)15 சேர்க்கப்பட்டது .ஏப்ரல்5 ஆம் நாள் அன்றைய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ச்சுன் சிங் உயர் கல்வி நிறுவனங்களில் ஏ.பி.வ) .OBC) பிரிவினர்க்கு இட ஒதுக்கீடு வழங்கும் கொள்கை முடிவை அறிவித்தார் ,ஆனால் அந்த ஆண்டிலேயே 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை முழுமையாகத் தராமல் ஆண்டுக்கு 9 வீதம் மூன்றாண்டுகளில் பிரித்துக் கொடுத்து மூன்றாம் ஆண்டிலிருந்து 27 விழுக்காடு தருவது என்ற இணக்க ஏற்பாட்டுக்கு இணங்கினார் .அதாவது09-2008 ஆம் ஆண்டிலிருந்து இந்தியத் தொழில்நுட்பக் கழகம்) IIT) இந்திய மேலாண்மைக் கழகம்) IIM) உள்ளிட்ட நடுவணரசு சார்ந்த உயர் கல்வி நிறுவனங்களில் ஏ.பி.வ .(OBC) பிரிவினர்க்கு 27 விழுக்காடு ஒதுக்கீடு வழங்க வேண்டும் .இந்திய அரசின் பொறுப்பில் உள்ள மருத்துவக் கல்வியிலும் இளநிலை பட்டப் படிப்பு )MBBS [பல் மருத்துவம் என்றால் BDS]), முதுநிலை பட்டப்படிப்பு) MD/MS) ஆகிய இரண்டிலும் இதே இட ஒதுக்கீடு செயல்படுகிறது .அப்படியானால் என்ன சிக்கல் என்ற கேள்வி எழுகிறது .

நடுவணரசின் பொறுப்பில் நடத்தப்படும் மருத்துவக் கல்வி நிறுவனங்கள் மிகச் சிலவே . மாநில அரசின் பொறுப்பில்தான் பெரும்பாலான மருத்துவக் கல்வி நிறுவனங்கள் உள்ளன . இவை தவிர தனியார் மருத்துவக் கல்லூரிகளும் உள்ளன .தமிழ்நாட்டில் மட்டும் 33 அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன .தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் ,தனியார் கல்லூரிகளில் மாநில அரசுக்குரிய பங்கிலும் தமிழ்நாட்டுக்குரிய இட ஒதுக்கீட்டு முறை

கடைப்பிடிக்கப்படுகிறது .அதாவது1994 ஆம் ஆண்டு முதல் அ.சா .(SC) பிரிவினர்க்கு %18 அ.ப .(ST) பிரிவினர்க்கு %1 பி.வ .(BC) பிரிவினர்க்கு %50 வழங்கப்படுகிறது .ஆக மொத்தம் 69 விழுக்காடு . இந்திய அரசுக் கல்வி நிறுவனங்களில் நடுவணரசின் இடஒதுக்கீட்டு முறை .தமிழக அரசின் கல்வி நிறுவனங்களில் மாநில அரசின் இட ஒதுக்கீட்டு முறை என்று தனித்தனி ஓடைகளாக இருந்த வரை சிக்கல் எழவில்லை .இந்த இரு ஓடைகளும் ஓரிடத்தில் கலந்த போதுதான் சிக்கல் தொடங்கியது .எப்போது எப்படிக் கலந்தன?

அனைத்து இந்தியத் தொகுப்பு

1984ஆம் ஆண்டு டாக்டர் பிரதீப் ஜெயின் வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அனைத்து இந்தியத் தொகுப்பு) All India Quota) என்ற ஒன்றை அறிமுகம் செய்தது .மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளில் பெரும்பாலும் அந்தந்த மாநில மாணவர்களுக்கே இடம் கிடைக்கிறது . சில மாநிலங்களில் மருத்துவக் கல்லூரிகளே இல்லை .வேறு சில மாநிலங்களில் மிகக் குறைவாகவே உள்ளன .எனவே மாநில அரசுகள் தங்கள் மருத்துவக் கல்லூரிகளில் குறிப்பிட்ட இடங்களை பிற மாநில மாணவர்களுக்கு ஒதுக்கித் தர வேண்டும் .அந்த இடங்களை அனைத்திந்திய அளவில் இந்திய அரசு நிரப்பிக் கொள்ளலாம் .இந்த இடங்களுக்குத்தான் அனைத்து இந்தியத் தொகுப்பு) AIQ = அ.இ.தொ (.என்று பெயர் .இளநிலையில் 15 விழுக்காடும் முதுநிலையில் 50 விழுக்காடும் இவ்வாறு அ.இ.தொ-.வுக்குத் தரப்பட வேண்டும் .இவை தவிர இந்திய அரசுக் கல்வி நிறுவனங்களும் அ.இ.தொ.வுக்குச் சில இடங்களை வழங்கும் .

தமிழக அரசு தன் பொறுப்பில் உள்ள மருத்துவப் படிப்பு இடங்களில்) அரசுக் கல்லூரி ஆனாலும் தனியார் கல்லூரி ஆனாலும் (இளநிலையில் 15 விழுக்காடும் முதுநிலையில் 50 விழுக்காடும் அனைத்து இந்தியத் தொகுப்புக்குத் தந்து விடுகிறது .இந்த அ.இ.தொ .இடங்களிலும் இடஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்க வேண்டுமல்லவா ?அப்படிக் கடைப்பிடிக்கும் போது எந்த இடஒதுக்கீட்டு முறையைக் கடைப்பிடிப்பது ?நடுவணரசின் முறையையா ?மாநில அரசின் முறையையா ?மாநில அரசுப் பொறுப்பிலுள்ள கல்லூரிகளில்தான் அ.இ.தொ .மாணவர்களும் பயிலப் போகின்றார்கள் .நடுவணரசுப் பொறுப்பில் உள்ள கல்வி நிறுவனங்களில் நடுவணரசின் இட ஒதுக்கீட்டு முறைதான் கடைப்பிடிக்கப்படுகிறதே தவிர அவை இடம்பெற்றுள்ள மாநிலங்களின் இட ஒதுக்கீட்டு முறை அல்ல .அப்படியானால் மாநில அரசு நடத்தும் கல்வி நிறுவனங்களில் மாநிலத்துக்குரிய இட ஒதுக்கீட்டு முறையைத்தான் கடைப்பிடிக்க வேண்டும் . ஆனால் இந்த அனைத்து இந்தியத் தொகுப்புக்கு மாநில அரசு ஒப்படைக்கும் இடங்களில் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பாரைப் பொறுத்த வரை இந்த இரு முறைகளுமே

கடைப்பிடிக்கப்பட வில்லை என்று தெரியவரும் போது அதிர்ச்சியாக உள்ளது .

## இடஒதுக்கீட்டை இல்லாமலாக்கிய உச்ச நீதிமன்றம்

அனைத்து இந்தியத் தொகுப்பு85-1984 இல் வந்த போது அதில் எவ்வித வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுக்கும் உச்ச நீதிமன்றம் இடமளிக்கவில்லை .அ.இ.தொ. இடங்களைப் பொதுப்போட்டியின் மூலம் நிரப்பச் சொல்லி விட்டது. அதனால் அ.சா ,.அ.ப .உட்பட யாருக்கும் அ.இ.தொ-.இல் இடஒதுக்கீடு இல்லை ,இருபதாண்டு காலம் அ.இ.தொ.வில் யாருக்குமே இடஒதுக்கீடு இல்லாத நிலை !அரசமைப்புச் சட்டமே செயலிழந்து நின்ற அவலம் !உச்ச நீதிமன்றத்தின் சமூக நீதி எதிர்ப்புக் கண்ணோட்டத்துக்கு இது அப்பட்டமான சான்று ! இடஒதுக்கீட்டுக்கு வழிவகை செய்யும் அரசமைப்புச் சட்ட உறுப்புகள் அடிப்படை உரிமைகள் என்ற தலைப்பின் கீழ் இருப்பினும் இடஒதுக்கீடு அடிப்படை உரிமை இல்லை என உச்ச நீதிமான்கள் போகிற போக்கில் சொல்லி விட்டு எழுந்து போவதன் உட்கிடக்கை புரிகிறதா?

2007 சனவரி31 ஆம் நாள் அபயநாத் வழக்கில்தான் அ.சா/.அ.ப .உள்ளிட்ட இடஒதுக்கீட்டுக்கு இந்திய அரசு வகை செய்யலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது . இருபதாண்டு காலம் இடஒதுக்கீடு என்ற ஒன்றே இல்லாத அநீதித் தீவாகக் கிடந்த அனைத்திந்தியத் தொகுப்பில்08-2007 இல் தான் அ.ச/.அ.ப .இட ஒதுக்கீடே அறிமுகமாயிற்று . அப்போதே ஏ.பி.வ .இட ஒதுக்கீடும் வந்திருக்க வேண்டும் .நடுவணரசின் முறைப்படி என்றால் கூட முதலாண்டில் ,9 அடுத்த ஆண்டில் ,18 மூன்றாம் ஆண்டில் 27 விழுக்காடு ஏ.பி.வ . பிரிவினர்க்குக் கிடைத்திருக்க வேண்டும் .அ.இ.தொ.க்குத் தமிழகம் தரும் இடங்கள் என்பதால் தொடக்கத்திலிருந்தே தமிழக முறைப்படி 50 விழுக்காடு கிடைத்திருக்க வேண்டும் .எவ்வகை இடஒதுக்கீடும் செயல்படவிலை என்பதுதான் பெரிய கொடுமை!

## கொள்ளையோ கொள்ளை!

இது பகற்கொள்ளை !இருபதாண்டுக் காலம் பட்டியலின மக்களுக்குக் கிடைக்க வேண்டிய இடங்கள் கொள்ளை போயின .பதின்மூன்றாண்டுக் காலம் ஏனைய பிற்பட்ட வகுப்பினர்க்குக் கிடைக்க வேண்டிய இடங்கள் கொள்ளை போயின !கொள்ளையடித்தவர்கள் யார் ?இந்திய உச்ச நீதிமன்றமும் இந்திய அரசினரும் !காங்கிரஸ் ஆட்சியும் பாசக ஆட்சியும் !

இப்போது சமூக நீதியின் வெற்றிக்கு விழா எடுக்கும் கட்சிகள் எல்லாம் இந்தக் கொள்ளை நடப்பதே தெரியாமல் உறங்கிக் கொண்டிருந்தவைதாம் !அதற்காக இவர்கள் வருந்த வேண்டும் ! நாமும் வருந்த வேண்டும்!

சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்திய அரசும் இந்திய மருத்துவப் பேரவையும்) MCI =

இ.ம.பே (.அளித்துள்ள தரவுகளின் படி கடந்த நான்காண்டுக் காலத்தில் அனைத்து இந்தியத் தொகுப்புக்குத் தமிழகம் ஒப்படைத்த இடங்கள் இளநிலை ,முதுநிலை இரண்டும் சேர்ந்து .5,457 இடஒதுக்கீடு செய்திருந்தால் இதில் 2,729 இடங்கள் ஏனைய பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குக் கிடைத்திருக்கும் .

நடுவணரசின் கல்வி நிறுவனங்கள் அ.இ.தொ.க்கு ஒப்படைக்கும் இடங்களில் நடுவணரசின் இடஒதுக்கீட்டு முறை கடைப்பிடிக்கப்படுகிறது .அதாவது அ.சா .%15 .அ.ப ,%7 . ஏ.பி.வ %27 .என்ற தகவில் இட ஒதுக்கீடு தரப்படுகிறது .இது தவிர பொருளியலில் நலிந்த பிரிவு )EWS = பொ.ந.பி (.என்ற புதிய வகைப்பாடு தோற்றுவிக்கப்பட்டு %10 ஒதுக்கப்படுகிறது .மொத்தம் 50விழுக்காட்டுக்கு மேல் என்று சொல்லத் தேவையில்லை .ஆனால் மாநில அரசின் இடஒதுக்கீடு 50 விழுக்காட்டு வரம்பைத் தாண்டக் கூடாது என்று நடுவணரசு அடம் பிடித்தது . உச்ச நீதிமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும் என்று வாதாடியது .வேறு வழக்குகளைக் காட்டி இழுத்தடிக்க முயன்றது .எப்படியாவது பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டு உரிமையை மறுக்கத் தலைகீழாய் நின்றது.

### வாழ்த்தும் வருத்தமும்

உயர் நீதிமன்றத் தீர்ப்பு தமிழ்நாட்டுக்கும் சமூக நீதிக்கும் கிடைத்துள்ள வெற்றி என்பதில் ஐயமில்லை .வழக்குத் தொடர்ந்த தமிழக அரசையும் அரசியல் கட்சிகளையும் திறம்பட வாதிட்ட வழக்கறிஞர்களையும் பாராட்டுகிறோம் .அதே போது கடந்த காலத்தில் விழிப்போடில்லாமல் தூங்கி விட்டோம் என்பதற்காக நாம் உட்பட அனைவரும் வருந்த வேண்டும் .

இந்த நேரத்தில் சிலவற்றைக் கவனப்படுத்த வேண்டும் .இடஒதுக்கீட்டில் அனைத்து இந்தியக் குறுக்கீட்டால் என்றுமே தொல்லைதான் !எப்படி` நீட் `தேர்வினால் நம் ஒருங்கிணைந்த நல்வாழ்வு அமைப்புக்குக் கேடோ ,அதேபோல் இந்திய அரசின் இடஒதுக்கீட்டு மறுப்பு என்பது நம் சமூகநீதிக்குக் கேடு !பிற்படுத்தப்பட்டோருக்குரிய இடங்களின் திருட்டு தற்செயலானதன்று .பிற மாநில மாணவர்களுக்குச் சில இடங்கள் ஒதுக்குவதில் தவறில்லை .ஆனால் அதற்கு அனைத்து இந்தியத் தொகுப்பு என்பது தேவையில்லை .

இடஒதுக்கீட்டில் இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் ஒரே அணுகுமுறையோ ஒரே தகவுமுறையோ இருக்க முடியாது ,ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கான இடஒதுக்கீட்டையே எடுத்துக் கொண்டாலும் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடக் காணலாம் ,

ஆந்திரம் ,%29 இமாசலப் பிரதேசம் ,%18-12 சத்திஸ்கார் ,உத்தர்காண்டு ,ஜார்க்கண்டு ,%14 கர்நாடகம் ,%32கேரளம் ,%40 மராட்டியம் ,இராசத்தானம் ,சிக்கிம் ,%21 பீகார் ,%33 மணிப்பூர் ,மேற்கு வங்கம் ,%17பஞ்சாப் ,%12 புதுவை ,%34 அந்தமான் நிக்கோபர் ,%38 தாத்ரா நகர் ஹவேலி ,%5 சம்மு காசுமீரம் ,%13 அசாம் ,தில்லி ,கோவா ,குசராத் ,அரியானா ,ஒடிசா ,உத்தரப்பிரதேசம் ,சண்டிகார் ,%27 தமிழ்நாடு .%50

## தன்னாட்சியும் இடஒதுக்கீடும்

இடஒதுக்கீட்டுக் கொள்கையும் தகவளவும் முழுக்க முழுக்க மாநில அதிகாரத்துக்கு உட்பட்டவையாக இருக்க வேண்டும் .அதாவது தன்னாட்சி இல்லையேல் இடஒதுக்கீட்டைக் காப்பாற்ற முடியாது ,தமிழ்த் தேசியத்துக்கும் சமூக நீதிக்குமான இடையுறவு என்று இதையே தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் சுட்டுகிறது ,

இரண்டாவதாக ,கல்வி எதுவானாலும் தாய்மொழியே ,அதாவது அந்தந்தத் தேசிய இனத்தின் தேசிய மொழியே கல்விமொழியாக ,பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் . தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி தமிழில்தான் என்ற நிலை இருந்திருக்குமானால் அனைத்து இந்தியத் தொகுப்பு என்ற எண்ணமே பிறந்திருக்காது அல்லவா ?ஆங்கில வழிக் கல்வி என்பது சமூக நீதியை மறுக்கும் கருவி என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் .அனைத்து இந்தியத் தொகுப்பு என்ன ,அனைத்து உலகத் தொகுப்புக்குக் கூட இடம் கொடுப்போம் !ஆனால் தமிழ்வழிக் கல்வி என்பதில் ஊன்றி நிற்போம் !இந்தியக் கட்டமைப்பில் நாம் என்னதான் முயன்றாலும் தமிழ்வழிக் கல்வி அருகி அருகிப் போய்க் கொண்டிருக்கிறது .

## தமிழ்வழிக் கல்வியும் இடஒதுக்கீடும்

தமிழ்வழிக் கல்வியும் இடஒதுக்கீடும் சமூகநீதியின் இரு கால்கள் .ஒன்றில்லாத மற்றொன்று ஊனத்துக்கே வழி செய்யும் .இடஒதுக்கீட்டுக்கான போராட்டத்தின் வரலாறு கற்றுத்தரும் பாடங்களை இனியாவது கற்போம்!

நாம் கொண்டாடுகிற இந்த வெற்றி நிலையானதன்று !அடுத்த திருட்டுக்கும் அடுத்த வெறிப் பாய்ச்சலுக்கும் நம் பகைவர்கள் அணியமாகிக் கொண்டிருக்கிறார்கள் .அநீதியை அறத்தால் தடுக்க நாமும் நம் அறிவாய்தங்களைக் கூராக்கிக் கொள்வோம் !

சமந்தா

## எங்கே அந்தப் பசுந்துளிர்கள்?

முன்னிருந்த பொருளாதாரச் சரிவும், அதன் பின்னிணைந்த கோவிட்-19 தாக்கமும் ஒன்றிணைந்து பொருளாதாரத்தில் கடும் வாட்டத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் நம் பிரதமருக்கு மட்டும் பொருளாதாரத்தில் பசுந்துளிர்கள் தெரிகின்றனவாம். மத்திய பாஜக அரசு, கோவிட்-19ஐ சாக்காக வைத்து, மக்களின் பொருளாதாரத்தை நாசப்படுத்தும் சீரழிவுக் கொள்கைத் திட்டங்களை அவசர அவசரமாக யாருடைய ஒப்புதலும் இல்லாமல் நிறைவேற்றி வருகிறது. விவசாயிகளையும், நுகர்வோரையும் கடுமையாகப் பாதிக்கும் வகையில் விவசாயச் சந்தையை முற்றிலுமாக தனியார் பெருநிறுவனங்களுக்குத் திறந்துள்ளது. இதனால் நிலத்தில் எதைப் பயிர் செய்ய வேண்டும் என்பது முதல் அதை என்ன விலைக்கு விற்பது என்பது வரை முடிவு செய்யும் அதிகாரம் முற்றிலுமாகப் பெரும் நிறுவனங்களுக்கே சென்று விடும், அது பணப் பயிர்களையே அதிகம் பயிர் செய்யும் போக்கை ஊக்குவிக்கும் என்பதால், நாட்டின் உணவு உற்பத்தியிலான தன்னிறைவுக்கும், உணவுப் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைந்து விடும்.

அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955ஐத் திருத்தி அத்தியாவசியப் பொருட்கள் பட்டியலிலிருந்து தானியங்கள், பருப்பு, எண்ணெய் வித்துக்கள், வெங்காயம், உருளைக் கிழங்கு ஆகியவற்றை நீக்கியதால் இந்த அத்தியாவசியப் பொருட்களும் ஆடம்பரப் பொருட்களாகக் கருதப்படும் நிலையே ஏற்படவுள்ளது. இப்பொருட்களின் மீதான அரசின் கட்டுப்பாடுகள் முற்றிலுமாகத் தளர்த்தப்பட்டிருப்பது விவசாயிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இனிமேல் இந்த விளைபொருட்களை ஊக வணிகர்கள் விருப்பம் போல் பதுக்கி வைத்து, செயற்கையான பற்றாக்குறை ஏற்படுத்தி அவற்றின் விலையை உயர்த்த முடியும். இதன் மூலம் ஊக வணிகர்களும், இடைத்தரகர்களும் அரசின் முழு ஆதரவோடு கொள்ளை இலாபம் அடிக்க முடியும். இதனால் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் மக்கள் மிகப் பெரும் இன்னலுக்கு ஆளாக உள்ளனர். இதனால் நீலகிரியில் உள்ள உருளைக் கிழங்கு ஆராய்ச்சி மையத்தையும் மூடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு உருளைக் கிழங்கு விதை கிடைப்பதில் சிரமமம் ஏற்படுவதுடன், ஆயிரக்கணக்கான விவசாயிகள் வாழ்விழக்கும் அபாயமும், உள்ளது. இச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக விவசாய சங்கங்கள் சார்பில் ஜூன் 10ம் தேதி சட்ட நகல் எரிப்பு போராட்டம் நடைபெற்றது.

தலைமை வங்கியின் கட்டுப்பாட்டுக்குள் கூட்டுறவு வங்கிகளைக் கொண்டுவருவதற்கான

அவசரச் சட்டத்தைக் குடியரசுத் தலைவர் பிறப்பித்துள்ளார். பாஜக அரசு, மாநிலங்களிடம் இருந்த கூட்டுறவு வங்கிகளின் மீதான நிர்வாக அதிகாரத்தை, மத்திய வங்கியிடம் ஒப்படைத்திருப்பது விவசாயிகள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தும் விதமாக உள்ளது. ஆனால் இந்த நிர்வாக மாற்றத்தால் விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்றும் மாநில அரசுகளின் ஊழல் அரசியலால் வங்கிகளைச் சரியாக நிர்வகிக்க முடியவில்லை என்றும் சிலர் வக்காலத்து வாங்குகிறார்கள். மத்திய அரசு செய்யாத ஊழலா! மத்திய வங்கி சுயேச்சையாகச் செயல்பட முடிகிறதா? மத்திய அரசின் கைப்பாவையாக மத்திய வங்கி உள்ளது. அரசின் கட்டுப்பாடில்லாமல் முற்றிலும் சுயேச்சையாக, தாராளமய வர்த்தகத்திற்கு ஆதரவாக மத்திய வங்கி செயல்பட வேண்டும் என்ற பொருளில் இதைக் குறிப்பிடவில்லை. மத்திய அரசின் ஜனநாயக விரோதப் பொருளாதார நடவடிக்கைகளைத் தட்டிக் கேட்கவோ தடுக்கவோ அவ்வங்கியால் முடியாத போது இந்த நிர்வாக மாற்றம் என்பது பாரபட்சமற்ற நடவடிக்கைகளை உறுதிபடுத்தாது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கடன் திட்டங்களை ஏதோ பாரதிய ஜனதா கட்சியின் திட்டங்கள் போல் தமிழ்நாட்டின் பாரதிய ஜனதா கட்சியினர் செயல்படுத்தி வருகிறார்கள். இதற்கு ஓர் இணையத்தளமும் தொடங்கியுள்ளார்கள் (www.bankloanhelplinedsbjp.in). குறைந்தபட்சம் இதற்காவது எதிர்ப்புத் தெரிவிக்க முடிந்ததா மத்திய வங்கியால்? இந்நிர்வாக மாற்றம் மாநிலங்களின் சுயாட்சி அதிகாரத்தையும், கூட்டுறவுக் கோட்பாட்டையும் குழி தோண்டிப் புதைப்பதாகவே அமையும்.

மாநிலங்கள் நிதி வருவாயின்றி சாராய விற்பனையின் மூலமும், லாட்டரி சீட்டுகளின் மூலமும் வருவாய் திரட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நிலையில் கோவிட்-19ஆல் ஏற்பட்ட பொருளாதாரத் தேக்கத்தைச் சரிசெய்ய மாநிலங்கள் 20 லட்சம் கோடி நிதியை (10% ஜிடிபி அளவிற்கு) செலுத்த முன்வர வேண்டும் என நிதின் கட்காரி அழைப்பு விடுத்துள்ளார். மத்திய அரசே 20 லட்சம் கோடி நிதித் தொகுப்பு தருகிறோம் எனக் கடன் திட்டங்களை மட்டுமே அறிவித்துள்ள நிலையில் மாநிலங்கள் 20 லட்சம் கோடிக்கு எங்கே போகும்? கோவிட்-19இன் தாக்கத்தால், நிதிவளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும், இந்த நிதி ஆண்டில் எந்தப் புதிய திட்டத்தையும் தொடங்க வேண்டாம் எனவும் நிதி அமைச்சகம் எல்லாத் துறைகளிடமும் கேட்டுக் கொண்டுள்ளது. இந்த நிதியாண்டில் செயல்படுத்துவதற்கான திட்டங்களும், அடுத்த ஆண்டு மார்ச் 31 வரை நிறுத்தி வைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது. அரசின் நிதி ஒதுக்கீடுகள், நிதிச் சலுகைகள் குறைந்து விட்டால், மொத்தப் பொருளாக்க மதிப்பு (ஜிடிபி) 10.8% அளவிற்குக் குறையும் எனப் புள்ளியியல் நிபுணர் பிரனாப் சென் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கி கூறுகிறது, வங்கிக் கடன்களின் வட்டிகளைத் தள்ளுபடி செய்தால் வங்கிகளுக்கு ரூ.2 லட்சம் கோடி அளவிற்கு இழப்பு ஏற்படுமாம்! சரிதான், இது போன்ற குரல் பெருநிறுவனங்களின் வாராக் கடன்களை வட்டி மட்டுமில்லாமல் முதலோடு தள்ளுபடி செய்யும் போது ஏன் ஒலிக்கவேயில்லை?

அகில இந்திய உற்பத்திக் கூட்டமைப்பின் ஆய்வின் மூலம் 72% சிறு, குறு நடுத்தர நிறுவனங்களிலும், 42% கார்ப்பரேட் நிறுவனங்களிலும் ஆட்குறைப்பு செய்யப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. மத்திய அரசு 9.25% குறைந்த வட்டியில் பிணையில்லாக் கடன் 3 லட்சம் கோடி வரை சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு அளிக்க ஒப்புதல் தந்தது. இதன் மூலம் 75 லட்சம் வரையிலோ அல்லது நிறுவனத்தின் மொத்தப் பங்குகளில் 15% அளவிலோ மூலதன உதவியை அரசிடம் பெறலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஆறு மாதங்களுக்குள் 25 கோடி வரை நிலுவைக் கடன் வைத்துள்ள நிறுவனங்கள் மட்டுமே இந்தக் கடன் பெறத் தகுதியானவை என்பதால், கடன் நிலுவை இல்லாத போதும் தொழில் நடத்தப் பணம் இல்லாத நிறுவனங்களோ, புதிதாகத் தொழில் தொடங்கும் நிறுவனங்களோ இத்திட்டத்தின் மூலம் நிதி பெற இயலாத நிலையில் உள்ளன. சிறு, குறு நிறுவனங்களுக்கான முத்ரா கடன் திட்டத்தில் வங்கிக் கடனுக்கான தவணையைக் குறிப்பிட்ட காலத்துக்குள் முறையாகச் செலுத்தினால் மத்திய அரசு 2% வட்டி மானியம் தருமாம், அதுவும் 12 மாதங்களுக்குத்தானாம். இதைச் செயல்படுத்த வேண்டிய நேரமா இது? கடன் தவணையைக் கட்ட முடியாததால்தானே மத்திய வங்கி, கடன் தவணையை செலுத்துவதற்கு 6 மாதம் கால அவகாசம் அளித்துள்ளது? ஆனால் அதுவும் சரியான முறையில் செயல்படுத்தப்படவில்லை. கிராமப் புறங்களில் நிதி நிறுவனங்களின் முகவர்கள், நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு அச்சுறுத்துவதாகத் தொடர்ந்து குற்றச்சாட்டுகள் வந்துள்ளன.

கோவிட்-19 முடக்கத்தால் கச்சா எண்ணெய் விலை வீழ்ந்துள்ள நிலையில் பாஜக அரசு, 21 நாட்களில் 22 முறை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்திச் சாதனை படைத்துள்ளது. பெட்ரோல் லிட்டருக்கு ரூ.9.17 பைசாவும், டீசல் லிட்டருக்கு ரூ.11.14 பைசாவும் விலை அதிகரித்துள்ளது. சென்னையில் பெட்ரோல் லிட்டர் ரூ.83.63 பைசாவுக்கும், டீசல் லிட்டர் ரூ.77.72 பைசாவுக்கும் விற்பனையாகிறது. கச்சா எண்ணெய் உற்பத்தி நாடுகளின் அமைப்பான ஒபெக்கின் தலைமைச் செயலாளரிடம் மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் உலகளவில் கச்சா எண்ணெய் உற்பத்தியும் விலையும் சீராக இருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளாராம் அது சரி, எங்களுக்கு அறிவுறுத்துவது

இருக்கட்டும் உலகெங்கும் அது சீராகத்தான் உள்ளது, ஏன் உங்கள் இந்தியாவில் மட்டும் பெட்ரோல், டீசல் விலை எகிறிப் பாய்கிறது என ஒபெக் தலைமைச் செயலாளர் கேட்டால் இவர் முகத்தை எங்கே வைத்துக் கொள்வார்?

இந்தியாவின் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து அனைத்து இயற்கை வளங்களையும் அம்பானி, அதானிகளுக்கும், அந்நிய நிறுவனங்களுக்கும் தாரை வார்த்து விட்டு, தேச பக்தி, தேச பக்தி எனக் கொக்கரிப்பதில் பொருள் ஏதும் உள்ளதா? பாஜக அரசு தேசபக்தியை நிதி ஒதுக்கீட்டில் காட்ட வேண்டும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் காட்ட வேண்டும். சீனப் பொருட்களைப் புறக்கணிப்பதன் மூலம் மட்டுமே தேசபக்தியை நிலைநாட்டி விட முடியாது. அதற்காக சீனத்தின் காலில் விழ வேண்டும் என்று கூற வரவில்லை. அமெரிக்காவின் காலில் விழுந்து கிடப்பது அல்ல தேசபக்தி.

பிரதமர் கரீப் கல்யாண் திட்டத்தை நவம்பர் இறுதி வரை செயல்படுத்துவதாக அறிவித்துள்ளார். இந்த திட்டம் 80 கோடிப் பயனாளர்களைக் கொண்டுள்ளது எனக் கூறப்பட்டாலும் இதன் பயன்கள் அனைவரையும் சென்றடையவில்லை. எளிய மக்களுக்கு அளிக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளை வெட்டுவதையே இலக்காகக் கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் தலைவரே ஏழைகளுக்கு நேரடிப் பண உதவி, நிதியுதவி உள்ளிட்ட சலுகைகளை அளிக்கலாம் என நரேந்திர மோதிக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார் என்றால் பொருளாதாரம் அந்த அளவிற்குத் தாழ்வடைந்துள்ளது என்பதையே காட்டுகிறது. ஆனால் இந்த இக்கட்டான நிலையும் பிரதமர் அவர்களுக்கு விளையாட்டாகத்தான் உள்ளது அவர் கூறுகிறார், தென்னிந்தியர்கள் பொழுது போக்கப் பல்லாங்குழி விளையாடுகிறார்களாம். பொருளாதாரத்தை பல்லாங்குழியாக்கி விட்டு, அவரால் மட்டுமே இவ்வாறு பேச முடியும். தனக்குரிய பொறுப்புகளையெல்லாம் நிறைவேற்றி விட்டு இவற்றைப் பற்றிப் பேசினால் அது வேறு. நாட்டின் பிரதமர் பொறுப்புகளையெல்லாம் தட்டிக் கழித்து விட்டு வெட்டிப் பேச்சே வேலையெனத் திரியும் போது அதை எப்படி ரசிக்க முடியும்? இந்தியாவில் ஸ்பானிய ஃப்ளூ காய்ச்சலால் 1918இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மொத்தப் பொருளாக்க மதிப்பு (ஜிடிபி) மீண்டு வர 4 ஆண்டுகள் ஆனது என பாரிஸில் உள்ள பொருளாதார கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான கூட்ட்மைப்பு (ஓ.இ.சி.டி,) தெரிவித்துள்ளது. பாஜக ஆட்சியானது பொருளாதார மீட்சி 'U' வடிவத்திலோ அல்லது 'V' வடிவத்திலோ அமையாது என்பதை உறுதிப்படுத்தும் விதமாகவே செயல்பட்டு வருகிறது.

வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் ஜூன் 30 செவ்வாயன்று வெளியிட்ட

புள்ளிவிவரங்களின் படி, நாடு தழுவிய முடக்கத்தினால் தொழிற்சாலைகள் உழைப்பாளர் இல்லாமல், பணப் பற்றாக்குறையால் சிக்கித் தவித்ததால், பொருளாதாரத்தின் 8 முதன்மைத் துறைகளின் உற்பத்தி 2019 மே மாதத்தில் 3.8 சதவீதமாக இருந்தது, 2020 மே மாதத்தில் 23.4 சதவீதம் வீழ்ச்சி (-23.4) அடைந்துள்ளது. தொடர்ந்து மூன்றாவது மாதமாகத் தொடரும் இவ்வீழ்ச்சியானது ஏப்ரல் மாதத்தில் (-) 37 சதவீதமாக இருந்தது. 20ஆவது மாதமாக கச்சா எண்ணெய் உற்பத்தியும் மே மாதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது. உர உற்பத்தியை (7.5%) தவிர்த்து, நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சுத்திகரிப்புப் பொருட்கள், எஃகு, சிமென்ட் மற்றும் மின்சாரம் ஆகிய ஏழு துறைகளும் மே மாதத்தில் எதிர்மறை வளர்ச்சியே காணப்பட்டது. உள்கட்டமைப்பு பிரிவில் அனைத்து துறைகளிலும் மிகப் பெரிய உற்பத்தி அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில் 78.7 சதவீதம் வீழ்ச்சி (-78.7%) அடைந்த எஃகு உற்பத்தி மே மாதத்தில் 48.4 சதவீதம் சரிந்தது (-48.4%). ஏப்ரல் மாதத்தில் 85.3 சதவீதம் சரிவடைந்த சிமெண்ட் உற்பத்தி (-85.3) மே மாதத்தில் 22.2 சதவீதம் குறைந்துள்ளது (-22.2%) மின்சார உற்பத்தி 15.6 சதவீதமும் (-15.6%) சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்களின் உற்பத்தி 21.3 சதவீதமும் வீழ்ந்துள்ளது (-21.3%). தொழில்துறை உற்பத்திக் குறியீட்டில் (ஐ.ஐ.பி.) இந்த எட்டு தொழில்துறைகளின் பங்கு 40.27 சதவீதமாக உள்ளது.

**பெண்களின் நிலை:**

**ஐநா அறிக்கை:**

உலக மக்கள்தொகையின் நிலை குறித்த ஐக்கிய நாடுகள் அவையின் பாலின மற்றும் இனப்பெருக்க சுகாதார நிறுவனம் (UNFPA) ஜூன் 30 அன்று வெளியிட்ட அறிக்கையில் 2013க்கும் 2017க்கும் இடையில், இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 460,000 குழந்தைகள் பிறப்பின் போது காணாமல் போனதாகவும், காணாமல் போன இக்குழந்தைகளில் பாலினச் சார்புடைய பாலினத் தேர்வினால் மூன்றில் இரு பங்கினரும், பிறப்புக்குப் பிந்தைய பெண் இறப்பின் காரணமாக மூன்றில் ஒரு பங்கினரும் காணாமல் போனதாக இந்த அறிக்கை கூறுகிறது. (கடந்த காலத்தில் பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய பெற்றோரின் பாலினத் தேர்வின் காரணமாக மக்கள்தொகையில் காணாமல் போன பெண்களை “காணாமல் போன பெண்கள்” என்று ஐ.நா. குறிப்பிடுகிறது.)

கடந்த 50 ஆண்டுகளில் காணாமல் போன உலகின் 142 மில்லியன் பெண் குழந்தைகளில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கினர் (46 மில்லியன்) இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்றும்,

உலகளவில் காணாமல் போனவர்களில் 90% முதல் 95% வரை இந்தியாவையும், சீனாவையும் சேர்ந்தவர்கள் என்றும் ஐநா அறிக்கை கூறுகிறது. இந்தியாவில் பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகமாக உள்ளதாகவும், 1,000 பெண் குழந்தைகளில் 13.5 பேர் இறப்பதாகவும், 5 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளின் இறப்பில், ஒன்பதில் ஒருவர் இறப்பது பிறப்புக்கு பிந்தைய பாலினத் தேர்வின் காரணமாக இருக்கலாம் என்றும் கூறுகிறது.

இந்தியாவில், கல்வி பெறாத பெண்களில் 51 சதவீதத்தினருக்கும், ஆரம்பக் கல்வி மட்டுமே பெற்றவர்களில் 47 சதவீதத்தினருக்கும் 18 வயதிற்குள் திருமணம் செய்யப்படுவதாகவும், இடைநிலைக் கல்வி பெற்ற பெண்களில் 29 சதவீதத்தினருக்கும், இடைநிலைக் கல்வியைத் தாண்டிப் படித்தவர்களில் 4 சதவீதத்தினருக்கும் 18 வயதுக்கு முன்னரே திருமணம் செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

உலக அளவில், இந்த ஆண்டு, 4.1 மில்லியன் பெண்கள் பெண் பிறப்புறுப்புச் சிதைவுக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இன்று, 18 வயதிற்கு உட்பட்ட 33,000 சிறுமிகள் மிகவும் வயதான ஆண்களை திருமணம் செய்யத் தள்ளப்படும் நிலை காணப்படுவதாகவும் அறிக்கை கூறுகிறது.

**புளூம்பெர்க் அறிக்கை:**

இந்தியாவில் கொரோனா வைரஸால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார நெருக்கடியால் பாலின இடைவெளி மேலும் தீவிரமடைந்துள்ளதாக புளூம்பெர்க் அறிக்கை கூறுகிறது. இந்தியாவில், சுகாதாரத் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகமாய் இருப்பதால் வைரஸ் பாதிப்புக்குள்ளாகும் ஆபத்தும் அவர்களுக்கு அதிகமாய் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்தியப் பெண்களில் கால் பங்கிற்கும் குறைவானவர்களே உழைப்புச் சக்தியாக உள்ளனர். ஆண் பெண் ஊதிய இடைவெளிக்கான உலகளாவிய சராசரி 16%ஆக உள்ள நிலையில், இந்தியாவில் இது சராசரியை விட அதிகமாக உள்ளது. இந்தியப் பெண்கள் ஆண்களை விட 36% குறைவாக ஊதியம் பெறுகின்றனர். இந்திய மக்கள்தொகையில் பெண்கள் 49 சதவீதத்தினராக உள்ளனர், ஆனால் இந்தியப் பொருளாதார உற்பத்தியில் 18 சதவீதத்தினரே பங்களிக்கின்றனர், இது உலகச் சராசரியில் பாதி மட்டுமே. பிரதமர் நரேந்திர மோதி அவர்களால் 1.3 பில்லியன் மக்கள் கொண்ட இந்த நாட்டில் மார்ச் 25 அன்று தொடங்கப்பட்ட தேச அளவிலான முடக்கத்தால், பல பெண்கள் மேலும் பின்னிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் புளூம்பெர்க் அறிக்கை கூறுகிறது.

இப்படி ஒவ்வொரு வகையிலும் நாடு சரிவுப் பாதையில் சென்று கொண்டிருப்பதைப் பற்றிய கவலையே இல்லாமல்தான் பிரதமர் மோதி பொருளாதாரத்தில் பசுந்துளிர்களைக் காண்பதாகத் தம்மைத்தாம் ஏமாற்றிக் கொள்வதோடு நம்மையும் ஏமாற்றி வருகிறார்.

---

## கடிவாளம்- ஆவணப்படம்



### வணக்கம்! நான் *சுதா காந்தி*

*இணைய வழி கல்வி* குறித்து பல கேள்விகள் கருத்துகள் உலவி வந்த நிலையில், எனக்கு இணைய வழி கல்வி *குழந்தைகளின் கற்றலுக்கு ஏற்றதல்ல* என்ற நிலைப்பாட்டை, சில குழந்தைகளுடன் பேசிய போது பெற்றேன். அதன் தொடர்ச்சியாக, இணைய வழி கல்வி என்பதே, தேர்வு மதிப்பெண் என்ற அடிப்படையில் அவசியமாகிறது என்ற பார்வையும் கொண்டேன்.

அதை குழந்தைகளே சொல்லும் வகையில் இந்த ஆவண படத்தை உருவாக்க முற்பட்டேன்.

என்னுடைய முதல் முயற்சி இந்த ஆவண படம். மேலும் பட இயக்கம் குறித்து பெரிய அறிவு இல்லை என்பதால், இது பெரிய நேர்த்திகளுடன் இருக்காது, எனினும் கருத்தை கொண்டு சேர்த்து விட வேண்டும் என *கடிவாளம்* முடித்து உங்கள் பார்வைக்கு வைத்தும் விட்டேன்.




இதன் தொடர்ச்சியாக வரும் சில கேள்விகளுக்கும் இதே முறையில் ஆவண படம் உருவாக்கி அதை தெளிவு படித்த நினைக்கிறேன். ஆகவே, நண்பர்களே, *உங்கள் மேலான கருத்துக்களை* மேலுள்ள என் *முகநூல் பக்கத்தில்* தெரிவித்தால், அதை ஒரு ஆவணமாக கொண்டு அடுத்ததை படைப்புகளை இன்னும் நேர்த்தியுடன் தர தலைபடுவேன்.

அதன் யூடியூப் லிங்க்.

https://youtu.be/HsRs6s4xf20

என் முகநூல் பக்க லிங்க்.

https://www.facebook.com/660916014004788/posts/3045193988910300/

அனைவருக்கும் நன்றி!

தியாகு

## இலங்கை நாடாளுமன்றத் தேர்தல்:

## ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு வேண்டுகோள்

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

இனவழிப்புக்கு நீதி கோரவும், தமிழீழ இறைமை மீட்புக்கும் பாடுபடும் புதிய அரசியல் தலைமையை வார்க்கும் களமாக இலங்கை நாடாளுமன்றத் தேர்தலைப் பயன்படுத்துக!

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

கொரோனாவின் வருகை வரலாற்று வளர்ச்சிப் போக்கை விரைவுபடுத்தியுள்ளது. அந்த வேகத்திற்கு ஈடுகொடுக்க வேண்டியவர்களாகத் தமிழ் மக்களாகிய நாமும் உள்ளோம். கொரோனா ஏற்படுத்தும் அரசியல் பொருளியல் சங்கிலித் தொடர் நிகழ்வுகளால் எழப்போகும் போராட்டங்களும் கொரோனா போலவே உலகெங்கும் பரவுவது திண்ணம். மென்மேலும் மக்கள்திரளின் காலமாக எதிர்காலம் விரிகிறது. ஆயினும் அந்த மக்கள்திரளின் கருத்தை அறிவதற்குத் தேர்தல் வழியாக அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட பெயராளர்களின் கருத்தையே இன்றைய பன்னாட்டுலக அரசுகள் கோரி நிற்கின்றன. இது அரசியலில் ஒரு குடியாட்சிய மரபாக வளர்ந்து வந்திருக்கக் காண்கிறோம்.

ஒற்றையாட்சி அரசமைப்புக்கு உட்பட்ட நாடாளுமன்றத்திற்கான இடங்களைப் பிடிப்பதால் இலங்கைத் தீவுக்குள் ஈழத் தமிழர்களுக்கு பெரிதாக ஒன்றும் ஆகப் போவதில்லை. ஆனால், இலங்கைத் தீவுக்கு வெளியே பன்னாட்டரங்கில் தமிழர்களின் வேணவாக்களை வெளிப்படுத்துவதற்கு இந்த நாடாளுமன்ற இடங்களை யார் நிரப்புகிறார்கள் என்பது முகன்மை உடையதாகிறது.

உலகெங்கும் தேர்தலில் மக்களின் அன்றாட வாழ்வாதாரச் சிக்கல்கள் நிகழ்ச்சி நிரலாகின்றன. ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை சுதந்திரம் பெற்ற இலங்கையில் நடந்த எல்லா நாடாளுமன்றத் தேர்தல்களிலும் அதன் மையப் பொருளாய்த் தமிழ் மக்கள் ஏதோ ஒரு வகையில் தமிழ்த் தேசியக் குறிக்கோளை முன்னிறுத்தத் தவறியதில்லை. அது மட்டுமின்றி, கரை சேர்க்கும் துடுப்பென்று நம்பி பற்றிப் பிடித்தவிடத்து கடலில் மூழ்கடிக்கும் கல்லைப் போல் தீங்கிழைத்த எவரையும் தமிழர்கள் கைகழுவத் தவறியதில்லை.

பதவிக்காக சிங்கள ஆளும் குழாத்திடம் விலைபோன ஜி.ஜி. பொன்னம்பலத்தை 1955ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஓரங்கட்டியவர்கள், ஒன்றுபட்ட இலங்கைக்குள் கூட்டாட்சி கோரிய தமிழரசுக் கட்சி தொடங்கப்பட்டு ஆறு ஆண்டுகளே ஆன நிலையில், எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை தமக்குத் தலைமை ஏற்க வைத்தவர்கள் தமிழர்கள். 1955 முதல் 1976இல் அவர் மறையும் வரை தமிழர்களின் தன்னேரில்லாத் தலைவராக அறியப்பட்டார். 1972இல் இயற்றப்பட்ட சிறிலங்கா குடியரசு யாப்பை தமிழர்கள் ஏற்கவில்லை என்பதைக் காட்டும் விதமாக 1975இல் காங்கேசன்துறை இடைதேர்தலில் அவர் போட்டியிட்ட போது அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர் கட்டுப்பணம் கூட பெற முடியாமல் தோல்வி கண்டார். தமிழர்களுக்கு இறைமையுள்ள தனியரசு மீதான வேட்கை அவரது தலைமையிலேயே வட்டுக்கோட்டை தீர்மானமாயிற்று. தமிழீழ அரசமைப்பதற்கான மக்களாணை கோரித் தமிழர் விடுதலைக் கூட்டணி 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் களங்கண்ட போது அக்கூட்டணிக்கு மாபெரும் வெற்றியைத் தமிழ் மக்கள் வழங்கினர். தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தலைவர்கள் சிங்கள ஆட்சியாளர்களோடு கள்ளக்கூட்டு வைத்துக் கொண்டனர். 'அமிர் அண்ணாச்சி நிழல் அரசாங்கம் என்னாச்சு' என்று கேட்கத் தொடங்கி, அமிர்தலிங்கத்தை அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்த தயங்கவில்லை தமிழர்கள், வட்டுக்கோட்டையிலிருந்து முள்ளிவாய்க்கால் வரையிலான போராட்டப் பயணத்தில் சிங்கள பௌத்தப் பேரினவாத அரசியலுக்கு எதிரான ஒரு போராட்டக் களமாகவே நாடாளுமன்றத் தேர்தலைக் கைகொண்டு வந்தவர்கள் தமிழர்கள்.

இடிபோல் தாக்கிய முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பின்னான இந்தப் பதினோர் ஆண்டுகளில் தமிழ் மக்கள் இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் வாக்களித்துள்ளனர். ஆகஸ்ட் 5ஆம் நாள் சிறிலங்காவில் நடக்கவிருப்பது முள்ளிவாய்க்காலுக்குப் பிறகான மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தல். போருக்குப் பிந்தைய நிலைகுலைந்த வாழ்க்கையில், ஆதரவற்றோர், உறவுகளை இழந்து வாடுவோர், வாழ்வாதாரத்திற்கு வழியின்றித் தத்தளிப்போர் என அன்றாட வாழ்வின் துயரத்தையும் நெருக்கடிகளையும் சொல்லி மாளாது. இந்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க சிற்சில வாய்ப்புகளை வழங்கக் கூடிய ஒன்றாக தமிழ் மக்கள் இத்தேர்தலைக் கருதக் கூடும்.

அதேநேரத்தில் இந்த நெருக்கடிகளுக்கு எல்லாம் அடிப்படையாய் இருக்கும் இனப் பிரச்சனை தொடர்பில் கடந்த 4 ஆண்டுகளில் நடந்தவை என்ன? நல்லாட்சி, நல்லரசாங்கம், நல்லிணக்கம்

என்பவை எல்லாம் காற்றில் கரைந்த கற்பூரமாகி விட்டன. "புதிய யாப்பொன்றின் வழியே ஒற்றையாட்சிக்குள் சமஷ்டித் தீர்வொன்று வரும்" என்று சத்தியம் செய்தவர்கள் தலைகவிழ்ந்துள்ளனர். மூன்று முறை இரணில் அரசைக் கவிழாமல் காத்த தமிழ்த் தலைவர்கள் எதிரிக்கு வெற்றிக் கனிகளைத் தந்து விட்டு தமிழ் மக்களுக்கு வெறுங்கையைக் காட்டினார்கள். எல்லாவற்றினும் உச்சமாக, இறுதிப் போரில் நடத்தப்பட்ட போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு கலப்புப் பொறிமுறை தேவை என ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் தீர்மானங்கள் வந்த போது இரண்டு இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் கேட்டு இழுத்தடிப்புச் செய்த சிங்கள ஆட்சியாளர்களுக்குத் துணைபோன தமிழ்த் தலைவர்களின் கழுத்தறுப்பும் நடந்தது. இவ்வாண்டு தொடக்கத்தில், காணாமலாக்கப்பட்டோர் எவரும் உயிருடன் இல்லை என்றும், இறப்புச் சான்றிதழ் தரப்போவதாகவும் இறுமாப்புடன் அதிபர் கோத்தபய சொன்னார். 2015இல் தாமே முன்மொழிந்து ஏற்றுக்கொண்ட பொறுப்புக் கூறலுக்கான 30/1 தீர்மானத்தைத் தாம் ஏற்கவில்லை என்று 2020 பிப்ரவரியில் ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் கோத்தபய இராசபக்சே தலைமையிலான சிறிலங்கா அரசு சொல்லி விட்டது. அதாவது, பன்னாட்டு விசாரணையும் இல்லை, கலப்புப் பொறிமுறையும் இல்லை என்றும் உள்நாட்டுக்குள் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்றும் இனப்படுகொலைக்குக் கவசமாக அரசுகளின் இறைமைக் கோட்பாட்டைப் பயன்படுத்திக் கொண்டது இலங்கை அரசு. மொத்தத்தில், பன்னாட்டு அரங்கில் சிறிலங்கா அரசையும் உள்நாட்டரசியலில் தமிழ்த் தலைவர்களையும் தோலுரித்துக் காட்டிவிட்டு பன்னாட்டுப் புலனாய்வுப் படலம் தொடங்கிய இடத்திற்கே மீண்டும் வந்திருக்கிறது.

வல்லரசுகளின் விருப்பங்களை எல்லாம் பின்தள்ளி சிங்கள மக்கள் தமது தலைவர்களாக இனக்கொலையாளர்களான இராசபக்சேக்களுக்கு மீண்டும் மூடிசூட்டி விட்டனர். இரணிலும் சிறிசேனாவும் சரத் பொன்சேகாவும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டனர். இந்தப் பதினோர் ஆண்டுகளில் சிங்கள அரசியலில் ஒவ்வொன்றும் அததற்குரிய இடத்திற்கு வந்து விட்டாற்போலும் நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. தமிழ்மக்களும் தமது அரசியல் தெரிவுகளின் வழி தமது கோரிக்கைகளை வெளிப்படுத்துவதோடு அதனதனை அததற்குரிய இடத்தில் வைப்பது இந்த நாடாளுமன்றத் தேர்தலில் நடந்திடல் வேண்டும்.

கட்டமைப்பு வகையிலான இன அழிப்பைத் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாக சிறிலங்கா முன்னெடுத்து வருகிறது. 9 மாகாணங்களும் பௌத்த சிங்களர்களுக்கே சொந்தமானவை. வடக்குகிழக்கில் ஓரடி நிலம்கூட தமிழர்களுக்கோ முஸ்லிம்களுக்கோ சொந்தமில்லை என்று பௌத்த பலசேனாவின் பொதுச்செயலாளர் கலசொட அத்தே ஞானதேரர் சொல்லும் நிலை

உருவாகியுள்ளது. தமிழர்கள் தங்கள் தாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் இந்த நாடாளுமன்றத் தேர்தல் முகன்மை உடையதாகின்றது.

கொரோனா உலக வல்லரசுகளின் மேலாதிக்கப் போட்டியை வெளிப்படையாக்கியுள்ளது. அவற்றிற்கு இடையிலான முரண்பாடுகள் தீவிரமடையக் காண்கிறோம். அமெரிக்க - சீன முரண்பாடு இப்பிராந்தியத்தில் இந்திய - சீன முரண்பாடாய் வெடிக்கத் தொடங்கி விட்டது. காஷ்மீரின் லடாக்கில் பறந்த தீப்பொறிகள் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்திலும் பறக்கக் கூடும். இந்தியப் பெருங்கடல் சார்ந்த புவிசார் மேலாதிக்கப் போட்டியில் ஈழத்தின் அமைவிடம் சார்ந்த வலிமையைப் பயன்படுத்தித் தமது கோரிக்கைகளுக்கு ஆதிக்க அரசுகளைத் தலையாட்ட வைக்கக் கூடிய சில வாய்ப்புகள் இருக்கக் கூடும். ஆனால், இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் இலங்கைத் தீவுக்கு வெளியே உள்ள அரசுகளிடம் தமிழ் மக்களின் அரசியல் விருப்பங்களை முன்வைக்கக் கூடிய தலைமை தமிழர்களுக்கு இருந்தாக வேண்டும்.

கனடா, ஜெர்மனி, வட மாசிடோனியா, மாண்டிநிகரோ, இங்கிலாந்து ஆகிய நாடுகள் அடங்கிய சிறிலங்கா தொடர்பான முதன்மைக் குழுவின் சார்பாக இங்கிலாந்தின் மனித உரிமைகளுக்கான பன்னாட்டுத் தூதர் ரீட்டா பிரெஞ்சு வெளியிட்ட அறிக்கையில், ஐ.நா. தீர்மானத்தில் (30/1) இருந்து சிறிலங்கா வெளியேறியது தமக்கு ஏமாற்றமளித்துள்ளது என குறிப்பிட்டுள்ளார். கூடவே, கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகள் மனித உரிமைகளைப் பின்னுக்கு தள்ளி விடக் கூடாது என்று ஐ.நா. மனித உரிமை மன்றத்தின் உயர் ஆணையர் மிச்செல் பசலே தெரிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டுகிறார். பன்னாட்டுப் புலனாய்வை ஏற்க மறுத்து உள்நாட்டுப் பொறிமுறை என்று சிறிலங்கா அரசு சொன்னாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இது நம்பிக்கை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார். எனவே, தமிழர்கள் உள்நாட்டுப் பொறிமுறையை ஏற்கிறார்களா? இல்லையா? பன்னாட்டுப் புலனாய்வைக் கோருகிறார்களா? என்பதை தமிழர்களின் பெயராளர்கள் வெளிப்படுத்துவது முகன்மையானது.

வட மாகாண சபையிலும் தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையிலும் இனவழிப்புக்கு நீதியை உறுதி செய்யப் பன்னாட்டுப் புலனாய்வு ஒன்றே வழி என்றும் அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் இயற்றப்பட்ட தீர்மானங்களை உயர்த்திப் பிடிக்கக் கூடியவர்களா? என்று பார்த்துத் தமிழ்மக்கள் இத்தேர்தலில் தமது பெயராளர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

ஆகவே, நடக்கவிருக்கும் தேர்தலின் நிகழ்ச்சி நிரலாக உடனடி அன்றாட நலன்களோடு சேர்த்து

இனவழிப்புக்கு நீதி பெறப் பன்னாட்டுப் புலனாய்வையும் இனச் சிக்கலுக்கு அரசியல் தீர்வு காணப் பொதுவாக்கெடுப்பையும் வலியுறுத்துவதை முன்வைக்க வேண்டும். இதற்கான தமிழ் மக்களின் ஆணையைத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்த வேண்டும். இந்தக் கோரிக்கைகளை உறுதியாகத் தொடர்ந்து முன்னெடுக்கும் அரசியல் தலைமையை வார்ப்பதற்கான களமாக இத்தேர்தலை ஈழத் தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

` தோழமையுடன்,

கொளத்தூர் தா.செ.மணி,
ஒருங்கிணைப்பாளர், ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு /
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.

கோவை இராமகிருட்டிணன்,
பொதுச்செயலாளர், தந்தை பெரியார் திராவிடர் கழகம்

பெ, மணியரசன்,
தலைவர், தமிழ்த் தேசியப் பேரியக்கம்

தியாகு, பொதுச் செயலாளர்,
தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

பாலன்,
பொதுச்செயலாளர், தமிழ்த் தேச மக்கள் முன்னணி

சுந்தரமூர்த்தி,
ஒருங்கிணைப்பாளர், தமிழர் விடுதலைக் கழகம்

செந்தில்,
ஒருங்கிணைப்பாளர், இளந்தமிழகம்

சமந்தா

**"சண்டையிடுவதை நிறுத்துங்கள், வாக்கெடுப்பைத் தொடங்குங்கள்" சர்வதேசப் பிரச்சார இயக்கம்:**

ஜூன் 24 அன்று, அமெரிக்காவின் வாஷிங்டனில் மோதல்களை/சச்சரவுகளைத் தீர்ப்பதற்கான அமைதியான வழிமுறையாக நேரடி ஜனநாயக முறைகளைப் பயன்படுத்துவதை முன்னிலைப்படுத்துவதற்காக "சண்டையிடுவதை நிறுத்துங்கள் வாக்கெடுப்பைத் தொடங்குங்கள்" என்ற சர்வதேச அளவிலான விழிப்புணர்வுப் பிரச்சாரம் தொடங்கப்பட்டது. இந்த விளம்பர வடிவிலான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மோதலைத் தீர்ப்பதற்கான அமைதி வழிமுறையாக நேரடி ஜனநாயகத்தை ஊக்குவிக்கிறது.

இவ்வியக்கம் நீண்டகாலமாக நீடிக்கும் மோதல்களை அமைதியாகத் தீர்க்க உதவும் ஒரு முக்கியமான கருவியாக நேரடி ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்துகிறது- ஹாங்காங், கட்டலோனியா, தைவான் மற்றும் இலங்கை தமிழர் பிரச்சனை- என நீண்ட கால பிரச்சனைகளை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கான வழிமுறையாக நேரடி ஜனநாயகம் முன்னிறுத்தப்பட்டுள்ளதாக இது குறித்து குடிமக்கள் பொறுப்பு அறக்கட்டளையின் தலைவர் பால் ஜேக்கப் தெரிவித்துள்ளார்..

"சண்டையிடுவதை நிறுத்துங்கள் வாக்கெடுப்பைத் தொடங்குங்கள்" பிரச்சாரம் என்பது பொறுப்புக் குடிமக்கள் என்ற இலாப நோக்கற்ற அறக்கட்டளையால் உலகெங்கிலும் உள்ள நேரடி ஜனநாயக வல்லுநர்கள், ஆய்வாளர்கள், வழக்கறிஞர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் கல்வியாளர்கள்- மற்றும் அமைப்புகளின் ஆதரவுடன் தொடங்கப்பட்டது. இந்த பிரச்சாரம் மோதல்களுக்கான அடிப்படை பிரச்சினைகளுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ வாதிடாமல், இந்த மோதல்களுக்கு நேரடி ஜனநாயக முறைகளை பயன்படுத்துவதன் மூலம் அமைதியான தீர்வை அடைய முடியும் என்ற கருத்தை முன்வைக்கிறது. நேரடி ஜனநாயகத்தின் வடிவங்களான - முன்னெடுப்புகள்(initiatives) மற்றும் பொது வாக்கெடுப்பு (referendum ) ஆகிய கருவிகளை பரவலாக பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளின் கீழ் தீர்வை காண இயலும் என்ற கருத்தை முன்னிலைப்படுத்துகிறது.

"நேரடி ஜனநாயகத்தின் பயன்பாடானது மக்கள் விருப்பத்தின் நியாயமான வெளிப்பாடாக சர்வதேசிய கூட்டமைப்பால் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால் அவை சர்வதேச சட்டக் கட்டமைப்பிற்குள் அமைய வேண்டும் என்று குடிமக்கள் முன்னெடுப்பை ஊக்குவிக்கும்

பல்கேரிய கூட்டமைப்பின் தலைவர் டேனீலா போஷினோவா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தனித்த தமிழ்த் தாயகத்தை நிறுவுவது குறித்தும் ,ஹாங்காங்கில் தீர்க்கப்படாத மோதல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உலகளவிலான சமூக இணைய தளங்களில் 60 வினாடி காணொளி விளம்பரத்துடன் சண்டையிடுவதை நிறுத்துங்கள் வாக்கெடுப்பைத் தொடங்குங்கள்" என்ற இந்த பிரச்சாரம் தொடங்கப்பட்டது. இவ்வியக்கம் நேரடி ஜனநாயகத்தின் மூலம் சமாதானமாக தீர்க்கப்படக்கூடிய உலகெங்கிலும் உள்ள மோதல்களை முன்னிலைப்படுத்தத் தொடர் காணொளிப் பிரச்சாரங்களை உருவாக்க இருக்கிறது.

"உலகம் மோதல்களால் நிறைந்துள்ளது. இரத்தக் களரிகளால் மட்டுமல்லாமல் பிரிவினைவாதத்தைத் தீவிரமாக்கும் சொற்களாலும், செயல்பாடுகளாலும் இவற்றுக்குத் தீர்வு காண இயலாநிலை ஏற்பட்டுள்ளது. சண்டையிடுவதை நிறுத்துங்கள், வாக்கெடுப்பைத் தொடங்குங்கள் என்பது நேரடி ஜனநாயகம் குறித்த வல்லுநர்கள் ஒன்றிணைந்து, இந்த மோதல்களைத் தீர்ப்பதற்கான அமைதியான மற்றும் நியாயமான பாதையை ஏற்படுத்தவும், நேரடி ஜனநாயக வாக்களிப்பின் மூலம் தீர்வு பெறும் விதமாக விழிப்புணர்வை அதிகரிப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட ஒரு பிரச்சாரமாகும்" என்று இது குறித்து தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் முன்னெடுப்பு மற்றும் பொதுவாக்கெடுப்பு நிறுவனத்தின் தலைவர் டேன் வாட்டர்ஸ் தெரிவித்துள்ளார்.

நேரடி ஜனநாயகத்தின் கருவிகளை மேம்படுத்தவும் கட்டுப்படுத்தவும் அல்லது சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளுடன் பொருந்தாத வகையில் அவற்றைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தவும் இந்த பிரச்சாரம் முயலும். ருமேனியா, உக்ரைன் இரு நாடுகளிலும் இன்று, நேரடி ஜனநாயகம் முன்மொழியப்பட்டு வந்த போதிலும் அதற்கான நெறிமுறைகளும், ஒழுங்குமுறைகளும், அவை அதிகமாக தேவைப்படும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மோதல்களைத் தீர்ப்பதற்கு கிடைக்கா வண்ணம் அவற்றின் பயன்பாடு தடுக்கப்படுகிறது. மேலும், தற்போது திட்டமிடப்பட்ட வாக்கெடுப்புகளில்- உதாரணமாக, ரஷ்யாவில் - அதன் முடிவுகள் அங்கீகரிக்கக் கூடிய தரநிலையில் செய்யப்படாத வண்ணம் உள்ளன.

"இந்த விசயங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவர நாம் உதவ வேண்டும், அதன் மூலம் ஊடகங்களும், கருத்துரைக்கும் தலைவர்களும் மக்களும் நேரடி ஜனநாயகத்தின் ஒரு குறிப்பிட்ட வடிவம் மற்றும் அதன் பயன்பாடு சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகள்

மற்றும் நடைமுறைகளின் அடிப்படையில் முறையானதா என்பது எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை அறிவார்கள்," என்று கோவென்ட்ரி பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் பேராசிரியர் மாட் குவார்ட்ரப் குறிப்பிட்டுள்ளார்.

"சண்டையிடுவதை நிறுத்துங்கள், வாக்கெடுப்பைத் தொடங்குங்கள்" இயக்கம் உலகெங்கிலும் உள்ள நேரடி ஜனநாயக வல்லுநர்கள் மற்றும் அமைப்புகளைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை நிறுவியுள்ளது. இந்த இயக்கம் குறித்தும் நேரடி ஜனநாயகத்தின் முக்கியத்துவம் குறித்தும் அவர்கள் தெரிவித்த சில கருத்துகள் இங்கே பின்வருமாறு.

"ஜனநாயகம் என்பது என்றும் முடிவடையாத ஓர் உரையாடல். இத்தகைய உரையாடல்களை அனுமதிக்கும் அரசியல் அமைப்புகளைக் கொண்ட நாடுகள் மோதல்கள் நிரந்தரமாக வளர்வதை அனுமதிக்கும் நாடுகளை விட மிகச் சிறப்பாக செயல்படுகின்றன. எனவே, முட்டாள்தனமாகப் பிறர் தலையில் சுத்தியலால் அடிப்பதற்கு பதில், ஒரு சமூகத்தின் பிரச்சனைகளை சரிசெய்யும் திறன்வாய்ந்த திருப்புளிகளாகக் குடிமக்களின் முன்முயற்சிகள், பொதுவாக்கெடுப்புகள் போன்ற நவீன நேரடி ஜனநாயக முறைகளை வடிவமைக்க வேண்டும். இன்றைய உலகம் அதிக உரையாடல்களுடனும், குறைந்த மோதல்களுடனும் இருக்க வேண்டியது அவசியம் என்று நவீன நேரடி ஜனநாயகம் குறித்த உலகளாவிய மன்றத்தின் இணைத் தலைவர் புருனோ கா்ஃப்மேன் கூறியுள்ளார்.

"ஜனநாயகம் என்பது தங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் பொது முடிவுகளில் மக்கள் கருத்திற்கு இடமளிக்கும் எளிய அமைப்பாகும். மோதல்களை அமைதியாகவும் நியாயமாகவும் தீர்க்க இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ஆகச் சிறந்த அமைப்பாக இது உள்ளது. இந்தப் பிரச்சார இயக்கம் ஜனநாயகத்தின் மிக முக்கியமான ஆற்றல்மிக்க இரு கருவிகளை -- முன்னெடுப்பு மற்றும் பொது வாக்கெடுப்பு - பரப்புவதையும் முக்கியமான முடிவுகளில் மக்களின் குரலை ஒலிக்கச் செய்ய அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது" என்று முன்னெடுப்பு மற்றும் பொதுவாக்கெடுப்பின் நிர்வாக இயக்குநர் ஜான் மாட்சுசாகா தெரிவித்துள்ளார்.

"மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் திறனில் மன நிறைவு காணப்படாத சூழ்நிலையில், நேரடி ஜனநாயகத்தின் கருவிகளானவை, பிரதிநிதிகளின் சக்தியைக் கட்டுப்படுத்துவதற்கும், மக்களுக்கு இசைவில்லாத முடிவுகளைத் தடுத்து நிறுத்துவதற்கும், கொள்கை வகுப்பதற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்குவதற்கும் உதவும். இருப்பினும், நேரடிப் பங்கேற்பு கருவிகளின் ஒழுங்குமுறை மற்றும் நடைமுறை சர்வதேச அளவில் ஏற்றுக்

கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இசைவாக இருக்க வேண்டும். இதனால்தான் "சண்டையிடுவதை நிறுத்துங்கள், வாக்கெடுப்பைத் தொடங்குங்கள்" பிரச்சாரம் மிகவும் முக்கியமானது" என்று யானினா வெல்ப் (ஆல்பர்ட் ஹிர்ஷ்மேன் ஜனநாயக மையம்) தெரிவித்துள்ளார்.

## தலைமுறைகளாகத் தொடரும் சண்டை:

பல தலைமுறைகளாகத் தொடரும் சண்டைகள் முடிவுக்கு வர வேண்டும். கொடுங்கோன்மைத் தீ அணைக்கப்பட வேண்டும். மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு, மோதல்களைத் தீர்ப்பதற்கான அமைதியான வழிமுறையாக அரசுகள் இந்த உரிமையை மதிக்க வேண்டும். நேரடி ஜனநாயகத்தின் பயன்பாடு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சட்டக் கட்டமைப்பிற்குள் பயன்படுத்தப்பட வேண்டும், இதனால் மக்களது விருப்பத்தின் நியாயமான வெளிப்பாடாக அவற்றை சர்வதேசக் கூட்டமைப்பால் அங்கீகரிக்க முடியும்.

## மக்களுக்குக் கல்வியளித்தல்

"சண்டையிடுவதை நிறுத்துங்கள், வாக்கெடுப்பைத் தொடங்குங்கள்" என்பது மக்களுக்கான சர்வதேச அளவிலான கல்விப் பிரச்சாரமாகும், இது மோதலைத் தீர்ப்பதற்கான அமைதி வழிமுறையாக நேரடி ஜனநாயகத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கிறது. பொறுப்புக் குடிமக்கள் அறக்கட்டளையால் நிறுவப்பட்ட இவ்வியக்கம் இப்போது உலகெங்கிலும் உள்ள நேரடி ஜனநாயக வல்லுநர்கள் மற்றும் அமைப்புகளால் ஆதரிக்கப்படுகிறது.

இணையதள முகவரி: https://stopfightingstartvoting.org/

## நேரடி ஜனநாயகத்தைக் கைகொள்வோம்:

மக்களால் மக்களுக்காக மக்களே செய்யும் ஆட்சி மக்களாட்சி, என்ற ஆபிரகாம் லிங்கனின் ஜனநாயகம் குறித்த பிரபலமான வரைமுறை யாரும் அறியாததல்ல. ஆனால் அத்தகைய மக்களாட்சி இன்றளவும் எட்டப்படாததாகவே உள்ளது. பொதுவாக ஜனநாயகத்தை அதன் பண்பளவில் நேரடி ஜனநாயகம் மற்றும் மறைமுக ஜனநாயகம் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இன்று பெருமளவில் மறைமுக ஜனநாயகமே நடைமுறையிலுள்ளது. மறைமுக ஜனநாயகம் என்பது பிரதிநிதித்துவ ஜனநாயகம் ஆகும். இவ்வமைப்பு முறையில் அரசியல் செயல்பாடுகளில், முடிவெடுப்பதில், சட்டம் இயற்றுவதில் மக்கள் நேரடியாகப் பங்கேற்க மாட்டார்கள். மக்களின் சார்பில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே - சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் -பங்கேற்பார்கள். ஆனால் பிரதிநிதித்துவ

ஜனநாயகம் அதிகாரக் குவிப்பை, எதேச்சதிகாரத்தை ஏற்படுத்தி அதிகாரப் பரவலை தடுக்கிறது, மேலும் பெரும்பாலான சமயங்களில் மக்களின் உண்மையான நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தாமல், அரசியல்வாதிகளின் - தனிநபர்களின் சுயநலன்களையோ, கட்சியின், நிறுவனங்களின் நலன்களையோதான், மொத்தத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களையே பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பது இவ்வமைப்பின் பெரிய குறைபாடு. சரியான முறையில் நேரடி ஜனநாயக முறைகளை பயன்படுத்துவதன் மூலம் பிரதிநிதித்துவ அல்லது மறைமுக ஜனநாயகத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய முடியும். நேரடி ஜனநாயகம் தூய்மையான ஜனநாயகம் என்றும் அழைக்கப்படுகிறது. நேரடி ஜனநாயக அமைப்பு முறையில் அரசின் கொள்கைகளை உருவாக்குவதில், முடிவெடுப்பதில், சட்டம் இயற்றுவதில் என எல்லா அரசியல் செயல்பாடுகளிலும் மக்கள் நேரடியாகப் பங்கேற்க முடியும். இதன் மூலம் அதிகாரக் குவிப்பு - அதிகாரம் மையப்படுத்தப்படுவதைத் தவிர்த்து அதிகாரம் பரவலாக்கப்படுகிறது. ஒவ்வொரு அரசியல் செயல்பாடும் மக்களின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்படுவதை நேரடி ஜனநாயகத்தின் மூலம் உறுதி செய்ய முடியும். நேரடி ஜனநாயகத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க எடுத்துக்காட்டாக பாரிஸ் கம்யூன் திகழ்ந்தது. 1871ல் மக்களின் தன்னெழுச்சியான புரட்சியின் மூலம் பாரிஸ் கம்யூன் நிறுவப்பட்ட போது அனைத்து அதிகாரச் செயல்பாடுகளும் ஜனநாயகமாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய அளவில் நேரடி ஜனநாயகம் அதன் தூய வடிவில் சுவிட்சர்லாந்தில் அப்பென்செல், இன்னர்ஹோடன் மற்றும் கிளாரஸ் மாகாணங்களில் நடைமுறையில் உள்ளது. சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சி அமைப்பில் பகுதியளவிலான நேரடி ஜனநாயகம் நடைமுறையில் உள்ளது. நேரடி ஜனநாயகத்தின் வலுவான கருவிகளைக் கொண்ட பிரதிநிதித்துவ ஜனநாயகமாக சுவிட்சர்லாந்து உள்ளது. நகராட்சியிலிருந்து கூட்டாட்சி மட்டம் வரை சுவிட்சர்லாந்தில் நேரடி ஜனநாயக முறைகள் செயல்பாட்டில் உள்ளன.

இதுவரை மக்கள் தொகையை காரணமாகக் கூறியே நேரடி ஜனநாயக முறையானது புறக்கணிக்கப்பட்டது. மக்கள்தொகை அதிகமுள்ளதால் அனைத்துக் குடிமக்களும் அரசியல் செயல்பாடுகளில் பங்கேற்பது நடைமுறையில் சாத்தியமில்லை, அதனால் மக்களுக்கு பதிலாக பிரதிநிதிகளின் அரசியல் பங்கேற்பின் மூலம் மட்டுமே ஜனநாயகத்தை செயல்படுத்த முடியும் என்று கூறியே இதுவரை நேரடி ஜனநாயக முறைகள் தட்டிக் கழிக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்றைய நவீன மின்னணு யுகத்தில் இத்தகைய காரணம் அதன் காலப் பொருத்தப்பாட்டை இழந்து விட்டது என்பதால் மீண்டும் அதைச் சொல்லியே நேரடி ஜனநாயகத்தைப்

புறந்தள்ளலாகாது. தகவல் தொழில்நுட்ப வசதிகளை அனைத்து மக்கள் தரப்பினருக்கும் கிடைக்கச் செய்வதன் மூலம் அவர்களை நேரடியாக அரசியல் செயல்பாடுகளில் பங்குபெறச் செய்ய இயலும். நேரடி ஜனநாயகத்தின் முக்கியக் கருவிகளாக மக்கள் முன்னெடுப்பும் (Popular Initiative), பொதுவாக்கெடுப்பும் (Referrendum) உள்ளன. மக்கள் முன்னெடுப்பின் மூலம் புதிய சட்ட முன்வரைவுகளை, சட்ட மாற்றங்களைக் கொண்டுவர முடியும், நடைமுறையில் உள்ள சட்டங்களைத் திரும்பப் பெறச் செய்ய முடியும், ஒரு குறிப்பிட்ட பிரச்சனை, கொள்கை, குறித்து மக்களால் அங்கீகரிக்கப்பட்ட முடிவுகளைப் பெறுவதற்காக பொதுவாக்கெடுப்பை முன்னெடுப்புச் செய்ய முடியும். நாடாளுமன்றத்தில் / சட்ட மன்றத்தில் இயற்றப்படும் சட்டங்கள், கொள்கைகள் மக்களின் அங்கீகாரத்தைப் பெறும் வகையில் பொதுவாக்கெடுப்பை முன்னெடுக்க முடியும். இவ்வாறு அனைத்து மட்டத்திலும் அனைத்து தரப்பு மக்களின் பங்கேற்பை நேரடி ஜனநாயகத்தின் மூலம் உறுதி செய்ய முடியும். பிரதிநிதித்துவ ஜனநாயக முறையை விட நேரடி ஜனநாயக முறையின் மூலம் குடிமக்கள் அதிக அதிகாரங்களைப் பெறவும், எல்லா அரசியல் செயல்பாடுகளிலும் மக்களை பங்கேற்கச் செய்யவும், மக்களின் அங்கீகாரத்துடன் செயல்படுத்தும் ஒரு உண்மையான ஜனநாயகத்தை உறுதி செய்யவும் முடியும். இன்றைய காலகட்டத்தில் நம்முடைய அனைத்து சமூக அரசியல் பிரச்சனைகளுக்கும் நேரடி ஜனநாயகத்தின் மூலம் தீர்வு பெற முடியும் என்பதால் அதன் முக்கியத்துவத்தையும், அதைப் பற்றிய விழிப்புணர்வையும், பரவலாக்கி ஜனநாயகமாக்க வேண்டும். அவ்விதத்தில் "சண்டையை நிறுத்துங்கள் வாக்கெடுப்பைத் தொடங்குங்கள்" என்ற இந்த சர்வதேசப் பிரச்சார இயக்கத்தை நாம் ஆதரிக்க வேண்டும். இன்றைய உலகளாவிய சர்வதேச அரசியல், கட்டமைப்பு முதலாளித்துவ உள்ளடக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. அந்தக் கட்டமைப்புக்குள்ளே பிரச்சனைகள் அனைத்தையும் தீர்க்க முனைவது ஒரு குறைபாடாக இருந்த போதும், எல்லைகளைக் கடக்க எல்லைகளுக்குள்ளிருந்துதானே போராட்டத்தைத் தொடங்க வேண்டும். காலப் போக்கில் நடைமுறைச் சிக்கல்களுக்கான தீர்வு மக்களின் கைக்குச் செல்லும் போது இக்குறுகிய வரம்புகளைக் கடந்து, எல்லைகளை விரியச் செய்ய முடியும் என்பதால் "சண்டையிடுவதை நிறுத்துவோம், வாக்கெடுப்பை தொடங்குவோம்" எனும் பிரச்சார இயக்கத்தை நாமும் ஆதரிப்போம். தமிழ்நாட்டிலும், இந்திய அளவிலும் இந்த இயக்கத்தை வலுப்படுத்துவோம், வளர்த்தெடுப்போம். சண்டையிடுவதை நிறுத்துவோம் என்பது போராட்டத்தைக் கைவிடுவதல்ல. போராட்டத்தை வேறொரு வடிவில் முன்னெடுத்துச் செல்வதையே குறிக்கிறது. போராட்டத்தை முன்னெடுப்போம். நேரடி ஜனநாயகத்தைக்

கைக்கொண்டு செயல்படுத்துவோம்.

---

சமந்தா

## கியூபாவின் புரட்சிப் பெண்கள் (5)

## டெட்டே பியூப்லா :

### புரட்சிக்கு முன்:



டெட்டே என செல்லமாக அழைக்கப்படும் பியூப்லாவின் முழுப்பெயர் டெல்சா எஸ்தர் பியூப்லா வில்ட்ரே. டெட்டே 1940 டிசம்பர் 9ஆம் நாள் கியூபாவின் சியரா மேஸ்ட்ரா மலைகளின் அடிவாரத்தில் உள்ள யாராவில் ஒரு ஏழ்மையான விவசாயக் குடும்பத்தில் ஒன்பது குழந்தைகளில் ஒருவராய்ப் பிறந்தார், அவருக்கு மொத்தம் எட்டு சகோதரர்கள். அவரின் தந்தை ஒரு சிறு நிலத்தில் விவசாயம் செய்து வந்தார். தாயார் வீட்டு வேலைகளைச் செய்து வந்தார். பியூப்லாவை அவரின் தாத்தா பாட்டி வளர்த்தனர். சுறுசுறுப்பான டெட்டே குதிரைச் சவாரி, நீச்சல், நடனம் என அனைத்திலும் படுசுட்டி. அவர் மன்ஸானில்லோவில் உள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்து வந்தார். அவரது குடும்பத்தினர் அனைவருமே பாத்திஸ்டாவின் ஆட்சியைக் கவிழ்க்கப் போராடும் ஜூலை 26 இயக்கத்தில் இணைந்திருந்தனர், டெட்டே சின்னப் பெண்ணாக இருந்த போதிலும், இயக்கத்தின் நடவடிக்கைகளில் அவர்களுக்கு உதவினார். யாராவில் உள்ள அவர்களது வீடு அப்பொழுது நகர்ப்புறத்தில் புரட்சியாளர்களின் தலைமையகமாக இருந்தது.

### புரட்சியில்:

1956ஆம் ஆண்டில், ஜூலை 26 இயக்கத்தில் சேர்ந்தார். இயக்கத்தில் சேர்ந்த போது அவருக்கு வயது 15தான். அவர் இயக்கத்தின் தலைமறைவு வேலைகளில் ஈடுபட்டார். டெட்டே பாத்திஸ்டா அரசுக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். மின் இணைப்புகளைத் துண்டித்தார், காவல்துறையினரின் கார் டயர்களின் காற்றை பிடுங்கினார். போராளிகளுக்குத் தேவையான ஆயுதங்கள், மருந்துகள் ஆகியவற்றை அரசுக் காவல் படைக்குத் தெரியாதவாறு கடத்தினார், ஆயுதங்களையும், தோழர்களையும் சியராவுக்கு அனுப்புவதிலும், போருக்கான நிதிப்பத்திரங்களை விற்று நிதி திரட்டினார்.

சியரா மிஸ்ட்ராவில்:

டெட்டேவுக்கு நீண்ட நாட்களாகவே சியரா மேஸ்ட்ரா மலைகளில் உள்ள கெரில்லாப் படையில் இணைய வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. இயக்கத்துக்குப் பயனுள்ள முறையில் பாத்திஸ்டா படைகளுக்குத் தெரியாதவாறு ஒருவரால் சமவெளியில் வேலைசெய்ய முடியும் வரை இயக்கம் அவரை சியரா மேஸ்ட்ராவின் கெரில்லாப் படைகளில் இணைய அனுமதிப்பதில்லை. ஜூலை 26 இயக்கத்தின் உறுப்பினர் ஒருவரை அரசுப் படையினர் பிடித்துச் சித்திரவதை செய்த போது, அவர் டெட்டே ஜூலை 26 இயக்க வேலைகளில் ஈடுபடுவதை பாத்திஸ்டாவின் காவல் படையினரிடம் கூறி விட்டார். அதற்குப் பிறகு அவர் நகரில் இருப்பது ஆபத்துதானே" அவர் 1957இல் கெரில்லாப் போராளிகளின் படையில் சேர்வதற்காக சியரா மேஸ்ட்ரா மலைகளுக்குச் சென்றார். போராளிகளின் முகாமுக்குச் சென்ற போது அங்கிருந்த ஒருவர் டெட்டேவைப் பார்த்து இந்தச் சளிமூக்குக் குழந்தை இங்கு என்ன செய்கிறது என்று கேட்டுள்ளார். ஆனால் ஃபிடல் காஸ்ட்ரோ ஆதரவாக டெட்டேயை நிமிர்த்தி பிடித்தவாறே உற்சாக மிகுதியால் நாம் போரில் நிச்சயமாக வென்று விடுவோம் என்று கூறி டெட்டேவுக்கு என்ன வயது எனக் கேட்டுள்ளார். எங்கே தன்னை சிறியவளாகக் கருதி படையில் சேர்க்க மறுத்து விடுவாரோ என்று டெட்டே ஒரு வயதைக் கூட்டி தனக்கு 17 வயதென ஃபிடலிடம் கூறியுள்ளார். ஃபிடல் டெட்டேவை அங்கேயே தங்க அனுமதித்துள்ளார். டெட்டே ஆரம்பத்தில் சிலியாவின் உதவியாளராகச் செயல்பட்டுள்ளார். சமையல் செய்தல், கழுவுதல், தையல், செய்தி அனுப்புதல். காயமடைந்தவர்களைப் பராமரித்தல் என அனைத்து வேலைகளிலும் உதவியுள்ளார். கெரில்லா ஆயுதப் படையில் விவசாயிகளே பெருமளவு இருந்தார்கள். டெட்டே படிக்க இயலாத தோழர்களுக்கு அவர்களின் உறவினர்கள் அனுப்பிய கடிதங்களைப் படித்துக் காட்டினார், அவர்களுக்காகக் கடிதம் எழுதிக் கொடுத்தார். அவர்களுக்குப் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தார், இவை அனைத்தையும் செய்த போதும் டெட்டே முதன்மையாக விரும்பியது துப்பாக்கி ஏந்தி சண்டை போடவே. போர்க்களத்திற்குத் தன்னை அழைத்து செல்லுமாறு அவர்களிடம் கெஞ்சியுள்ளார். ராவுல் காஸ்ட்ரோ அவரை ஒரொ டெ குய்சா விற்கு அழைத்துச் சென்றுள்ளார், ஆனால் அங்கு ஃபிடல் அவரைச் சண்டையிட அனுமதிக்கவில்லை. 1958 கோடைக் காலத்தில் சியரா மேஸ்ட்ராவில் உள்ள கெரில்லாப் படைகளை முற்றிலுமாக அழிப்பதற்கென பாத்திஸ்டா படையினர் தாக்குதல்கள் தொடுத்ததால் போராட்டம் தீவிரமடைந்தது. பியூப்லா தொலைதூரத்தில் இருந்த போராளிகளுக்கு உணவுப் பொருட்களைக் கழுதைகளில்

கொண்டுசென்றுள்ளார்.

கெரில்லாப் போராளிகள் நூற்றுக் கணக்கான பாத்திஸ்டா இராணுவத்தினரைப் பிடித்திருந்தனர். அவர்களுள் சிலர் மோசமாகக் காயமடைந்திருந்தனர். போர்க் கைதிகளை ஜூலை 26 இயக்கமும், பாத்திஸ்டா இராணுவத்தினரும் நடத்தும் முறை முற்றிலும் வேறுபட்டிருந்தது. பாத்திஸ்டா படையினர் பிடிபட்டவர்களை சித்திரவதை செய்து கொன்றனர். ஆனால் ஜூலை 26 இயக்கத்தின் கெரில்லா படையினர் போர்க் கைதிகளின் காயங்களுக்கு மருந்தளித்தனர். அவர்கள் தங்களுக்குப் பகையான பாத்திஸ்டா படையைச் சேர்ந்திருந்த போதும் அவர்களை நேயத்துடன் நடத்தினர். எந்த அளவுக்கு என்று பார்த்தால் அதில் யார் கைதிகள், யார் போராளிகள் என்று பிரித்துப் பார்க்க முடியாதவாறு, அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டனர். இதில் சகோதரர்கள், உறவினர்கள் சந்தித்து கொண்ட தருணங்களும் இருந்ததாம்.

போர்க்கைதிகள் அனைவரையும் கெரில்லாப் படைகளால் பராமரிக்க முடியாததால், செஞ்சிலுவை சங்கத்திடம் அவர்களை ஒப்படைக்க வேண்டியிருந்தது. தற்காலிகப் போர்நிறுத்தத்தை ஏற்படுத்தியபிறகுதான் அதைச் செய்ய முடியும், ஆனால் அதற்கு பாத்திஸ்டா அரசின் இராணுவம் மறுத்தது. இந்தத் தடங்கலைச் சரிசெய்ய சே குவேரா தற்காலிகப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த ஒரு பெண்ணைத் தூதுவராக அனுப்பலாம் என்று ஒரு திட்டத்தை முன்மொழிந்தார். ஒரு ஆணைத் தூதுவராக அனுப்பினால் அவர்கள் கொன்று விடுவார்கள் டெட்டே சின்னப் பெண் என்பதால் அவரை அவ்வாறு செய்ய மாட்டார்கள் என எண்ணி அவரையே தூதுவராக அனுப்ப முடிவு செய்தனர். டெட்டேயும் அதில் இருக்கும் ஆபத்து தெரிந்திருந்தும் செல்வதற்கு ஒப்புக் கொண்டார்.

அது எவ்வளவு கடினமான பணி என்பதையும், ஒரு பெண் அந்த செய்தியை எடுத்துச் செல்வதன் முக்கியத்துவம் பற்றியும் சே குவேரா டெட்டேவுக்கு விளக்கியுள்ளார். ”டெட்டே, மூன்று விசயங்கள் நேரிடலாம், ஒன்று அவர்கள் போர் நிறுத்தத்தை ஒப்புக் கொள்ளலாம், அப்படி இருந்தால் நல்லது. ஒரு வேளை அவர்கள் உங்களைக் கொன்று விடலாம். இல்லையென்றால் உங்களை போர்க்கைதியாக்கி சிறைப்படுத்த பயமாவுக்கு அனுப்பலாம், அதனால் பயாமாவுக்குச் செல்ல உங்களை அவர்கள் அழைத்தார்கள் என்றால் நீங்கள் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது, இல்லையென்றால் போர்நிறுத்த உடன்பாடு மேற்கொள்ள முடியாது. ஆனால் எப்படியாவது போர்நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் சே குவேரா கூறியுள்ளார்.

டெட்டே போர்நிறுத்தத் தூதுவராக ஒரு வெள்ளைக் கொடியுடன் கழுதையில் அமர்ந்து

புறப்பட்டுள்ளார். இராணுவ விமானங்கள் குண்டு மழை பொழிந்ததில், கழுதை டெட்டேவைக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிட்டது பிறகு கால்நடையாகவே பாத்திஸ்டா படையின் முகாமிற்குச் சென்றுள்ளார். அங்குள்ள காவலாளியிடம் சே குவேராவிடமிருந்து செய்தியுடன் வந்திருக்கிறேன், தளபதியைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுள்ளார். செய்தியைத் தன்னிடம் காட்டுமாறு காவலாளி கேட்டுள்ளார். தளபதியிடம் மட்டுமே அதை அளிக்க முடியும் என டெட்டே மறுத்துள்ளார். பின்னர் சே கையெழுத்திட்ட கடிதத்தை டெட்டே தளபதியிடம் கொடுத்துள்ளார். படைத் தளபதி ஒரு கொடிய வன்முறையாளர். அவர் முதலில் போர்நிறுத்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. தோற்றுப் போன போர்க் கைதிகளை ஏற்றுக் கொள்வது தங்களது இராணுவப் படையினரின் ஒழுங்கைக் குலைக்கும் என்று மறுப்பு தெரிவித்துள்ளார். அங்கிருந்த மற்றவர்களிடம் அவர்களது ஆட்களைத்தான் நம்மிடம் அனுப்பப் போகிறார்கள் என்றும் கூறியுள்ளார். டெட்டே அதை மறுத்தவாறு உங்கள் தோழர்களைத்தான் ஒப்படைக்கப் போகிறோம் எனக் கூறியுள்ளார். டெட்டேவை பயாமாவிற்கு அனுப்புவதாக அச்சுறுத்தியுள்ளார்.

டெட்டே உறுதியாக இருந்ததால் இறுதியாகத் தற்காலிகப் போர் நிறுத்தத்திற்கு சம்மதித்துள்ளார். டெட்டேயின் வருகைக்காக காத்திருந்த தோழர்கள் அவர் எந்த ஆபத்தும் நேரிடாமல் வெற்றியுடன் திரும்பி வருவதைப் பார்த்தவுடன் நிம்மதியடைந்தவர்களாக, டெட்டேயை ஒருவர் பின் ஒருவராகத் தோள்களில் தூக்கியுள்ளனர். பிறகு டெட்டே ஃபிடல் அளித்த பதிலுடன் மீண்டும் பாத்திஸ்டா இராணுவ முகாமிற்குச் சென்றுள்ளார். இவ்வாறு தற்காலிகப் போர்நிறுத்தம் கொண்டுவரப்பட்டு 253 போர்க் கைதிகள் செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். போர் நிறுத்தம் 48 மணி நேரம் நீடித்தது.

டெட்டேவின் துணிவுமிக்க இச்செயல்பாடு பெண்களுக்கான ஆயுதப் படையை உருவாக்குவதில் ஓரடி முன்வைக்கக் காரணமானது. செப்டம்பரில் பெண்களுக்கான ஆயுதப்படையை உருவாக்குவதற்காக ஃபிடல் லா பிளாட்டா மருத்துவமனையில் ஒரு சந்திப்பை ஏற்படுத்தினார். அந்த யோசனை பிடிக்காத சில தோழர்கள் கோபமடைந்தனர், அவர்களில் முக்கிய எதிர்ப்பாளர்களாக எடி சுனோலும், மருத்துவர் பெர்னாபே ஓர்டாஸும் இருந்ததாக டெட்டே கூறுகிறார். ஆயுதமில்லாமல் ஆண் போராளிகள் இருக்கும் போது ஒரு பெண்ணுக்கு எப்படி ஆயுதம் கொடுக்கலாம் என்றும், பெண்கள் தவளை அல்லது பல்லியைப் பார்த்தால் துப்பாக்கியைக் கைவிட்டு எதிரிகளிடம் சரணடைவார்கள் என்றும் அவர்கள் அவநம்பிக்கை தெரிவித்துள்ளார்கள். ஆண்கள் சம்மதிக்காததால் பெண்கள் சார்பில் அவர்களுடன் ஃபிடல் 7 மணி

நேரம் போராட வேண்டியிருந்தது. பெண்கள் உங்களை விட சிறந்த வீரர்கள் என்றும், பெண்களின் ஆயுதப்படை தனது மெய்க்காப்பாளர் பிரிவாக இருக்கும் என்றும் ஃபிடல் அறிவித்தார்

ஃபிடல் பெண் போராளிகளுக்குத் துப்பாக்கி சுடவும் ஆயுதங்களைக் கையாளவும் பயிற்சி அளித்தார். அவர்கள் 20-30 மீட்டர் தொலைவிலுள்ள 20 செண்ட் நாணயத்தை துப்பாக்கியால் துளைக்க வேண்டும் என்றும், இலக்கைச் சிறப்பாகச் சுடுபவரே அணியின் தலைவராக நியமிக்கப்படுவார் என்றும் பிடல் தெரிவித்தார்.. இசபெல் ரியோலோ ஒரு சிறிய வித்தியாசத்தால் பியூப்லாவை வென்றுள்ளார். முதன்மைத் தலைமை இசபெல் ரியோலோவுக்கும், இரண்டாம் தலைமை டெட்டேவுக்கும் அளிக்கப்பட்டது. 1958 செப்டம்பர் 4 அன்று ஃபிடல் மற்றும் சிலியாவின் பெருமுயற்சியால் மகளிர் ஆயுதப் படை உருவாக்கப்பட்டது. கியூப சுதந்திரப் போரின் கதாநாயகியான மரியானா கிராஜெல்ஸுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அவரது பெயரே மகளிர் ஆயுதப் படைக்குச் சூட்டப்பட்டது. ஆரம்பத்தில் மரியானா கிராஜெல்ஸ் படையினருக்குக் கனமான ஆயுதங்களே பயிற்சிக்காகத் தரப்பட்டன. எடை குறைவாகவும் சுமந்து செல்ல எளிதாகவும் இருக்கும் எம்-1 கார்பைன் துப்பாக்கிகள் மகளிர் படைக்குழுவிற்கு வழங்கப்பட்டன. மகளிர் ஆயுதப் படையில் முதலில் எட்டுப் பெண்கள் இருந்தனர். பின்னர் பதினைந்து பேராயினர். இருவர் நோய்வாய்ப்பட்டதால் போர் முடிவுறும் போது அதில் பதின்மூன்று பேர் இருந்தனர்.

1958 அக்டோபர் 9, முதன்முதலாக நான்கு பெண்கள் சமவெளியில் போராடப் போகும் போது அவர்களின் தளபதியாக கேப்டன் எடி சுனோலை ஃபிடல் நியமித்துள்ளார். ஆனால் அவர் பெண்களுடன் செல்ல ஒத்துக் கொள்ளவில்லை. அப்படியென்றால் உங்களை சமவெளிக்கு அனுப்பப் போவதில்லை என ஃபிடல் எச்சரித்துள்ளார்.

மரியானா கிராஜெல்ஸ் படையினர் முதல் போரிலே நன்மதிப்பைப் பெற்றனர். இரண்டாம் போரில் சுற்றி வளைக்கப்பட்ட போதும், சரணடையாமல் எதிரிகளின் 11 துப்பாக்கிகளைக் கைப்பற்றினர். ஹொல்குயின் அணை, செர்ரோ பெலடோ, லொஸ் குய்ரொஸ், வெலஸ்கோ, லா செடெனா, கிபரா, உனஸ், புயிர்டோ பட்ரே, குய்சா, மஃபோ ஆகிய பல்வேறு இடங்களில் ஆயுதமேந்திச் சண்டையிட்டனர். புரட்சிப் படையின் செய்தித் தூதுவர்களாகவும் செயல்பட்டனர்.

போர் முடிவடைவதற்கு முன்னர், ஃபிடலுக்கு சுனோல் ஒரு கடிதம் எழுதினார், அதில் அவர் தான் முன்னர் கருதியது தவறு என்றும், போரில் பெண்களின் வீரத்தை அங்கீகரித்தும், தனக்கு ஏற்பட்ட மனமாற்றத்தைத் தெரிவித்துள்ளார். “பெண்களை ஒருங்கிணைப்பதற்கு எதிர்ப்புத்

தெரிவித்த முதன்மையான எதிர்ப்பாளராக நான் இருந்த போதும் இப்பொழுது எனக்கு முற்றிலும் மனநிறைவு ஏற்பட்டுள்ளது என்பதை உங்களிடம் கூற வேண்டும். பெண் போராளிகள், குறிப்பாக டெட்டே சிறப்பாகச் செயல்பட்டனர். முன்னேறுங்கள் என ஆணை பிறப்பிக்கும் போது, சில ஆண்கள் பின் தங்கினர். ஆனால் பெண்கள்தான் முன்னணியாக சென்றனர், அவர்களது துணிவும், அமைதியும்,போராளிகள் மற்றும் எல்லோருடைய நன்மதிப்பையும், பாராட்டுதலையும் பெற்றுள்ளது."

ஃபிடல் இன்னொரு ஆயுதப்படையை உருவாக்க தீர்மானித்திருந்ததாகவும், ஆனால் அதைச் செய்வதற்குள் போர் முடிவடைந்தது எனவும் டெட்டே குறிப்பிட்டுள்ளார்.

சியராவில் தங்கள் வாழ்க்கை குறித்து டெட்டே பின்வருமாறு கூறுகிறார்.

சியராவில் நாங்கள் ஒரு நாடோடிப் படையாக இருந்தோம். அங்கு வாழ்க்கை மிகவும் கடினமாகவும் மிகுந்த தியாகங்களைக் கோருவதாகவுமாக இருந்தது அங்கே போதுமான உணவு, மருந்து, உடைகள், காலணிகள் இல்லை, நாங்கள் லியானா கொடியின் நீரைக் குடித்தோம். உடுத்திய ஆடையைத் தவிர மாற்றுடை இல்லை. பிடலுக்கும் ஒரே சீருடை மட்டுமே இருந்தது. அந்தச் சீருடையைத் துவைத்துக் காயவைக்கும் போது விமான சத்தம் கேட்டால் ஈர உடையை அணிந்தவாறே ஃபிடல் ஓடுவார். ஃபிடல், ராவுலின் காலணிகள் பிய்ந்து கம்பிகளால் தைக்கப்பட்டிருந்தன. தலைவர்களாக இருப்பதால் எந்தவிதமான சலுகையும் அவர்கள் பெறவில்லை. ஃ பிடல், ராவுல், சே, காமிலோ மற்றும் அல்மேடா ஒருபோதும் தங்களை உயர்ந்தவராகக் கருதவில்லை. நாங்கள் அனைவரும் ஒரே மாதிரிதான் இருந்தோம். மக்களுக்குக் கொடுக்க எங்களிடம் பணம் இல்லாத போது, கையெழுத்திட்ட பணத்திற்கான உறுதிச் சீட்டுகளை கொடுத்தோம், புரட்சியின் வெற்றியின் பின்னர், சிலியா அவர்கள் அனைவருக்கும் அதற்கான பணத்தைக் கொடுத்தார்.

## புரட்சிக்குப் பின்:

புரட்சியின் வெற்றிக்குப் பின் நம்மிடம் எவ்வளவு பணம் உள்ளது என சிலியாவிடம் ஃபிடல் கேட்டுள்ளார். சிலியா 1,700 பெசோக்கள் என்று பதிலளித்தார். அதில் 700 பெசோக்களை டெட்டேவிடம் கொடுக்கச் சொன்ன ஃபிடல், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், உயிரிழந்த, கைது செய்யப்பட்ட பாத்திஸ்டா படையினரின் உறவினருக்கும் அதைக் கொண்டு உதவ கிழக்கு நோக்கிச் செல்லும் படி டெட்டேயிடம் கூறியுள்ளார். ஃபிடலும் செலியாவும்

போரில் பாதிக்கப்பட்ட அனைவரையும் அக்கறையுடன் பராமரிக்க வேண்டும். அவர்கள் எந்தத் தரப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், பெற்றோர் செய்த தவறுகளைக் குழந்தைகள் மீது சுமத்தக் கூடாது என்று அறிவுறுத்தினர், துயரம் என்று வரும் போது தாய்நாடு பாகுபாடு காட்டாது. ஏனென்றால் இது ஒரு புரட்சி. ஒரு குழந்தையைக் காப்பாற்றுவது தாயகத்தைக் காப்பாற்றுவதாகும் என்று தனக்கு அவர்கள் கற்றுத் தந்து தன்னை ஒரு சிறந்த மனிதராக மாற்றியதற்காக அவர்களுக்கு எப்போதும் நன்றி செலுத்துவதாகவும் டெட்டே கூறியுள்ளார்.



பொறுப்புகள்:

டெட்டே போரால் பாதிக்கப்பட்டவர்களையும், அவர்களது குடும்பங்களையும் பராமரிப்பதற்கான துறையின் இயக்குநராக 1959 பிப்ரவரி முதல் பொறுப்பேற்றார். 1960 களில், பாத்திஸ்டாவின் ஆட்சியாலும், எஸ்காம்ப்ரே போரினாலும் (புதிய புரட்சிகர அரசிற்கும், சி.ஐஏ ஆதரவுடனான எதிர்ப் புரட்சிக் குழுக்களுக்கும் இடையிலான 6 வருடப் போர்), மற்றும் அமெரிக்காவின் பன்றிகள் விரிகுடா படையெடுப்பினாலும் பாதிக்கப்பட்டவர்களையும் அவர் பராமரித்தார். எரிக்கப்பட்ட வீடுகளை மறு நிர்மாணம் செய்வது, அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ய்ப்பைப் பெற உதவுவது, பள்ளிகள் கட்டுவது, ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்கான காப்பகம் அமைப்பது எனப் பல்வேறு திட்டங்களை அவர் செயல்படுத்தினார்.

பிப்ரவரி 1963இல், கிழக்கு இராணுவத்தின் பொதுப் பணியாளர்களுக்கான கல்வித் துறைக்கு அவர் பொறுப்பேற்றார், 1964 ஆகஸ்ட் முதல் மேற்கு இராணுவத்தில் போரில் அனாதைகளாக்கப்பட்ட ஆதரவற்ற குழந்தைகளின் சமூகப் பாதுகாப்புக்கான குழந்தைகள் பண்ணைகளுக்கு அவர் பொறுப்பேற்றார்

1985ஆம் ஆண்டில் அவர் படைவீரர்கள் மற்றும் புரட்சியின் தியாகிகளைப் பராமரிப்பதற்கான துறையின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். போராளிகளின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு வழங்கினார்

1966 ஏப்ரல் முதல் சர்வதேசத் தொண்டுகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் கியூபர்களின் குடும்பங்களுக்கு உதவும் சிறப்புப் பிரிவில் பணியாற்றினார். 1969 மார்ச்சில் ஜாரூகோவில் குயிகனமர் கால்நடைத் திட்டத்திற்கு இயக்குனராகவும் செயல்பட்டார். அதே

மாகாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் இராணுவப் பிரிவிற்கும் அவர் தலைமை வகித்தார். 1978இல், ஹவானாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் இராணுவப் பிரிவின் தலைவரானார்.

1980ஆம் ஆண்டில் ஹவானாவில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் மாகாணக் குழுவிற்கும் அதன் கருத்தியல் ஆணையத்திற்கும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1980 -1986 வரை கியூப கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய குழு உறுப்பினராக செயல்பட்டார் .

கியூபா நாடாளுமன்றத்தின் மக்கள் அதிகார தேசிய சட்டமன்றத்தில் உறுப்பினராகவும் டெட்டே செயல்பட்டர். 2001 டிசம்பர் 2ஆம் நாளில் கியூபாவின் மிக உயர்ந்த கவுரவமான கியூபா குடியரசின் நாயகி விருது பிடல் காஸ்ட்ரோவால் டெட்டேவுக்கு வழங்கப்பட்டது

டெட்டே ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக புரட்சிகர ஆயுதப் படையில் உறுப்பினராக இருந்து வருகிறார். கியூபாவின் படைவீரர் விவகார அலுவலகத்தின் தலைவராகவும் உள்ளார். 1994ஆம் ஆண்டில் அவர் கர்னலாகப் பதவி உயர்வு பெற்றார், மேலும் 1996 ஜூலை 24 அன்று அவர் படைப்பிரிவின் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றார், கியூபாவின் வரலாற்றில் முதல் பெண் ஜெனரலாகப் பொறுப்பேற்ற பெருமைக்குரியவர் டெட்டே பியூப்லா.

டெட்டேவை ஜெனரலாக பதவி உயர்வு செய்வதற்காக ஃபிடல் காஸ்ட்ரோவால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பின்வருமாறு அவரைப் போற்றுகிறது.

"மக்களுக்காக முதல் கிளர்ச்சி இராணுவம் மற்றும் புரட்சிகர ஆயுதப் படைகளின் அணிகளில் பங்குபெற்று முன்மாதிரியாகச் செயல்பட்ட பியூப்லா எல்லா காலத்திலும் நம் வீரப் பெண்களின் புகழ்மிக்க அடையாளமாகத் திகழ்வார்."

1960 முதல் கியூபா பெண்கள் கூட்டமைப்பின் உறுப்பினராக உள்ளார். அனா பெட்டான்கோர்ட் பள்ளியில் விவசாயப் பெண்களை இணைப்பதில் அவர் பங்களித்தார், அங்கு ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் தொழிற் பயிற்சியும், வழிகாட்டலும் பெற்றனர். 1980 முதல் 1989 வரை அவர் எஃப்.எம்.சி தேசியக் குழுவிலும் ஹவானா மாகாணக் குழுவிலும் பணியாற்றினார்.

குடும்ப வாழ்வு:

பியூப்லா 1960இல், கியூப புரட்சிகர ஆயுதப் படைகளின் அதிகாரியான ரவுல் காஸ்ட்ரோ மெர்கேடரை மணந்தார். அவர்கள் பிடல், ரவுல், லாரா என மூன்று ஆண் குழந்தைகள் பெற்றனர்.

**குடும்ப வாழ்வு குறித்து டெட்டேயின் கருத்து:**

ஒரு தலைவன், ஆணோ பெண்ணோ, தன் குடும்பத்தை விட்டு வெளியேறி, அவர்களைச்

சரியாகக் கவனித்துக் கொள்ளவில்லை என்றால், அவரால் சிறந்தவராக இருக்க முடியாது. புரட்சி புனிதமானது, குடும்பமும் கூட. பொதுவாக, வீட்டிலும், வெளியிலும் வேலை செய்வது கடினம். குழந்தைகள் வந்தால், கூடுதல் தேவைகள் ஏற்படுவதால், வேலைகள் அதிகரிக்கும், மற்றவர்களிடமிருந்து உதவியும் தேவைப்படும்.

“என் குழந்தைகள் சிறு வயதாக இருக்கும் போது என் குடும்பத்தினரிடமிருந்தும், என் சகோதரர்களிடமிருந்தும் எனக்கு நிறைய ஆதரவு இருந்தது… நான் எங்கு சென்றாலும் அவர்கள் என்னுடன் வருவார்கள், அது ஒரு கூடாரமாக இருந்தாலும் கூட. அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த போது, அது சிக்கலாக இல்லாத வரை, நான் அவர்களை என்னுடன் அழைத்துச் செல்வேன்.”

"தற்போது என் குழந்தைகள் கட்சி உறுப்பினர்கள், அவர்கள் என்னை நிறைய ஊக்குவித்துள்ளனர், ஏனென்றால் நான் போராளிகளுக்குச் சேவை செய்வது மட்டுமல்லாமல், அறுவடைப் பணிகளிலும் இருந்தேன், நான் தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர், நான் பாதுகாப்பு ஆணையங்களில் பணிபுரிகிறேன், நான் புரட்சிகர ஆயுதப்படையின் அதிகாரி, ஆனால் இவை எல்லாம் இருப்பினும் எதுவும் என் குடும்பத்திற்குச் செய்ய வேண்டியதிலிருந்து என்னைத் தடுக்கவில்லை. "

சியராவில் நாங்கள் அனைவரும் ஒரு பெரிய குடும்பமாக வாழ்ந்தோம், காலம் கடந்து விட்டாலும், நாங்கள் இன்னும் ஒருவருக்கொருவர் அப்படித்தான் நடந்து கொள்கிறோம். நான் பல தோழர்களின் சகோதரி. அவர்கள் என்னை வேலையின் போதும், வீட்டிலும் அவ்வாறே அழைக்கிறார்கள்“ என்று கூறும் டெட்டேவுக்கு வீட்டிற்கும் அலுவல் வேலைகளுக்கும் இடையில் வரம்புகள் இல்லை.

“என் வாழ்நாள் முழுவதையும் புரட்சிக்கு அர்ப்பணித்தேன். நான் மீண்டும் பிறந்தால் அதையே செய்வேன். முதல் கியூபனாக இவ்வளவு உயர்ந்த இராணுவப் பதவியை வகிப்பது ஒரு பொறுப்பும், சிறப்பிற்குரிய மரியாதையும் ஆகும். நான் என் மக்களின் நம்பிக்கைக்கு மாறாக ஒருபோதும் செயல்பட மாட்டேன்.” என்று டெட்டே குறிப்பிட்டுள்ளார்.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகள் அனைத்தையும் டெட்டே திறம்பட செய்தார். சக தோழர்களால் மிகவும் நேசிக்கப்பட்ட டெட்டே அவர்களது இக்கட்டான தருணங்களில் அணுகத் தக்கவராகவும், உதவக் கூடியவராகவும் இருந்தார். கியூபாவில் பலருக்குத் தாயாகவும், சகோதரியாகவும் இருக்கிறார்.

புரட்சிக்காகவே பிறந்து, வாழ்ந்து, அர்ப்பணித்த வீரமிக்க டெட்டே பியூப்லா இன்னும் நெடுங்காலம் நல்ல உடல்நலத்துடன் வாழ்ந்து, தன் புரட்சிகர பணிகளைத் தொடர வேண்டும் என்று அவரை வாழ்த்தி வணங்குவோம். நம் செயல்பாடுகளால் அவரைப் போற்றிடுவோம்.

(தொடரும்)

---

## விடுதலை செய்!




**மக்கள் கவிஞர்
வரவர ராவ்,
ரோனா வில்சன்,
சுதா பரத்வாஜ்,
சுரேந்திர காட்லிங்,
சுதிர் தவலே,
கவுதம் நவ்லாக்கா,
ஷோமா சென்,
மகேஷ் ரவுத்,
அருண் பெரேரா,
வெர்மன்
கோன்சால்வஸ்,
ஆனந்த் டெல்டும்டே,
ஹாணி பாபு**

**அறிஞர்கள்,
பேராசிரியர்கள்,
வழக்கறிஞர்கள்,
மாந்தவுரிமைச் செயல்வீரர்களை**

**விடுதலை செய்!**

**பீமா கொரேகான் வழக்கைக் கைவிடு!**

**பேராசிரியர் ஜி.என்.சாய்பாபாவை விடுதலை செய்!**

**உல்பா சட்டத்தை நீக்கம் செய்**



சமந்தா

## நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (9)

## ஆசிரியர்: வெங்கடேஷ் ஆத்ரேயா

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற வெங்கடேஷ் ஆத்ரேயா அவர்கள் இந்தியாவின் தலைசிறந்த மார்க்சியப் பொருளாதார அறிஞர். உலக அரசியல் பொருளாதாரக் கூட்டமைப்பிடமிருந்து 21ஆம் நூற்றாண்டின் அரசியல் பொருளாதாரத்திற்கான சிறந்த சாதனையாளர் விருதைப் பெற்றவர்.

## தலைப்பு: மார்க்சின் ஆய்வு முறையும், சரக்கும்:

நாம் எதற்காக மார்க்ஸின் மூலதனத்தைப் படிக்க வேண்டும். நான் என்னைப் பற்றிய ஒரு சிறு குறிப்புடன் தொடங்குகிறேன். நான் பொருளாதாரத்தில் முனைவருக்கான ஆய்வுப் படிப்பிற்காக அமெரிக்காவுக்கு சென்றிருந்தேன். அங்கு வியத்நாம் மீது அமெரிக்கா ஏவிய ஏகாதிபத்தியப் போருக்கு எதிராக மாணவர் இயக்கங்கள் எழுச்சியுடன் வளர்ச்சி பெற்று வந்தன. உலகின் மிக சக்தி வாய்ந்த அமெரிக்கா, ஏன் வியத்நாம் எனும் சிறிய மூன்றாம் உலக நாட்டின் மீது போர் தொடுக்க வேண்டும் என்ற கேள்விக்கான பதிலை நான் படித்த பொருளாதாரப் புத்தகங்கள் தரவில்லை. அதன் பின்னர் நான் இரண்டாவது கல்விப் பருவத்தின் போது பல்கலைக்கழத்தில் இயங்கி வந்த மூலதனத்திற்கான மாணவர் வாசிப்பு வட்டத்தில் இணைந்தேன். மூலதன வாசிப்பு என் வாழ்வையே மாற்றியது.



மார்க்ஸ் 17 வயது இளைஞராக இருந்த போது அறிவுக் கூர்மையுடனும் முதிர்ச்சியுடனும் தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தை நீங்கள் படித்தீர்களானால், அவர் இளமைக் காலத்திலேயே தன் வாழ்க்கைப் பாதையைத் தேர்ந்தெடுத்திருந்ததையும், பொதுநலனுக்காக ஒருவர் வாழ்வதே சிறந்த வாழ்வு என்ற தெளிவுடன் இருந்ததையும் காண முடியும்.



## அரசியல் பொருளாதாரத்தில் மார்க்சின் ஆய்வு முறை:

ஒரு நுண்ணோக்கியையோ, வேதிக் கரணியையோ கொண்டு பொருளாராதார அமைப்புகளைப் பகுப்பாய்வு செய்ய இயலாது. அதற்கு பதிலாக அருவமாக்க முறைகளின் மூலமே பொருளாதாரத்தைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும். இவ்வுலகம் நம் உணர்வுநிலைக்கு அப்பால் தன்னிச்சையாக இயங்கி வருகிறது. உலகின் சமூக நிகழ்வுகளை அவை உள்ளபடியே உண்மையாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் கோட்பாட்டுக் கருத்தினங்களை நாம் உருவாக்க வேண்டும். அருவமாக்கத்தின் மூலமே உலகைப் படிக்க முடியும்,

## வரலாற்றுப் பொருள்முதல்வாதம்:

சமூகத்தை ஆய்வு செய்யும் மார்க்சிய ஆய்வு முறை வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என அழைக்கப்படுகிறது. வரலாற்றுப் பொருள்முதல்வாதம் சமூக வளர்ச்சியின் வரலாற்றை இயற்கையுடன் மனிதர்களுக்குள்ள உறவின் அடிப்படையிலும், மனிதர்களுக்கிடையிலான உறவுகளின் அடிப்படையிலும் உற்று நோக்குகிறது. சமூக உற்பத்தியிலிருந்தே மார்க்சிய ஆய்வு முறை தொடங்குகிறது. உற்பத்தி என்பது நம் இருத்தலுக்கு முற்றிலும் அவசியமானது. உற்பத்தியே மனிதனின் அடிப்படையான செயல்பாடாகவும் உள்ளது. உற்பத்திக்கு மிகவும் அவசியவமான உணர்வார்ந்த பயன்பாடுடைய செயல்முறைதான் மனித உழைப்பு என்பது. அதுவே மனிதத்தை வரையறுக்கிறது. உழைப்பு என்பது சமூகத்தன்மை கொண்டது. சமூக உழைப்பு இல்லாமல் உற்பத்தி செய்ய இயலாது. இங்கு சமூக உற்பத்தி என்பது அதன் இயற்கையான மற்றும் சமூக ரீதியான பொருளில் குறிப்பிடப்படுகிறது.

சமூகத்தின் உறுப்பினர்கள் தங்களை மறு உற்பத்தி செய்ய பொருளார்ந்த உற்பத்திச் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர். உற்பத்தியின் போது இயற்கைச் சக்திகளைக் கைக்கொண்டு இயற்கையை மாற்றுவதுடன், அச்செயல்பாடுகளால் மனிதர்களும் மாற்றத்திற்குட்படுகிறார்கள். மார்க்சிய முறையில் ஒரு மனித சமூகத்தை ஆய்வு செய்யும் போது அதன் இரண்டு முக்கியமான பகுப்பாய்வுக் கோட்பாடுகளாக உற்பத்தி சக்திகளும், உற்பத்தி உறவுகளும் உள்ளன.

கடந்த கால மற்றும் நிகழ்காலச் செயல்பாட்டு முறைகளின் மூலம் பெறப்பட்ட ஒட்டுமொத்தக் கோட்பாட்டறிவு, செயல்பாட்டு அறிவு, இயற்கைச் சூழலின் மீதான நம் ஆளுகை இவை அனைத்தையும் ஒன்று சேர்த்தே உற்பத்திச் சக்திகள் என மார்க்ஸ் குறிப்பிடுகிறார். உற்பத்திச் சக்திகள் என்பது தொழில்நுட்பத்தை மட்டும் குறிப்பதல்ல. இது உற்பத்திக்கான ஒருங்கமைப்பு முறைகள், உழைப்புப் பிரிவினை ஆகியவற்றையும் குறிக்கிறது. உற்பத்தி உறவுகள் என்பது சமூக உற்பத்தியில் ஈடுபடும் போது சமூக உறுப்பினர்களிடையே காணப்படும் உறவுகளைக் குறிக்கிறது. இது வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளையும் சமூகத்தின் உடைமை உறவுகளையும் குறிக்கிறது.

சமூகம் மறு உற்பத்தியில் ஈடுபடும் போது உற்பத்திச் சக்திகள் தொடர்ச்சியாக வளர்கின்றன .முதலாளித்துவ நெருக்கடியின் போதும் கூட உற்பத்தி சக்திகள் தேங்கி விடுவதில்லை, வளரவே செய்கின்றன. வளர்ந்து வரும் உற்பத்திச் சக்திகளுக்கும், பழைய உற்பத்தி உறவுகளுக்கும் இடையே காணப்படும் தவிர்க்க இயலாத முரண்பாடுகளே சமூக வளர்ச்சியின் வரலாற்று அடிப்படையிலான இயக்குசக்தியாக உள்ளன. உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும், ஒற்றுமையயும் (சார்புத் தன்மை), முரண்பாடுகளையும் கொண்டுள்ளன. உற்பத்திச் சக்திகளுடனான உற்பத்தி உறவுகளின் ஒற்றுமை (சார்புத் தன்மை) தற்காலிகமானதே தவிர நிரந்தரமானதல்ல. அவற்றிற்கிடையிலான உள்முரண்பாடுகள் தவிர்க்க இயலாதவை.

உற்பத்திச் சக்திகள் தொடர்ந்து வளர்ச்சிப் போக்கில் உள்ளன. ஆனால் உற்பத்தி உறவுகள் வளர்ச்சியின்றித் தேங்குவதால் பழமையடைகின்றன. அதனால் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகளோடு பொருத்தப்பாடுடையவை ஆகக் காணப்பட்டாலும், காலப் போக்கில் சமூக வளர்ச்சியின் போது உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் வளர்கின்றன. காலப்போக்கில் இம்முரண்பாடுகள் தீவிரமடைவதால் உற்பத்தி சக்திகளும், உற்பத்தி உறவுகளும் ஒன்றுக்கொன்று பொருத்தப்பாடிழந்து இணக்கமற்றவையாகின்றன. முரண்பாடுகளின் அளவில் ஏற்படும் வளர்ச்சி,

ஒரு கட்டத்தில் பண்பளவிலான பாய்ச்சலை ஏற்படுத்துகிறது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குப் பொருத்தப்பாடுடைய புதிய உற்பத்தி உறவுகள் உருவாகின்றன. சமூகப் புரட்சியின் மூலம் புதிய உற்பத்தி முறை உருவாகிறது. எந்தச் சமூக மாற்றமும் எந்திர கதியில் நடப்பதில்லை. பழைய உற்பத்தி முறையில் உள்ள அனைத்துமே குப்பைத் தொட்டிக்குச் செல்வதில்லை. நிலைமறுப்பு என்பது இயங்கியல் அடிப்படையுடையது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு உற்பத்தி முறையும் அதன் உள்ளார்ந்த சமூக முரண்பாடுகளால் தற்காலிகமானதே. உற்பத்தி முறை என்பது அடிப்படையில் அருவமாக்கப்பட்ட ஒரு கோட்பாடே. ஒரு சமூக அமைப்பில் ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையே ஓங்கிக் காணப்பட்டாலும் கூட உண்மையில் எந்த ஒரு சமூக அமைப்பும் ஒரே ஒரு உற்பத்தி முறையை மட்டுமே கொண்டிருப்பதில்லை. அமெரிக்காவில் முதலாளித்துவத்திற்கு மத்தியில் அடிமைமுறையும் இருந்தது. ஒரு சமூக அமைப்பு ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உற்பத்தி முறைகளையும், உற்பத்தி உறவுகளையும் கொண்டிருக்கலாம்.

வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் மூலம் சமூக உற்பத்தியும், உற்பத்தி உறவுகளும், சமூக உற்பத்தியில் வெவ்வேறு பாத்திரங்களை வகிக்கும் வர்க்கங்களுக்கிடையே காணப்படும் வர்க்கப் போராட்டமுமே வரலாற்றின் இயக்குசக்திகளாக உள்ளன என்பதைக் காணலாம். உற்பத்திச் சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் காணப்படும் உள்ளார்ந்த முரண்பாடுகளே சமூக மாற்றத்திற்கான இயக்கு விசையாக உள்ளன.

வரலாற்று பொருள்முதல்வாதம் என்பது பொருளாதாரக் குறுக்கல் வாதமல்ல. அதில் சித்தாந்தத்திற்கும், அரசியலுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. வரலாற்று பொருள்முதல்வாதத்தில் சமூகம் குறித்த அடித்தளம், மேல்கட்டுமானம் என்ற கருத்தாக்கம் உள்ளது. சமூகத்தில் உற்பத்திச் சக்திகளும், உற்பத்தி உறவுகளும் பொருளாதார அடித்தளமாகவும், அரசியல், சித்தாந்தம் ஆகியவை அதன் மேல்கட்டுமானாகவும் அறியப்படுகிறது. பொதுவாக சமூக வளர்ச்சியில் அடித்தளத்தின் நிர்ணயப் போக்கு ஓங்கிக் காணப்படும் என்ற போதிலும், மேல்கட்டுமானமும், பொருளாதார அடித்தளத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். எங்கெல்ஸ், பிளாக்குக்கு எழுதிய கடிதத்தில் வரலாற்றைத் தீர்மானிப்பதில் முதன்மையானதாக பொருளாயத உற்பத்தி நிகழ்வே இருக்கும் எனக் குறிப்பிட்டோமே ஒழிய பொருளாதாரக் கூறுகள் மட்டும்தான் வரலாற்றைத் தீர்மானிக்கும் என்ற பொருளில் நானோ, மார்க்ஸோ குறிப்பிடவில்லை என்று விவரித்துள்ளார்.

வரலாற்று அடிப்படையிலான சமூகப் பகுப்பாய்வின் போது பொருளாதார அடித்தளத்திற்கும், மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான உறவை பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம் ஆகியவற்றுக்கிடையிலான நேருக்கு நேரான தொடர்புகளாக எந்திர கதியாகப் பார்க்கக் கூடாது. அரசியலும், சித்தாந்தமும், ஒப்பளவில் சுயேச்சை தன்மை கொண்டது. பொருளாதார அடித்தளம், அரசியல், சித்தாந்தம் ஆகியவற்றில் காணப்படும் சமமற்ற வளர்ச்சிப் போக்கு முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறது. சமூகத்தைப் பற்றிய மார்க்சிய பார்வை என்பது ஹெகலிய வகையிலான எளிய ஒற்றை முழுமையல்ல. சிக்கலானக் கூறுகளை உள்ளடக்கிய முழுமை, அதில் காணப்படுவது ஒற்றை முரண்பாடு மட்டுமல்ல. அது முரண்பாடுகளின் கூட்டமைப்பாக உள்ளது.

மார்க்ஸ் பொருளாதாரம் என்று குறிப்பிடும் போது அதன் விரிவான அர்த்தத்தில் குறிப்பிடுகிறார். சமூக உற்பத்தியின் ஒட்டுமொத்தப் பொருளாயத நிலைகளையே பொருளாதார அடித்தளம் என மார்க்ஸ் குறிப்பிடுகிறார். ஆனால் பொதுவாக பொருளாதாரம் என்னும் சொல் அதன் குறுகிய அர்த்தத்தில் புரிந்து கொள்ளப்படுகிறது என்பதால் இது தவறான புரிதலுக்கு வழிவகுக்கிறது. இதனால் மார்க்சியமும் வரலாற்றுப் பொருள்முதல்வாதமும் பொருளாதாரக் குறுக்கல் வாதமாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

இன்று பிரதானமாகக் காணப்படும் பொருளாதார நூல்களில் பொருளாதாரம் என்பது சந்தையாகக் குறுக்கப்பட்டுள்ளது. அவற்றின் ஆய்வு முறையானது தனிநபர் நுகர்விலிருந்தே தொடங்குகிறது. மார்க்சியம் என்பது சிக்கலான முழுமையை ஆராய்கிறதே ஒழிய வெறும் தனிநபரை மட்டும் அல்ல. மார்க்ஸியப் பார்வையில் பொருளாதாரம் என்பது மிகப்பரந்த கண்ணோட்டத்தில் ஆராயப்படுகிறது.

மார்க்சிய முறை, உற்பத்தியினுடைய, சமூக உறவுகளுடைய வரலாற்றுத் தனித்தன்மையை அங்கீகரிக்கிறது. ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தைச் சமூகப் பகுப்பாய்வு செய்ய, மார்க்சியம் அந்த சகாப்தத்திற்குப் பொருத்தமான கருத்தினங்களை உருவாக்குகிறது. மார்க்சியத்தில் உற்பத்தி என்பது எப்போதும் சமூக ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் குறிப்பிடப்படுகிறது என்பதால் பகுப்பாய்வு செய்யும் போது உற்பத்தி, நுகர்வு, விநியோகம், பரிமாற்றம் இவற்றிற்கு இடையிலான உறவுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். மார்க்ஸியப் பார்வையில், விநியோகம் என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விநியோகமாக மாறுவதற்கு முன் உற்பத்திச் சாதனங்களின் விநியோகமாக உள்ளது

என்பதையும், சமூகத்தின் உறுப்பினர்கள் எவ்வாறு பல்வேறு வகையான உற்பத்தி நடவடிக்கைகளில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் குறிப்பிடுகிறது. இந்த விநியோகங்களின் விளைவாகவே உற்பத்திப் பொருட்களின் விநியோகம் அமைகிறது. முதலாளித்துவச் சமுதாயத்தில் கூலி உழைப்பு, முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் முன்னிருப்பின் அடிப்படையில்தான் வருவாய் கூலியாகவும், இலாபமாகவும் விநியோகம் செய்யப்படுகிறது. மார்க்சிய ஆய்வுமுறை வருமான விநியோகத்திற்கு முன்பே உற்பத்திச் சாதனங்களின் விநியோகத்தைப் பரிசீலிக்கிறது. உற்பத்தி, விநியோகம், நுகர்வு, பரிவர்த்தனை (சுற்றோட்டம்) ஆகிய ஒன்றோடொன்று தொடர்புடைய கூறுகளைக் கொண்ட சிக்கலான கூட்டமைப்பாகத்தான் உற்பத்தி நிகழ்வை மார்க்சியம் நோக்குகிறது. முதலாளித்துவத்தில் மூலதனம் என்பது உற்பத்தி சாதனங்கள் தனியாரிடம் இருக்கும் போதுதான் அதற்கான முழுமையான பொருளைப் பெறுகிறது. மூலதனம் என்பது பணமோ, உற்பத்தி சாதனங்களோ மட்டும் அல்ல. முதலாளித்துவ சமூகத்தின் உற்பத்தி உறவுகளையும் அது குறிக்கிறது.

சமூக யதார்த்தத்தை மார்க்சிய முறையில் ஆய்வு செய்யும் போது அதற்குப் பொருத்தமான அருவமாக்கப்பட்ட கருத்தினங்களை உருவாக்க வேண்டும். ஆய்வு முறையின் போது அருவமாக்கப்பட்ட எளிய கருத்தினங்களை அவற்றிற்கிடையே உள்ள தொடர்புகளுக்குரிய வகையில் அடுத்தடுத்து முறையாக ஒன்றுடன் ஒன்றாக இணைத்து, தொகுத்துக் கட்டமைத்து அறிவியல் பூர்வமாக முழுமையாக்குவதன் மூலமே தூலமான எதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் சித்தாந்தத்திற்கான துல்லியமான கருத்தினங்களை பெற முடியும். இந்த ஆய்வு முறைகளின் மூலம் மட்டுமே வரலாற்று அடிப்படையிலான குறிப்பிட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைப் பெற முடியாது சமூகத்தைப் புரிந்து கொள்வதன் மூலமே மாற்றத்தை கொண்டுவர முடியாது. முழுமையான சித்தாந்தத்தின் அடிப்படையிலான செயல்பாட்டின் மூலமே சமூகத்தின் நிலைமைகளை மாற்ற முடியும். ஒன்றுபட்ட சித்தாந்தத்தாலும், செயல்முறையாலும் மட்டுமே பயனுள்ள முறையில் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும். சமூக மாற்றத்தை ஏற்படுத்த நாம் தூலமான முறையில் செயல்பட வேண்டும்.

சரக்கு:

முன்-முதலாளித்துவப் பொருளாதாரத்தில் வர்த்தகம் என்பது சமூகத்தில் குறைவாகவே இருந்துள்ளது. முதலாளித்துவ வளர்ச்சி வரலாற்றில் சிறு உற்பத்தியாளர் அவரது உற்பத்திச் சாதனங்களிடமிருந்து பிரிக்கப்பட்டு உழைப்பாளியாகிறார். ஒன்று அவர் முதலாளியிடம் தன்

உழைப்புச் சக்தியை விற்றுப் பிழைக்க வேண்டும், இல்லை பட்டினியால் சாக வேண்டும். அவர் உற்பத்திச் சாதனங்களிலிருந்து விடுமை பெற்றதால் ‘சுதந்திரமானவராகக்’ கருதப்படுகிறார், அவர் பெற்றது பட்டினி கிடப்பதற்கான சுதந்திரம் மட்டுமே. விவசாயியாக இருக்கும் போது உயிர் வாழ்வதற்கு இருந்த உத்தரவாதத்தைக் கூட தொழிலாளியாக இருக்கும் போது அவரால் பெற முடியவில்லை. முதலாளி வர்க்கம் என்பது மக்களின் நுகர்வு வளர்ச்சியைத் தடுப்பதாகவே இருந்து வருகிறது. முதலாளித்துவ சமூகத்தில் உழைப்புச் சக்தியும் சரக்காக்கப்பட்டுள்ளது. மூலதனம் என்பது இறுகிய இறந்த உழைப்பையே குறிக்கிறது. உற்பத்தியின் போது மூலதனத்தின், அதாவது இறந்த உழைப்பின் பகுதியும், உழைப்பாளியின் உயிருள்ள உழைப்பும் சரக்குடன் சேர்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் மூலதனம் தொடர்ந்து சரக்கை உற்பத்தி செய்வதற்கு ஆகும் நேரத்தைக் குறைத்து வருகிறது. மூலதனத்தால் தொழிலாளர் திறனற்றவராக ஆக்கப்படுகிறார். முதலாளித்துவத்தின் வளர்ச்சி தொழிலாளர்களைத் திறனற்றவர்களாக்குகிறது. முதலாளித்துவச் சமுதாயத்தில் உற்பத்தி என்பது ஒருவரின் பயன்பாட்டுக்காக செய்யப்படுவதில்லை. சந்தைகளில் விற்பதற்காகவே செய்யப்படுகிறது. சரக்கு உற்பத்தி என்பது சேவைக்காகச் செய்யப்படுவதில்லை, தனியாரின் லாபத்திற்காகவே செய்யப்படுகிறது.

மார்க்ஸ் ’மூலதன’த்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் பகுப்பாய்வை சரக்கிலிருந்து தொடங்குகிறார். அதன் மூலம் சரக்கு உற்பத்தியில் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படையான உள்முரண்பாடுகளை வெளிக்கொணர்கிறார். சரக்கின் பகுப்பாய்வின் மூலமே அதற்கடுத்தடுத்து அமைந்த அரசியல் பொருளாதார ஆய்வுகளுக்கு அடிப்படையாய் அமைந்த மதிப்புக் கோட்பாட்டை உருவாக்குகிறார்.

ஒவ்வொரு சரக்கும் இரண்டு பண்புகளைக் கொண்டுள்ளன. ஒன்று மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அவை கொண்டுள்ள பயன்மதிப்பு, ஆனால் சரக்கை உற்பத்தி செய்பவருக்கு முக்கியமாய்படுவது சரக்கின் பயன்மதிப்பு அல்ல, வேறொரு சரக்கிலமைந்த அதன் பரிவர்த்தனை மதிப்பே.

வெவ்வேறு வகையான சரக்குகளை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பரிவர்த்தனை செய்து கொள்ள முடிகிறது. வெவ்வேறு வகையான சரக்குகளுக்குப் பொதுவாக ஒரு பண்பு இருப்பதன் மூலமே அவற்றை ஒன்றுடன் ஒன்று பரிவர்த்தனை செய்து கொள்ள முடிகிறது. சரக்குகளில் காணப்படும் அந்தப் பொதுவான பண்பு என்ன? அவை அனைத்துமே மனித உழைப்பினால் உருவாக்கப்பட்டவை என்பதே. அவை வெவ்வேறு வகையான உழைப்பின் மூலம்

உருவாக்கப்பட்டிருக்கலாம் என்ற போதும். அவற்றை நீக்கி விட்டுப் பார்த்தோமானால் சரக்குகள் அனைத்துமே மனித உழைப்பின் விளைபொருட்களாக உள்ளன என்பதே அவற்றிலுள்ள பொதுவான பண்பு. அதுவே சரக்குகளுக்கு மதிப்பைத் தருகிறது. மதிப்பு என்பது சரக்கினுடைய சமூகப் பண்பாகவே உள்ளது. சரக்கானது தூலமான உழைப்பிலிருந்து பயன் மதிப்பையும் அருவாக்கமாக்கப்பட்ட உழைப்பிலிருந்து மதிப்பையும் பெறுகிறது. சரக்கின் மதிப்பு என்பது முற்றிலும் ஒரு சமூகப் பண்பாகவும் அந்தப் பொருளின் பொருளார்ந்த தன்மைக்கு எதிரானதாகவும் உள்ளது. அப்பொருளின் ஒரு அணு கூட அதன் மதிப்பின் கூறாக இருப்பதில்லை. சரக்கின் மதிப்பின் அளவானது சரக்கை உருவாக்கத் தேவையான சராசரி உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அதுவே சரக்குகளின் விலையையும் நிர்ணயிக்கிறது.

மதிப்பு என்பது ஆழமான பொருளைக் கொண்டுள்ளது. ஒரு சரக்கின் விலை என்னும் போதும், அதைச் சமூக ஏற்பாட்டின் வடிவமான பணத்தில் குறிப்பிடும் போதும் மதிப்பின் ஆழமான அர்த்தம் அதனால் மூடி மறைக்கப்படுகிறது .நாம் சரக்குகளின் மேல்மட்டத்தில் தெரியும் விலையைப் பார்ப்பதுடன் நின்று விட்டால், அந்த சரக்குகள் உற்பத்தி செய்யும் போது என்ன விதமான சமூக உறுவுகளை உருவாக்குகின்றன என்பது குறித்து அதில் பொதிந்துள்ள ஆழமான உண்மைகளை அறிந்து கொள்ள முடியாது. சரக்குகளைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் முதலாளித்துவச் சமூகத்தில் சரக்குற்பத்தியில் ஈடுபடும் போது சமூகத்தின் உறுப்பினர்கள் என்ன மாதிரியான சமூக உறவுகளைக் கொண்டுள்ளனர் என்பதைச் சமூகத்தை மேலோட்டமாக பார்க்கும் போது தெரிவதில்லை,

விலை வடிவம், சரக்கின் உள்ளார்ந்த மதிப்பின் கூறுகளை வெளிக் கொணர்வது இல்லை. பண வடிவிலான சரக்குலகம் தனியார் உழைப்பின் சமூகத் தன்மையையும், உற்பத்தியாளர்களுக்கு இடையிலான உறவுகளையும் வெளிக் கொணர்வதற்கு பதில் அவற்றை மூடி மறைக்கிறது. இதனால் முதலாளித்துவம் சமத்துவமுள்ள சமுதாயம் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் அந்தத் தோற்றமே உண்மையாகக் கருதப்படுகிறது. முதலாளித்துவத்தில் பெயரளவிற்கே சமத்துவம் உள்ளது. அடிமைச் சமூகத்திலோ, நிலக்கிழாரிய சமூகத்திலோ வெளிப்படையாகவே தெரியும் சமூக உறவுகள், வர்க்க முரண்பாடுகள் முதலாளித்துவச் சமூகத்தில் வெளிப்படையாகத் தெரிவதில்லை. முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்தியாளர்களுக்கு இடையிலான உறவுகள் சரக்குகளுக்கு இடையிலான உறவுகளாக வெளியே தெரிகிறது. மனிதர்களுக்கிடையிலான உறவுகள் பொருட்களுக்கு இடையிலான

உறவுகளாகத் தெரிகிறது. இவ்வாறு சரக்கு என்னும் வடிவம் உண்மைகளை மர்மமாக்கித் தோற்ற மயக்கத்தை ஏற்படுத்துகிறது. இதையே சரக்குகளின் மாய்மாலம் என மார்க்ஸ் விளக்குகிறார்.


முதலாளித்துவச் சமூகத்தை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்ய அதன் வெளித் தோற்றத்தைத் தாண்டி அதில் உட்பொதிந்துள்ள சாரத்தை வெளிக் கொணர வேண்டும். அதன் மூலமே அச்சமூகத்தின் வெளித்தோற்றத்திற்கும் அதன் உண்மையான சாரத்திற்கும் இடையிலான முரண்பாடுகளைப் புரிந்து கொள்ள முடியும்.


(தொடரும்)

**தோழர் தியாகுவின் அறிவுக்குரல் கேட்க கீழுள்ள இணைப்பை சொடுக்கவும்**

https:www.youtube.com/user/ajanthavalga?fbclid=IwAR0APppP9wjVctyVG1DShVLvQWRKtHOTuuR4g7zwwBeqLE-6zcuyiKZjxoQ

**ஓவியர் வான்கா (1853-1890) ஜூலை29 – 130வது நினைவு தினம்**









சமந்தா

## டாலருக்கு வந்த வாழ்வு (4)

### பெட்ரோ-டாலர் போர்கள்:

மேற்காசியாவின் எண்ணெய் வளங்களைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது அமெரிக்க அரசின் வரலாற்றுப் பாரம்பரியமாக தொடர்கிறது. ரூஸ்வெல்ட் தொடங்கி ட்ரம்ப் வரை அமெரிக்க அதிபர்கள் அனைவருமே அதில் குறியாய் இருந்து வருகின்றனர். 1940களிலே அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் சௌதி அரேபியாவைப் பாதுகாப்பது அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு முக்கியமானது எனத் தாம் கருதுவதாகக் கூறியுள்ளார். ரூஸ்வெல்ட் சௌதி அரேபியாவின் அரசாட்சியைப் பாதுகாப்பதாகவும் அதற்குப் பதிலாக அமெரிக்காவுக்கு எண்ணெய் வளங்கள் அங்கிருந்து கிடைக்கப் பெறுமாறும் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்க மேலாதிக்கத்திற்கு அடி பணியாத ஆட்சிகளைக் கவிழ்ப்பது அமெரிக்காவின் வழக்கம். 1953இல் அஜக்ஸ் செயல்திட்டத்தின் மூலம் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ பிரிட்டனுடன் கூட்டுச்சேர்ந்து ஈரானின் பிரதமர் மொஹமது மொஸாதக் அவர்களை ஆட்சியிலிருந்து நீக்கியது அமெரிக்கக் கைப்பாவையான ஷாவை ஆட்சியில் அமர்த்தியது, மொஹமது மொஸாதக் மதச்சார்பற்றவர், நிலச்சீர்திருத்தம் உட்பட சமூக மாற்றத்திற்கான முன்னெடுப்புகளைச் செய்தவர் ஈரானின் பொதுவுடைமைக் கட்சியான டியூடே கட்சியின் ஆதரவுடன் செயல்பட்டவர். அவர் ஈரானின் எண்ணெய் வளங்களை நாட்டுடைமை ஆக்கியதால், இறக்கும் வரை வீட்டில் சிறைப்படுத்தப்பட்டதுடன் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார். அவரது விருப்பப்படி பொது மயானத்தில் அவரது உடலை அடக்கம் செய்யும் உரிமை கூட மறுக்கப்பட்டது. அது போலவே இராக்கின் பிரதமர் அப்தல் கரிம் காசிம் நாட்டின் எண்ணெய் வளங்களை நாட்டுடைமை ஆக்கினார் என்பதற்காக அமெரிக்க சி.ஐ.ஏ - பிரிட்டிஷ் கூட்டுப் படையால் 1963இல் அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார்.

அமெரிக்கா இன்று இஸ்லாமிய வெறுப்பை விதைக்கிறது. மேற்காசியாவில் இஸ்லாமிய அரசுகளையும், இஸ்லாமியத் தீவிரவாதத்தையும் விதைத்ததிலும் அமெரிக்காவிற்குப் பெரும் பங்குண்டு. மேற்காசிய வரலாற்றில் விளைந்த மதச்சார்பற்ற முற்போக்கான ஆட்சிகளைக் கவிழ்த்து வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னால் திருப்பி, அம்மக்களுக்கான நல்ல எதிர்காலத்தை மறுத்ததும் அமெரிக்க அரசு தான். ஆப்கானிஸ்தான் போரின் போது இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகளுக்குப் பெரும் நிதியளித்து அவர்களை வளர்த்து விட்டதும் அமெரிக்க அரசுதான்.

தன் நாட்டின் எண்ணெய் வளங்களை நாட்டுடைமையாக்கும் அரசுகளைத் தூக்கியெறிந்த அமெரிக்கா, 1970களிலிருந்து எண்ணெய் வர்த்தகத்தை டாலரில் மேற்கொள்ளாமல் தங்கத்திலோ, வேறு நாணயங்களிலோ மேற்கொண்டால் அந்நாடுகளின் மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பதையும், போர் தொடுப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளது. மத்திய கிழக்கின் எண்ணெய் வளங்களில் அமெரிக்க ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும், அங்கே அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுக்குள் வைக்கவும், அங்கே சோசலிச ஆதரவு பரவாமல் இருக்கவும், தன் புவிசார் நலன்களைப் பாதுகாக்கவும் இஸ்ரேலைத் தன் அடியாளாக வைத்திருக்கிறது அமெரிக்கா. தனக்குக் கட்டுப்படாத நாடுகளை இஸ்ரேலைக் கொண்டு அச்சுறுத்துவதையே அது வழக்கமாகக் கொண்டுள்ளது. இதற்காகத்தான் இஸ்ரேலுக்குப் பெருமளவில் ஆயுதங்களும் நிதியும் வழங்கித் தன் நெருங்கிய நட்பு நாடாகக் காட்டிக் கொள்கிறது. ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் இஸ்ரேலின் போர்க் குற்றங்களுக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றுவதைத் தடை செய்து சர்வதேச அரங்கில் அமெரிக்கா இஸ்ரேலைப் பாதுகாத்து வருகிறது.

பஹ்ரைன், இராக், குவைத், ஒமன், கத்தார், சௌதி அரேபியா, எகிப்து, இஸ்ரேல், ஜோர்டான், ஏமன், சிரியா, எனப் பல்வேறு நாடுகளில் 800 இராணுவத் தளங்களை அமெரிக்கா அமைத்தது எதற்காக? அமெரிக்க மேலாதிக்கத்தையும், பெட்ரோ-டாலரையும் எதிர்க்கும் நாடுகளைத் தாக்குவதற்கான போர்முனைகளாக அவற்றைப் பயன்படுத்துவதற்காகவே!

இராக், ஈரான், வெனிசுலா, லிபியா ஆகிய நாடுகளில் அமெரிக்கா தொடுத்த பொருளாதார / இராணுவப் போர்களுக்குக் காரணம் அந்நாடுகள் தீவிரவாதத்தை ஆதரித்ததோ, பேரழிவுக் கருவிகளை உற்பத்தி செய்ததோ, அந்நாடுகளில் மனித உரிமைகள் மீறப்பட்டதோ அல்ல என்பதும், அமெரிக்கா ஜனநாயகக் காவலன் அல்ல என்பதும் உலகறிந்த செய்தி. இந்நாடுகள் அமெரிக்காவின் தொடர் தாக்குதல்களுக்கு இலக்காவதற்கு காரணம் அந்நாடுகள் பொருளாதாரத் தற்சார்பைக் கடைப்பிடிக்க முயற்சி செய்வதும் டாலருக்கு பதில் மற்ற நாணயங்களை சர்வதேச வர்த்தகத்திற்குப் பயன்படுத்தி பெட்ரோ-டாலர் அமைப்புக்கு சவால் விடுவதுமே ஆகும்.

## இராக்:

பெட்ரோ-டாலர் அமைப்பிற்கு முதன்முதலில் சவால் விட்டவர் சதாம் உசைன். அதுவே அவரது முடிவுக்கும் காரணமானது. 1991 முதல் வளைகுடாப் போரின் போது. புஷ்

தலைமையிலான அமெரிக்க அரசு இராக் மீது பொருளாதாரத் தடைகள் விதித்தது. இதனால் இராக் அத்தியாவசியப் பொருட்களைக் கூடப் பெற முடியாத நிலையில் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. 5 லட்சம் இராக்கியக் குழந்தைகள் உணவின்றி இறந்தனர். அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு மட்டும் இராக் எண்ணெய் விற்பனையை அனுமதிக்கும் வகையில் உணவுக்காக எண்ணெய் திட்டம் ஐநாவால் 1995இல் கொண்டுவரப்பட்டது. இராக்கின் எண்ணெய் வளங்களில் அமெரிக்க நிறுவனங்கள் முதலீடு செய்வது தடுக்கப்பட்டது.

1990களில் ஃபிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் சதாம் உசைனுடன் எண்ணெய் துரப்பணப் பணிகளுக்கான ஒப்பந்தங்களில் ஈடுபட முன்வந்தன. இராக்கின் மீதான ஐநா பொருளாதாரத் தடைகளை விலக்குவதற்கும், உணவுக்கான எண்ணெய் திட்டத்தை நிறுத்தவும் சர்வதேச அளவில் ஒருமித்த கருத்து இருந்து வந்தது, அப்படி விலக்கப்பட்டிருந்தால் இராக் மேற்குறிப்பிட்ட நாடுகளின் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு துரப்பணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும். ஆனால் அதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து அமெரிக்கா தடுத்து வந்தது.

2000 அக்டோபர் 30 அன்று எண்ணெய் வர்த்தகத்தை இனிமேல் யூரோவில் செய்வதாகவும், டாலரில் வர்த்தகம் செய்வதில்லையெனவும் சதாம் அறிவித்தார். இந்த முடிவுக்கு இறுதியில் ஐ.நா.வும் ஒப்புதல் வழங்கியது. 2002இல் சதாம் முற்றிலுமாக டாலரைக் கைவிட்டு யூரோவில் வர்த்தகம் செய்யலானார்.. ஆனால் இது குறித்த எந்தச் செய்தியும் கார்ப்பரேட் ஊடகங்கள் வெளியிடவில்லை. யூரோவுக்கு மாறியதால் இராக் அரசு பி.என்.பி பேரிபஸ் வங்கியில் தொடங்கிய யூரோ வங்கிக் கணக்கின் மூலம் அதிக வட்டியும், வருவாயும் பெற முடிந்தது. யூரோவுக்கு மாறியதால் இராக்கின் நிகர வருவாய் அதிகரித்தது. அமெரிக்கா இதைத் தன் பெட்ரோ-டாலர் அமைப்பின் மீதான தாக்குதலாகவே பார்த்தது. இதனால் டாலரின் மேலாதிக்கமும், அது உலகப் பணமாக இருக்கும் தகுநிலையும் அச்சுறுத்தப்படும் எனக் கருதியது. தன் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவும், பெட்ரோ-டாலரைப் பாதுகாக்கவும் யூரோவிலான இராக்கின் வர்த்தகத்தை நிறுத்த வேண்டும் என்று முடிவு செய்தது புஷ் தலைமையிலான அமெரிக்க அரசு. இராக் பேரழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்வதாகவும், 9/11 இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு சதாம் உசைன்தான் காரணம் என்றும் தான் தொடுக்கும் போருக்கு நியாயம் கற்பிக்கப் பொய்களை அடுக்கியது. செப்டம்பர் தாக்குதலுக்கும் சதாம் உசைனுக்கும் தொடர்புள்ளதாகத் தரவுகளைச் சித்திரிக்குமாறு சி.ஐ.ஏ.வை வற்புறுத்தியது. தன்

கருத்துக்கு இணங்காதவர்களை சி.ஐ.ஏ.விலிருந்து நீக்கியது. சர்வதேச அரங்கில் ஒப்புதல் இல்லாமல், எந்த நாடுகளின் ஆதரவும் இல்லாமல் அமெரிக்கா 2003 மார்ச் 19இல் இராக் மீது போர் தொடுத்தது. இராக்கிடம் அமெரிக்கா குறிப்பிடும் பேரழிவு ஆயுதங்கள் ஏதும் இல்லை என்பது ஐ.நா தரப்புப் புலனாய்வாளர்களின் சோதனைகளால் மீண்டும் மீண்டும் உறுதிசெய்யப்பட்ட போதிலும், அமெரிக்கா பொய்களின் அடிப்படையில் போரைக் கட்டமைத்தது. இராக் மீது அமெரிக்கா படையெடுக்கும் வரை (2003) இராக்கின் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் தொடர்ந்து நீடித்தன. அதன் பிறகு டாலர் வீழ்ச்சியுற்ற போதும் எண்ணெய் விற்பனை இராக்கில் டாலரிலே மேற்கொள்ளப்பட்டது. இது அமெரிக்காவுக்கு இணங்க மறுத்த இராக்கிற்கான தண்டனை மட்டுமல்ல. ஓபெக் அமைப்பில் உள்ள எந்த நாடாவது எண்ணெய் வர்த்தகத்தை டாலரை விட்டு யூரோவிலோ வேறு நாணயத்திலோ மேற்கொண்டால் இதே கதிதான் ஏற்படும் என்று எச்சரிக்கும் அமெரிக்காவின் போர்த்தந்திர முறையும் கூட. இவ்வாறு சுதந்திரம், தீவிரவாத எதிர்ப்பு என்ற போர்வையில் பெட்ரோ-டாலரைப் பாதுகாக்க லட்சக்கணக்கான இராக்கியர்களைக் கொன்று குவித்தது.

ஈரான்:

இராக்கை தொடர்ந்து ஈரானும் சர்வதேச அளவில் யூரோவில் எண்ணெய் விற்பனை செய்ய முன்வந்தது. நவம்பர் 2007இன் முற்பகுதியில், ஒபெக்கின் மூன்றாவது உச்சி மாநாட்டின் போது எண்ணெய் வர்த்தகத்தை மேற்கொள்ள டாலருக்கு மாற்றீடாக நம்பகமான நல்ல நாணயம் தேவை" என்று ஈரானிய அதிபர் அஹ்மதி நெஜாட் அழைப்பு விடுத்தார். 2007 டிசம்பருக்குள்ளே ஈரான் தனது எண்ணெயை அமெரிக்க டாலர்களில் விற்பதை நிறுத்தியது. பிப்ரவரி 2008 இல், கிஷ் தீவில் ஈரானிய எண்ணெய் சந்தையை (ஐஓபி) நிறுவியது. இதன் மூலம் எண்ணெய், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் எரிவாயு ஆகியவற்றை தங்கம், யூரோ, யுவான், யென், டாலர் ஆகிய நாணயங்களில் வாங்க அனுமதித்தது. 2012 மார்ச்சில் ஈரான் தனது சந்தையில் அமெரிக்க டாலரில் வர்த்தகம் செய்யாது என அறிவித்தது. அமெரிக்காவுடன் சேர்ந்து ஐரோப்பிய ஒன்றியமும் ஈரானிய எண்ணெய் விற்பனையைத் தடுத்தது.

ஈரானின் மத்திய வங்கி மீதும் புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. உலகச் சந்தையில் வர்த்தகம் செய்ய இயலாதபடி ஈரானின் மத்திய வங்கி கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. உலகளவில் பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்துள்ளதால் அந்த நாட்டின் பொருளாதாரமும், நிதி ஆதாரங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இஸ்ரேல்,

இந்தியா, பாகிஸ்தான் எனப் பல நாடுகள் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்ற போதும், அமெரிக்க அரசு ஈரானை மட்டும் குறிவைத்து, ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்கிறது, அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை (என்.பி.டி) மீறியுள்ளது என்று பொருளாதாரத் தடைகள் விதிப்பதை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

ஈரான் ரஷ்யாவுடன் வர்த்தகத்தை டாலருக்குப் பதிலாக சரக்குப் பரிமாற்றங்களில் மேற்கொள்ள ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. வெனிசுலாவும் ஈரானும் பெட்ரோ-டாலர்களுக்குப் பதிலாக தங்கள் நாணயங்களில் எண்ணெய் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. பொருளாதாரத் தடைகளால், தங்களுக்கு தேவையான அடிப்படையான பொருட்களைக் கூட பெற முடியாத நிலையில் ஈரான் தங்கத்தின் மதிப்பில் பேமன் என்ற கிரிப்டோ நாணயத்தை வெளியிட்டது. பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் ஈரானுக்குக் குறைந்தபட்சம் அடிப்படை உணவு, மருந்துப் பொருட்களைக் கிடைக்கச் செய்ய ஐரோப்பிய நாடுகள் இன்ஸ்டெக்ஸ் என்ற பரிமாற்ற முறையை (INSTEX) 2019 ஜனவரியில் அறிமுகப்படுத்தியுள்ளன. தொழில்நுட்பப் பிரச்சனைகளால் ஈரானிய எண்ணெய் சந்தையை தொடர்ந்து இயக்க முடியாத நிலையில் ஈரானிய நாடாளுமன்றம் 2020 ஜனவரி, 7ல் அதை கைவிட்டது. அமெரிக்கா ஈரானின் பொருளாதாரத்தை முடக்கியதால் ஈரானில் பணவீக்கம் 2019ல் 39.91%ஆக அதிகரித்துள்ளது. அமெரிக்க ஆளும் வர்க்கம் ஈரானிய மக்கள் படும் வேதனைகளை ரசிக்கிறது. டிரம்பின் வழக்கறிஞர் ருடி கிலியனி சொல்கிறார், ஈரானியர்கள் தங்களது உடலுறுப்புகளை விற்கின்றனராம்! உணவிற்காக பிச்சையெடுக்கின்றனராம்! இவ்வாறு வன்மத்துடன் பொருளாதாரத் தடைகளின் வெற்றியைக் கொண்டாடுகிறார்.

### வெனிசுலா:

வெனிசுலா உலகளவில் மிக அதிகமான எண்ணெய் வளங்களை கொண்டிருந்த போதும் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் முதல் 10 நாடுகளின் பட்டியலில் இல்லை. அதற்கான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த முடியாதவாறு அமெரிக்கா தடைகளை இட்டு வருகிறது. 1999இல் ஹியூகோ சாவேஸ் அதிபரான பிறகு வெனிசுலாவின் மீதான அமெரிக்காவின் வன்மமும் அதிகரித்தது. 2001இல் புஷ் நிர்வாகத்தில் வெனிசுலாவுடனான உறவுகள் மேலும் தாழ்வடைந்தன. ஐநா பொது அவையில், சாவேஸ் தன் உரையில் புஷ் ஒரு பொய்யான ஜனநாயகத்தை, மேன்மக்களின் ஜனநாயகத்தை, வெடிகுண்டுகளின் ஜனநாயகத்தை

ஊக்குவிப்பதாகக் கூறினார். கியூபாவைத் தனிமைப்படுத்தும் அமெரிக்கக் கொள்கைக்கு மாறாக, கியூபாவுடனும், ஃபிடல் காஸ்ட்ரோவுடனும் சாவேஸ் நட்புறவு கொண்டதால், அமெரிக்காவுக்கும் வெனிசுலாவுக்கும் இடையிலான இராணுவ உறவு அறுந்தது. ஆயுத ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மூலமாக, தீவிரவாத எதிர்ப்பிற்கு வெனிசுலா ஒத்துழைக்கவில்லை என்று கூறி வெனிசுலாவுடனான ஆயுத விற்பனையை 2006இல் நிறுத்தியது. ஓபெக் கூட்டமைப்புக்கு வெனிசுலா தலைமை வகிக்கும் போது சாவேஸ் ஓபெக் நாடுகளில் பத்து நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்பொழுது அவர் சதாம் உசைனைச் சந்தித்தார். அமெரிக்காவில் அது சர்ச்சைக்குரியதாகப் பார்க்கப்பட்டது. புஷ் சாவேஸின் கொள்கைகளைத் தொடர்ந்து எதிர்த்து வந்தார். 2002இல் அமெரிக்கா சாவேஸ் ஆட்சியைக் கவிழ்த்து பெட்ரொ கார்மோனாவை அதிபராக்கியது. ஆனால் இரண்டு நாட்களில் தன் ஆதரவாளர்களால் சாவேஸ் மீண்டும் அதிபராகப் பொறுப்பேற்றார். அமெரிக்கா உலக அரங்கிலும் லத்தின் அமெரிக்காவிலும் வெனிசுலாவையும், சாவேஸின் தலைமையையும் தனிமைப்படுத்த தொடர் முயற்சிகளில் ஈடுபட்டது. அது இன்றும் தொடர்கிறது. 2015இல் ஒபாமா தலைமையிலான அரசு வெனிசுலாவின் முக்கியப் பிரதிநிதிகளின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது. சாவேஸுக்குப் பின் நிக்கோலஸ் மதுரோ அவர்களது ஆட்சியின் போதும் அமெரிக்கா அவரை சர்வாதிகாரி என முத்திரை குத்தி ஆட்சிக் கவிழ்ப்பு செய்து, ஜுவான் கைடோ என்ற அமெரிக்கக் கைப்பாவையை அதிபராக அங்கீகரித்தது அதனால் 2019 ஜனவரியில் அமெரிக்காவுடனான உறவுகளை வெனிசுலா நிறுத்தியது.

அமெரிக்காவின் அழுத்தத்தின் காரணமாக வெனிசுலாவில் இயங்கிய வெளி நாட்டு நிறுவனங்கள் வெளியேறின. டொனால்ட் டிரம்ப் 2017இல் பொருளாதாரத் தடைகளைத் தீவிரப்படுத்தினார், வெனிசுலாவின் தேசிய எண்ணெய் நிறுவனமான பி.டி.வி.எஸ்.ஏ.விடம் இருந்து பெட்ரோலியம் வாங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டது. அமெரிக்க அரசாங்கம் சர்வதேச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் வெனிசுலாவின் கணக்குகளில் உள்ள 5.5 பில்லியன் டாலர் நிதியை முடக்கியுள்ளது. வெனிசுலா வெளிநாடுகளின் மூலம் பணம் பெற முடியுமென்றாலும், அந்நாட்டுடன் வர்த்தகம் செய்வதற்கு முன்வரும் வெளிநாட்டு நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என அச்சுறுத்துவதன் மூலம் அமெரிக்கா நீண்ட காலமாக சர்வதேச வர்த்தகத்தைத் தடுத்துள்ளது. இங்கிலாந்து வங்கியிலுள்ள வெனிசுலாவினுடைய 1.2 பில்லியன் டாலர் மதிப்பிலான தங்கத்தைப் பெறும் முயற்சி

தடுக்கப்பட்டது. அமெரிக்கா நிதியளிக்கும் லிமா என்ற லத்தின் அமெரிக்கக் கூட்டமைப்பு, வெனிசுலா சர்வதேச வர்த்தகத்தை தங்கத்திலோ, எண்ணெயின் மூலமோ செய்வது தடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. வெனிசுலாவில் உள்ள தங்கச் சுரங்கத் தொழில்துறைக்கும் அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது, வெனிசுலாவின் தங்கத்தை வாங்கக் கூடாதென்று அமெரிக்க நிறுவனங்களுக்குத் தடை விதித்துள்ளது. வெனிசுலா 2018ஆம் ஆண்டில் யுவான், யூரோ மற்றும் பிற நாணயங்களில் தனது எண்ணெயை விற்பனை செய்யத் தொடங்குவதாகத் தெரிவித்தது.

பொருளாதாரத் தடைகளின் கீழ் தங்களால் வாங்க முடியாத பொருட்களை வெனிசுலாவுக்கு பிற நாடுகளிடமிருந்து வாங்குவதற்காக பெட்ரோ என்ற கிரிப்டோ நாணயம் உருவாக்கப்பட்டது. பெட்ரோவின் மதிப்பு எண்ணெய் மற்றும் தங்கத்தின் மதிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. கிரிப்டோ நாணயங்களை பயன்படுத்தத் தொடங்கியதும், அமெரிக்க ஆதரவு அமைப்புகள் பெட்ரோவில் வர்த்தகத்தை தடுக்கும் விதமான இணையவழிப் பிரச்சாரங்களையும் மேற்கொண்டுள்ளன. அமெரிக்காவின் தொடர் பொருளாதாரத் தடைகளால் 2016இலிருந்து வெனிசுலாவில் கட்டுப்படுத்த முடியாத அளவிற்குப் பணவீக்கம் உருவானது, 2019இல் வெனிசுலாவின் பணவீக்கம் 9,586%.

## லிபியா:

மொம்மர் கடா்ஃபி தலைமையிலான லிபிய அரசு அதன் எண்ணெய் வளத்தை நாட்டுடைமையாக்கி அதன் மீது முழுக் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தது, அனைத்து வணிகப் பரிவர்த்தனைகளும் லிபிய மத்திய வங்கி (சிபிஎல்) மூலமே செய்யப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் கூற்றுப்படி, சிபிஎல் 144 டன் தங்க இருப்பை வைத்திருந்தது. மொம்மர் கடாஃபி ஒன்றுபட்ட ஆப்பிரிக்காவுக்கான தங்க மதிப்பு கொண்ட ஆஃப்ரோ நாணயத்தை (தங்க தினார்) உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். தங்கத்தில் எண்ணெய் விற்பனை செய்வதாக அறிவித்தார். இது அமெரிக்காவின் பெட்ரோ-டாலர் அமைப்புக்கு விடுக்கப்பட்ட சவாலாக இருந்ததோடு லிபியாவை காலனியாக்கம் செய்த பிரான்சின் நலன்களையும் பாதிப்பதாகக் கருதப்பட்டது, ஆப்பிரிக்க நாடுகள் தங்க தினாரை எண்ணெய்ப் பரிவர்த்தனைக்கான நாணயமாகப் பயன்படுத்த முடிவு செய்திருந்தால், பிரான்ஸ் அதன் முன்னாள் ஆப்பிரிக்கக் காலனிகளின் மீது பொருளாதாரச் செல்வாக்கை இழக்க நேரிடும். கடாஃபி ஆப்பிரிக்கக் கூட்டமைப்புத் திட்டத்திற்கு

லிபியாவின் பங்களிப்பாக 30 பில்லியன் டாலரை ஒதுக்கினார். ஒபாமா அரசு அதை முடக்கியது. லிபியாவில் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் குற்றம் சாட்டியது. அமெரிக்கத் தலைமையில் ஃபிரான்ஸ் மற்றும் பிரிட்டனின் ஆதரவுடன் நேட்டோ படைகள் லிபியாவின் மீது போர் தொடுத்தன. கடாஃபி அரசுக்கு ஆதரவாகப் பல லட்சக் கணக்கான மக்கள் போராடிய போதும், அது குறித்து கார்ப்பரேட் ஊடகங்களில் செய்தி வெளிவரவில்லை. திரிபோலியில் மொம்மர் கடாஃபி நேட்டோ படைகளால் அவமானகரமான முறையில் கொல்லப்பட்டார்.

சிரியா:

2004ஆம் ஆண்டில் அமெரிக்க அரசால் சிரியாவின் அமெரிக்கச் சொத்துக்கள் முடக்கப்பட்டன. சிரிய வங்கி, சர்வதேசத் தனியார் வர்த்தகத்தை டாலரில் செய்வதையும் நிறுத்தியது, 2004ஆம் ஆண்டில், அமெரிக்க அரசு சிரியாவிற்கான ஏற்றுமதிகளைத் தடை செய்தது, சிரியாவின் வர்த்தக வங்கியுடனான நிதி உறவுகளைத் துண்டித்தது, பயங்கரவாதத்துடன் தொடர்புடையதாகக் கூறி சிரியர்களின் சொத்துக்களை முடக்கியது. அமெரிக்காவுடனான மோதல்களுக்கு மத்தியில் சிரியாவும் யூரோவுக்கு மாறியுள்ளது. சிரிய அரசின் அனைத்து வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைகளையும் டாலரிலிருந்து யூரோவுக்கு மாற்றியுள்ளது. 2006இலிருந்தே சிரியா கச்சா எண்ணெய் விற்பனையை யூரோவில் செய்கிறது.

கத்தார்:

கத்தார் ஏற்கெனவே சீன யுவானில் பல பில்லியன் டாலர் மதிப்புள்ள பரிவர்த்தனைகளைச் செய்து வருகிறது. மத்தியக் கிழக்குப் பகுதியில் யுவானில் பரிவர்த்தனைகளைச் செய்வதை ஊக்குவிக்கும் முதல் மையமாக கத்தார் திகழ்கிறது.

கத்தார் நாட்டில் யுவான் ஒப்பந்தங்களுக்கான தீர்வு வங்கியாக சீனாவின் தொழில்துறை மற்றும் வர்த்தக வங்கியின் தோகா கிளை நியமிக்கப்பட்டுள்ளது

ஈரானும், கத்தாரும் உலகிலே மிகப் பெரிய எரிவாயு வளத்தைப் பகிர்ந்து வருகின்றன. சௌதி அரேபியாவும் அதன் நட்பு நாடுகளும் கத்தார் தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதாகவும், ஈரானுடன் நெருங்கிய உறவு கொண்டிருப்பதாகவும் குற்றம் சாட்டி கத்தாருடனான உறவுகளை முறித்தன என்ற போதிலும் ஈரானுடன் தொடர்ந்து நட்பு நாடாக கத்தார் இருந்து வருகிறது.

ரஷ்யா:

ரஷ்யாவும், பெட்ரோ-டாலர் அமைப்பைக் கைவிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. கிரிமியாவில் ரஷ்யாவின் நடவடிக்கைகளைக் கண்டிப்பதாகக் கூறி அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்த போது ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின், ரஷ்யா கூடிய விரைவில் டாலர் பயன்பாட்டை முடிவுக்குக் கொண்டுவரும் என்று தெரிவித்தார். ரஷ்யா அமெரிக்கக் கடன் முதலீடுகளிலிருந்து தன் 84% பங்குகளை விலக்கித் தங்க இருப்புகளை அதிகரித்தது. எண்ணெய் விற்பனையை ரூபிளிலும் யூரோவிலும், யுவானிலும் செய்ய முயன்று வருகிறது. சீனாவுக்கான எண்ணெய் ஏற்றுமதியை யுவானில் ஏற்றுக் கொள்கிறது. ரஷ்ய அரசின் எண்ணெய் நிறுவனமான ரோஸ்னெ·ப்ட் மற்றும் பிற நிறுவனங்களுக்கு டாலரில் நிதியுதவி கிடைக்காத வண்ணம் அவற்றின் மீது அமெரிக்க அரசு பொருளாதாரத் தடை விதித்துள்ளது. ரஷ்யாவின் எரிசக்தி நிறுவனமான காஸ்ப்ரோம் அதன் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளில் இனிமேல் அமெரிக்க டாலரைப் பயன்படுத்துவதில்லை என அறிவித்தது. ஈரானும் ரஷ்யாவும் 20 பில்லியன் டாலர் மதிப்பில் ஒருவருக்கொருவர் தங்கள் நாட்டு நாணயங்களில் வர்த்தகம் செய்யும் விதத்தில் ஐந்தாண்டு வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது குறிப்பிடத்தக்கது.

2015 ஜனவரியில் ரஷ்யா, கஜகஸ்தான் மற்றும் சோவியத் யூனியனின் முன்னாள் உறுப்பு நாடுகளை உள்ளடக்கும் விதமாக பொருளாதார ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது. எரிவாயு, எண்ணெய், பெட்ரோலியப் பொருட்கள் உள்ளிட்ட வர்த்தகத்திற்கான ஒருங்கிணைந்த சந்தையாக இது செயல்படும்.

டாலர், யூரோ சார்பைக் குறைக்கும் விதமாக ரஷ்யாவும் சீனாவும் ரூபிள்-யுவான் நாணய மாற்று ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளன. ரஷ்யா 2024க்குள் சீனாவுடனான வர்த்தகத்தை 200 பில்லியன் டாலர்களாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளது.

சீனா:

சீனாவைப் பொறுத்த வரை, அதன் எண்ணெய்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், யுவானை வலுப்படுத்தி பொருளாதார மேலாதிக்கத்தை நிலை நாட்டும் முயற்சியில் உள்ளது. ஷாங்காய் மற்றும் ஹாங்காங் பங்குச் சந்தைகளில் பெட்ரோ-யுவானைத் தங்கமாக முழுமையாகப் பரிமாறிக் கொள்ளும் வகையில், தங்கத்தின் மதிப்பில் அமைந்த பெட்ரோ-யுவானை வெளியிட்டுள்ளது. அமெரிக்கப் பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ளும்

நாடுகளுக்கு பெட்ரோ-டாலருக்கு மாற்றாக பெட்ரோ-யுவானைப் பயன்படுத்த முடியும். ஈரான், ரஷ்யா, வெனிசுலா, அங்கோலா ஆகிய நாடுகள் இதைப் பயன்படுத்தி வருகின்றன.

அமெரிக்காவின். பொருளாதாரத் தடைகளால் ரஷ்யா மற்றும் ஈரானிலிருந்து ஐரோப்பிய நாடுகள் எண்ணெய் கொள்முதல் செய்வதும் பாதிக்கப்படுகிறது. தங்கள் யூரோ நாணயத்தில் எண்ணெய் வாங்குவதே ஐரோப்பிய நாடுகளுக்குச் சாதகமாகும் என்பதால் எண்ணெய் வர்த்தகத்தில் யூரோவின் பயன்பாட்டை அதிகரிக்கும் முயற்சிகள் தொடர்கிறது. மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளும் யூரோவுக்கு மாறுவதற்கு ஆலோசித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இன்று கோவிட்-19 அச்சுறுத்தலால் உலகே முடங்கிய நிலையிலும் கூட ஈரானும், வெனிசுலாவும், பிற நாடுகளிலிருந்து அத்தியாவாசிய மருந்துகள், உணவுப் பொருட்கள் பெறுவதை அமெரிக்க அரசு தொடர்ந்து தடை செய்து பட்டினியாலும், நோயாலும் அங்குள்ள மக்களை இனக் கொலை செய்கிறது.

1999இல் ஐரோப்பிய ஒன்றியத்தால் யூரோ நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்தே அமெரிக்கா தன் டாலர் மேலாதிக்கத்தை நிலை நிறுத்த பல்வேறு விதங்களில் போர்களை ஏவி வருகிறது. இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் அமெரிக்கா ஆயுதபலத்தின் மூலம் சரியும் டாலரைப் பாதுகாக்க முடியும் என்பது பெரும் கேள்விக்குறியாயுள்ளது.

(தொடரும்)

---

**பெருந்தொற்றுக் காலம் பெருங்கொடுமைக் காலம்!**
**பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள்!**
**தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகள்!**
**வறியோருக்கு எதிரான வன்கொடுமைகள்!**
**காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்**
**JAACT - TN**

**ஒருங்கிணைப்பாளர்:**
**தோழர் தியாகு, 8939154752.**

**செயலாளர்:**
**தோழர் மீ.த. பாண்டியன்,**
**9080427640.**

## இளம்பிறை

அது வேறு மழைக்காலம்
பொடியாய் உதிரும்
தவிட்டுத் தூறலைக்
கைகளில் ஏந்தித்
தேடிப் பார்ப்பேன்
பொறுக்கு மண் கரைய
வழுக்கும் குளக்கரையில்
மசமசக்கும் தூறலில்
தூண்டிலுடன் நிற்பேன்
சிட்டாய்ப் பறந்தும்
வீடு சேரவிடாமல்
வழிமறித்துக் கொள்ளும்
கனத்த மழையைப்
பதுங்கி நின்று
பார்த்துக் கொண்டிருப்பேன்
வீதியேறி மீன்களை
விளையாடித்
துள்ளவைக்கும்
குளத்தை நிறைக்கும்
அடை மழை என்றால்
அப்படியொரு பிரியம்
சட்டென இருட்டி
அடித்துப் பொழியும்
நல்ல மழையில்
நனைந்து கிடப்பேன்
நடுக் குளத்துத்
தாமரைப்பூக்களில்
நானும் ஒன்றாக
இரவில் பெய்யும்
பெருமழை என்றால்
கிளைகளை உலுக்கி
காலையில் நனைவேன்
அடுப்பிற்குப்
பனைமட்டை பொறுக்க
ஆட்டுக்குத் தழை ஒடிக்க
கடுகுக்கும் எண்ணெய்க்கும்
கடைக்கு ஓட என
மழை என்றாலே
பாதி நனைந்த பாவாடையுடன்
திரிந்தலைந்த
அது வேறு மழைக்காலம்



## தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

பொதுச்செயலாளர்: தோழர் ***தியாகு***

அன்பிற்குரியீர்! வணக்கம்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் அரசியல்-கருத்தியல் நிலைப்பாடுகளையும் நடைமுறைச் செயல்பாடுகளையும் தொடர்ந்து கவனித்து வருவீர்கள் என நம்புகிறேன். தமிழ்த் தேசிய விடுதலைக்கும் சமூக நீதிக்குமான கொள்கைவழியைத் தொடர்ந்து பற்றி நிற்கிறோம். பதவி அரசியலைப் புறந்தள்ளிப் போராட்ட அரசியலை உறுதியாகக் கடைப்பிடிக்கிறோம். மக்கள் நலன் கருதி ஒன்றுபட்ட இயக்கங்களில் தொடர்ந்து எங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகிறோம். உணர்வு அரசியலில் மயங்காமல் அறிவார்ந்த அரசியல் களத்தில் ஊன்றி நிற்கிறோம். தமிழீழம் உள்ளிட்ட தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட அரசியலில் எமது இடம் சிறிதென்றாலும் இன்றியமையாத ஒன்றென்னும் அறிந்தேற்புப் பெற்றுள்ளோம்.

எம் கொள்கை நிலைப்பாடுகளையும் கருத்துகளையும் திங்கள்தோறும் வெளிவரும் ***உரிமைத் தமிழ்த்தேசம்*** மின்னிதழில் உங்கள் பார்வைக்குப் படைத்து வருகிறோம். ***அறிவுக்குரல்*** வாயிலாகவும் புரட்சியச் சிந்தனைகளை விரிய விதைத்து வருகிறோம். எம் விடாமுயற்சியின் பயனாக இயக்கம் சீராகவும் உறுதியாகவும் வளர்ந்து வருகிறது. அறிவியல் நோக்கும் ஈகவுணர்வும் உழைப்பார்வமும் கொண்ட புதிய ஆற்றல்களை இயக்கத்தின் பால் ஈர்த்துள்ளோம்.

ஆனால், இன்றைய அரசியல் சூழலின் தேவைகளை நிறைவு செய்ய எமது வலிமையும் வளர்ச்சியும் போத மாட்டா என்பதை உணர்ந்துள்ளோம். இயக்கத்தின் பரவலான வளர்ச்சிக்கும் மக்கள்-பணிக்கும் மேலும் முழுநேர, பகுதிநேர ஊழியர்களைக் களமிறக்க வேண்டும். சமூக ஊடகங்களை இன்னும் விரிவாகப் பயன்படுத்தவும், மெய்ந்நிகர் அரசியல் செயல்நிரலைக் கடைப்பிடிக்கவும் தொடர்ச்சியான பொருள்வளம் தேவைப்படுகிறது. இதற்கென எம் தலைமைக் குழுவில் பேசி முடிவெடுத்து இந்தத் திங்கள் பங்களிப்புத் திட்டத்தை அறிவிக்கிறோம்:

எம் இயக்கப் பணிகளில் உங்களுக்கு நம்பிக்கையும் அக்கறையும் இருக்குமானால் தொடர்ந்து ரூ.100/- முதல் 2000/-க்குள் திங்கள் பங்களிப்பாகத் தாருங்கள். இது ஓராண்டுக்கான திட்டமாகும். இதற்கான படிவம் நிரப்பித் தந்து இத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டுகிறேன். சிறுதுளி பெருவெள்ளம்!

தமிழர் விடுதலைப் போர்முழக்கம்! சமூகநீதித் தமிழ்த்தேசம்!

நன்றி!

தோழமையுடன்

தியாகு / சென்னை /04/05/2020

**தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்**

பொதுச்செயலாளர்: ***தியாகு***

**திங்கள் பங்களிப்புப் படிவம்**

| | |
|---|---|
| **பெயர்:** | |
| **ஊர் / முகவரி:** | |
| **தொலைபேசி / புலனம் எண்:** | |
| **மின்னஞ்சல் முகவரி:** | |
| **திங்கள் பங்களிப்பு:** | **ரூ.** |
| **திங்கள்தோறும் பங்களிப்பு நாள்:** | |
| **பங்களிப்பு வழி (நேரில்/ வைப்பகக் கணக்கு/ ஏனைய வழி)** | |
| **இயக்கத்திடம் உங்கள் எதிர்பார்ப்பு:** | |